பக்கங்கள்:25 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 22 ஞாயிற்றுக்கிழமை 06.03.2022 கதிர் 121

**இனி இது ரகசியம் அல்ல!**

தமிழர் அரசியலில் அண்மைக் காலத்தில் அதிகம் உலுப்பிய விடயம் 13ஆவது திருத்தம். அதையொட்டி இந்தியாவுக்கு பொது நிலைப்பட்ட கடிதம் ஒன்றை தமிழ்க் கட்சிகள் சார்பில் எழுத முற்பட்ட விடயம் அண்மைக் காலத்தில் ஏற்படுத்திய

2

# முழு ‘13’ஐயும் மாகாணத் தேர்தலையும் ஜெனிவாவில் வலியுறுத்தியது இந்தியா

## தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும்படியும் வற்புறுத்து



ஜெனிவா,மார்ச் 06

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் உள்ளடங்கலாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை முன்னெடுக்குமாறும், மாகாணசபைத் தேர்தல்களை விரைந்து நடத்துமாறும் ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தில் இலங்கையை வற்புறுத்தியுள்ளது இந்தியா.

ஜெனிவாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதியான தூதுவர் இந்திரமணி பாண்டே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நேற்றுமுன்தினம் இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

16

## மலையக மக்களுக்காகவும் எமது குரல் ஓங்கி ஒலிக்கும்

### மாத்தளையில் சாணக்கியன் எம்.பி. முழக்கம்



மலையக மக்களுக்காக 1949இல் இருந்தே இலங்கைத் தமிழரசுக் கட்சி குரல் கொடுத்து வந்துள்ளது. ஆயிரம் ரூபா பிரச்சினையைக்கூட நாமே சர்வதேச மயப்படுத்தினோம். எனவே, மலையக மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க நாம் தொடர்ந்தும் குரல் கொடுப்போம்.

5

## அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்படவேண்டும்

### இந்தியாவின் நிலைப்பாட்டை வரவேற்கின்றார் சுமந்திரன் எம்.பி.



இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஜெனிவா மாநாட்டில் இந்தியா வலியுறுத்தியுள்ளது. இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை – கருத்தை நாம் வரவேற்கின்றோம். நன்றிகளைத் தெரிவித்துக்

5

## அரசு முழுமையாகப் பதவி விலகி உடன் வீட்டுக்குச் செல்லவேண்டும்

### திஸ்ஸ எம்.பி. வலியுறுத்து



இரு அமைச்சர்களைப் பதவியிலிருந்து நீக்குவதால் மட்டும் இந்த நாட்டில் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. எனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு உடனடியாக முழுமையாகப் பதவி விலக வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய

2

## மஹிந்த – விமல் – கம்மன்பில – வாசு சந்திப்பு இறுதி நேரத்தில் ஒத்திவைப்பு



அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோருக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெறவிருந்த பேச்சு

2

## சீனக் கடன் உதவி இனிக் கிடையாது!

இலங்கைக்கு மேலும் கடன் வழங்குவதைத் தவிர்ப்பது குறித்து சீன அரசாங்கம் தீவிரமாக பரிசீலித்து வருவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. தற்போது கொழும்பில்

2

## தீர்மானம் எடுக்கும்போது ஒரு கணம் சிந்தியுங்கள்!

### கோட்டாவின் முடிவுக்கு தயாசிறி போர்க்கொடி

அவசரப்பட்டு முடிவுகளை எடுக்கக் கூடாது. முடிவு எடுக்கும்போது ஒரு கணமாவது சிந்திக்க வேண்டும். விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சரவையிலிருந்து நீக்கிய விடயத்தில் இந்தத் தவறு இழைக்கப்பட்டுள்ளது.

2

## பொறுப்புக்கூறலை அரசு பொருட்படுத்தவேயில்லை

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் பெரும் அதிருப்தி



பொறுப்புக்கூறலை முன்னெடுப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் தனக்குள்ள விருப்பத்தை வெளிப்படுத்தவில்லை எனத் தெரிவித்துள்ள ஐக்கியநாடுகள் மனித உரிமைகள்

2

## அருந்ததி ஏற்பாட்டில் யாழில் மாற்று மோதிரக் கண்காட்சி!



யாழ்ப்பாணம், மார்ச் 06

அருந்ததியின் மாற்று மோதிரம் நிகழ்வும், மணப்பெண் அலங்கார கண்காட்சியும் நான்காவது தடவையாக யாழ்ப்பாணம் செல்வா பலஸ் மண்டபத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடக சந்திப்பு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் இடம்பெற்றது.

2

## மாத்தளையில் அணிதிரண்ட மக்கள்



பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை நேற்று மாத்தளையிலும் முன்னெடுக்கப்பட்டது.

மாத்தளை முத்துமாரியம்மன் கோயிலுக்கு முன்னால் கண்டி பஸ் நிலையத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் சலசலப்பும், சர்ச்சையும் மறந்து விடக் கூடிவையல்ல.

இந்தச் சூழலில்தான் நேற்று முன் தினம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான விடயத்தில் இந்தியா தனது சுருக்கக் குறிப்பு உரையை வெளிப்படுத்தும் நிகழ்வு அரங்கேறியது.

தமிழர் தரப்பின் முக்கிய கட்சியினரும் விமர்சகர்களும் இந்தியாவின் கருத்தைக் கண்கொத்திப் பாம்பாகப் பார்த்திருக்கின்றனர்.

"பார்த்தீர்களா, பார்த்தீர்களா, நீங்கள் எல்லோரும் 13 பிளஸ், 13க்கு அப்பால் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கின்றீர்கள்... இந்தியா 13 பற்றியும் மாகாண சபைத் தேர்தல் பற்றியும்தானே பிரஸ்தாபித்திருக்கின்றது...? உங்கள் கடிதத்தில் உள்ளவற்றில் 13 நடைமுறையாக்கம் பற்றி மட்டும்தான் இந்தியா கவனம் எடுத்துள்ளது" – என்று போட்டுத் தாக்கப் பலரும் காத்திருந்தனர்.

ஆனால், தந்திரோபாயமான சொல்லாடலைக் கையாண்டு விடயத்தைக் கனகச்சிதமாக நகர்த்தி விட்டது இந்தியா.

திருவள்ளுவரின் திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள் பலர். ஒவ்வொருவரும் தங்கள் நிலைப்பாட்டுக்கும் பார்வைக்கும் ஏற்றவாறு திருவள்ளுவரின் கருத்தை அர்த்தம் பண்ணி கருத்துரைத்தனர்.

அப்படித்தான் – தமிழர் தரப்பில் தத்தம் நிலைப்பாட்டுக்கு ஏற்ப கருத்துரைக்கக் கூடிய விதத்தில் – வார்த்தை ஜாலம் காட்டியிருக்கின்றது இந்தியா.

முழுமையாக 13ஆவது திருத்தத்தின்நடைமுறையாக்கம்உள்ளடங்கலாக அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலை இந்த உரையில் வலியுறுத்தியிருக்கின்றது இந்தியா.

"13ஆவது திருத்த ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்தல் உள்ளடங்கலான அதிகாரப் பகிர்வு" என்றால் –

அதனை 13ஆவது திருத்தத்தை வலியுறுத்துவதாகக் கூறலாம். 13 பிளஸை வற்புறுத்துவதாகவும் அர்த்தம் பண்ணலாம். 13 உடன் சேர்ந்து, அதனையும் தாண்டி, சமஷ்டியை வலியுறுத்துவதாகவும் கூடக் காட்டலாம்.

ஒவ்வொரு கட்சியினரும் – தரப்பினரும் – தத்தமக்கு ஏற்றவாறு, தங்கள் தங்களின் விருப்பத்துக்கு ஏற்றவாறு, அர்த்தம் பண்ணக் கூடியதான வாசகங்களை இந்தியா பயன்படுத்தி, தமிழர் தரப்பு விமர்சகர்கள் தங்களுக்குள் மோதவும், மோதிக் கொள்ளாமல் இருக்கவும் கூட வழி பண்ணியிருக்கின்றது.

அதேசமயம், கொழும்புடன் அதிக தோழமையை – பரிவை – காட்டும் தற்போதைய புதுடில்லி ஆட்சிப்பீடம், தனது ஜெனிவாக் கருத்துரையால் கொழும்பைப் புண்படுத்தாமலும், பார்த்துக் கொண்டுள்ளது.

"முழுமையாக 13 உள்ளடங்கலாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு" – என்ற வாசகம் கொழும்பை சமாதானப்படுத்தி சமாளிக்கும் சொல்லாடலும் கூட.

இராஜதந்திர சொல்லாடலில் இவ்வளவு காத்திரமாக, முனைப்பாக, 'ஷார்ப்' ஆக, இருக்கும் புதுடில்லி, இலங்கை அரசைக் கையாளும் இராஜதந்திர விடயங்களில் மட்டும் 'ஷார்ப்' ஆக இல்லாமல் பெரும்பாலும் கோட்டை விட்டு விடுவது ஏன்? எனக்குப் புரியவில்லை.

வாசகர்களே, உங்களுக்குப் புரிகின்றதா?

– மின்னல் –

## அரசு முழுமையாகப் பதவி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மின்சார நெருக்கடியும் உருவாகியுள்ளது. மறுபுறத்தில் வாழ்க்கைச்சுமையும் அதிகரித்துள்ளது. நிர்வாகம் தோல்வி கண்டுள்ளது. எனவே, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்களை அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்குவதால் இப்பிரச்சினைகள் தீரப்போவதில்லை. அவ்வாறு தீர்ந்தால் அவர்கள் நீக்கப்பட்டமை சிறந்த முடிவாக அமையும்.

எனவே, முழுமையான அரசும் உடனடியாகப் பதவி விலகி வீட்டுக்குச் செல்ல வேண்டும். அப்போது தகுதியான தரப்பு நாட்டை ஆளக்கூடிய சூழ்நிலை உருவாகும் – என்றார்.

## மஹிந்த - விமல் - .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. எனினும், இறுதி நேரத்தில் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது.

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவிருந்தார்.

விமல், கம்மன்பில ஆகியோர் அமைச்சு பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர். வாசு தேவ நாணயக்கார நீக்கப்படாவிட்டாலும், அமைச்சுப் பதவியை முன்னெடுக்கப்போவதில்லை என அவர் அறிவித்துள்ளார்.

## சீனக் கடன் உதவி இனிக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் சீன அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவொன்று, அரசாங்கத்தின் சில உயர்மட்ட அதிகாரிகளுக்கு இந்தத் தீர்மானத்தை தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு காரணங்களுக்காக கொழும்பிற்கு கடன்கள் அல்லது உதவிகளை வழங்குவதிலிருந்து விலகியிருக்க பெய்ஜிங் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய நெடுஞ்சாலையின் மூன்றாம் கட்ட நிர்மாணப் பணிகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் முக்கிய சிக்கல்களில் ஒன்றாக கூறப்படுகிறது.

இரண்டாவது காரணம், சர்ச்சைக்குரிய சீன உரக் கப்பல் கொழும்பிற்கு வந்த பின்னர் அது மீளவும் திருப்பி அனுப்பப்பட்ட விவகாரம் எனக் கூறப்பட்டுள்ளது.

## தீர்மானம் எடுக்கும்போது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களுக்கான விசேட கூட்டம் நேற்று கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர்களை மாற்றுவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அவர் என்னையும் நீக்கலாம். அந்த அதிகாரத்தைச் சவாலுக்கு உட்படுத்த முடியாது.

எனினும், அமைச்சுப்பதவியிலிருந்து நபர்களை நீக்குவதால் நாட்டில் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோருக்காக நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம்.

11 பங்காளிக் கட்சிகளும் தொடர்ந்து இணைந்து செயற்படும் – என்றார்.

## பொறுப்புக்கூறலை அரசு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர் மிச்செலே பச்செலெட் அம்மையார் பொறுப்புக்கூறலை முன்னகர்த்துவதற்கு அவசியமான சர்வதேச மூலோபாயங்களை மனித உரிமை பேரவை முன்னெடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜெனீவாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான விவாதத்தின் போது தனது அறிக்கையை வெளியிட்டு உரையாற்றிய சமயம் அவர் இதனை கூறியுள்ளார்.

அதேவேளை தற்போதைய அரசாங்கம் பொறுப்புக்கூறல் தொடர்பில் தனது விருப்பமின்மையை வெளிப்படுத்தியுள்ளதுடன் யுத்த குற்றங்களில் ஈடுபட்டனர் என குற்றம்சாட்டப்பட்ட சிரேஷ்ட அதிகாரிகளை அரசாங்கத்திற்குள் உள்வாங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலை முடிவிற்கு கொண்டுவருவதற்கும் கடந்த கால மீறல்கள் மீண்டும் நிகழாமலிருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் அவசியமான ஆழமான நீதிஸ்தாபன மற்றும் பாதுகாப்பு துறை சீர்திருத்தங்களை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிவில் நிர்வாக பதவிகளிற்கு இராணுவ அதிகாரிகளை நியமிப்பது குறித்து நான் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளேன். இவர்களில் சிலர் மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளிற்கு உள்ளானவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

## மாத்தளையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் மக்கள் பலரும் கலந்துகொண்டு தத்தமது கையெழுத்துக்களைப் பதிவிட்டனர்.

## அருந்ததி ஏற்பாட்டில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது கருத்து தெரிவித்த அருந்ததியின் இயக்குநர் மேகலா –

திருமண மண்டபங்கள், திருமண ஆடைகள், மணப்பெண் அலங்காரம், மணப்பெண் அலங்கார பொருள்கள் மற்றும் புகைப்பட கலைஞர்கள் எனப் பலருக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவே மாற்று மோதிரக் கண்காட்சியின் நோக்கம் என்றார்.

மேலும் கொரோனா காரணமாக பாதிக்கப்பட்ட–செயலிழந்ததுறைகளுக்கு – புத்துயிரளிக்கும் வகையில் இந்த கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த கண்காட்சியில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் – என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் க.கருணாகரன், தினகரன் பத்திரிகை பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.



## அருந்ததியின் மாற்று மோதிரம் பிரமாண்டமான
# BRIDAL FASHION SHOW ! யாழ் மண்ணில்


2014 ஆம் ஆண்டு அருந்ததி தனியார் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை திருமண த்தோடு தொடர்புடைய பலதரப்பட்ட துறைகளில் காலடி பதித்து திருமணங்களில் தனக்கென்றவொறு தனியிட த்தைப் பிடித்துள்ளது. அசைக்கமுடியாத பலமான அஸ்திவாரத்தோடு புது புது விடயங்களை அறிமுகம் செய்து நவீன காலத்திற்கேற்றவவாறு தம்மை பதிவேற்றம் செய்துகொண்டிருக்கிறது.

அருந்ததியின் மாற்றுமோதிரம் என்றாலே எதிர்பார்ப்பு சற்று அதிகம் தான். காரணம் அழகுக்கலை நிபுணர்களை கௌரவிக்கும் அரங்காகவும் அவர்களின் திறமைக்கு அங்கீகாரம் வழங்கும் மேடையாகவும் அருந்ததியின் மாற்று மோதிரம் மணப்பெண் அலங்காரகாட்சி நிகழ்வு அமைகின்றது.

50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களுடன் இணைந்து பல்வேறு ஊடக, புகைப்பட, ஆடை அலங்கார மற்றும் Aari Work அனுசரணையாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறும். ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்தவொரு நிறுவனமும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை பல இடங்களிலும் நடாத்துவதே அருந்ததியின் குறிக்கோள்.

அந்த வகையில் 2022 கடந்த ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மிகப் பிரம்மாண்டமாக இம் மாற்றுமோதிரம் நிகழ்வு நடைபெற்றது. மாண்புமிகு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பாரியார் மற்றும் இலங் கையின் முதல் பெண்மணி சிரந்தி ராஜபக்ஷ அவர்கள் இவ் விழாவிற்கு சிறப்பு அதிதியாக வருகை தந்து சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சிறப்பு நிகழ்வானது ஒவ் வொரு மாவட்டத்திலுமுள்ள பெண் முயற்சியாளர்களை இந்த சமூதாயத்திற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாக மீண்டுமொரு மாற்று மோதிர நிகழ்வை நடாத்த அருந்ததி நிறுவனம் திட்டமி ட்டுள்ளது. அந்த வகையில் பலரின் நன்மதிப்பையும் நேர்மறையான கருத்துக்களையும் பெற்று வெற்றிப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கும் மணப்பெண் அலங்காரக் காட்சி மாற்றுமொரு பிரம்மாண்டத்தோடு எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாண செல்வா பெலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளின் வருகையோடு பல பிரதேசங்களில் இருந்தும் சிறப்பு தேர்ச்சி பெற்ற அழகுக்கலை நிபுணர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். எதிர்பார்ப்புகளோடு வரும் அனைவரையும் நிச்சயம் இந் நிகழ்வு திருப்திபடுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை..







**யாழில் நடைபெறவிருக்கும் பிரம்மாண்ட மணப்பெண் அலங்காரக் காட்சிக்காக எம்மோடு இணைந்திருங்கள்!**

**2022 மார்ச் 10 செல்வா பெலஸ்**

**திருமண மண்டபத்தில்**



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அடுத்துக் கெடுக்கும் அரசியல்

ஜனநாயகம் என்றால் என்ன?

'மக்களால், மக்களுக்காக, மக்களே நடத்தும் ஆட்சியே மக்களாட்சி அல்லது ஜனநாயகம்' என்று மக்களாட்சிக்கு வரைவிலக்கணம் கூறினார் ஐக்கிய அமெரிக்க குடியரசின் தலைவர் ஆபிரகாம் லிங்கன்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற பெயருடன் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சி நடத்தும் மொட்டுக் கட்சியின் வரைவிலக்கணம் என்ன? அது தெளிவானது.

'ராஜபக்ஷக்களால், ராஜபக்ஷக்களுக்காக, ராஜபக்ஷக்களே நடத்தும் கட்சிதான்' மொட்டுக்கட்சி.

அந்த உண்மை – நியாயம் – தெரியாமல் அந்தக் கூட்டில் அரசியல் பிழைப்பு நடத்த முற்பட்ட விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றோர் வாங்கிக் கட்டிக் கொண்டு வாயடைத்து வந்துள்ளனர்.

இந்த வரிசையில் அடுத்துப் பாடம் படிக்கக் காத்திருப்பவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் என்று தோன்றுகின்றது.

அவர்களில் பெரும்பாலானோர் 2014 கடைசியில் ஆதரவுக் காற்று, எதிர்ப்பக்கம் வீசத் தொடங்கியபோது, ராஜபக்ஷக்களைக் கைவிட்டு மறுபக்கம் நழுவியவர்கள்.

அதனால் தகுந்த சந்தர்ப்பம் வரும்போது, ராஜபக்ஷக்களால், ராஜபக்ஷக்களுக்காக, ராஜபக்ஷக்கள் நடத்தும் ஆட்சி இது என்பதை சம்பந்தப்பட்டோருக்கு வகையாக உணர்த்துவதற்கு ராஜபக்ஷக்கள் தரப்பு பின்நிற்காது என்பது திண்ணம்.

எது, எப்படி என்றாலும் தற்போதைய ஆட்சித் தரப்பு – அதிகார மையம் – மிக வேகமாக மக்கள் செல்வாக்கையும் ஆதரவுத் தளத்தையும் பறி கொடுத்து வருகின்றது என்பது கண்கூடு.

இச்சமயத்தில் ஆட்சித் தோல்வியை – நிர்வாகப் பின்னடைவை – ராஜபக்ஷக்கள் மீது மட்டும் முழுமையாக சுமத்தி விட்டு தாங்கள் தப்பிக் கொள்வதற்கு ஆளும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் துடியாய்த் துடிக்கின்றன என்பதும் உண்மைதான்.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றோர் விடயத்தைப் புரிந்து கொண்டு, ராஜபக்ஷக்களே தங்களைத் துரத்தியடிக்கக் கூடிய – கலைக்கக் கூடிய – வாய்ப்புகளை ஏற்படுத்தி, தந்திரோபாயமாக வெளியேறி விட்டனர்.

ராஜபக்ஷ ஆட்சியினால் இனி ஏற்படப் போகும் கெட்ட பெயரைத் தாங்களும் சேர்ந்து சுமக்க வேண்டியதில்லை என்ற திருப்தி அந்த மூன்று தலைவர்களினதும் (விமல், கம்பன்பில, வாசுதேவ) கட்சிகளுக்கு.

ஆனால், மொட்டுக் கட்சிக் கூட்டணியில் இரண்டாவது பெரிய கட்சியான சுதந்திரக் கட்சிக்குள் நிலைமை அப்படியல்ல.

சு.கவின் தலைவர் மைத்திரிபால சிறிசேன என்றாலும் –

செயலாளர் தயாசிறி ஜயசேகர என்றாலும் –

மூத்த அரசியல்வாதிகளான நிமால் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, துமிந்த திஸநாயக்கா போன்றோருக்கும் கட்சிக்குள் செல்வாக்கு உள்ளது.

கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அமைச்சர் பதவி எதையும் வழங்க ஜனாதிபதி கோட்டாபய, சு.கவின் பொதுச் செயலாளரான தயாசிறி ஜயசேகராவுக்கு வெறும் 'பற்றிக்' கைத்தொழில் என்ற இராஜாங்க அமைச்சை மட்டும் கொடுத்த ஜனாதிபதி கோட்டாபய, மற்றைய மூவருக்கும் (நிமால் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, துமிந்த திஸநாயக்கா ஆகிய மூவருக்கும்) முழு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவிகளை வழங்கி, சு.கவை 'அடுத்துக் கெடுக்கும்' விதத்தில் கையாண்டிருக்கின்றார். அதனால் ஆக 14 எம்.பிக்களைக் கொண்டு மெலிந்து, சுருண்டு கிடக்கும் சு.க., அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது எனத் தெரியாமல் அல்லாடப் போகின்றது என்பது நிச்சயம்.

# மனித உரிமைப் பேரவையை பொய்கூறி ஏமாற்றும் இலங்கை!

## சர்வதேச மன்னிப்புச் சபை சாடல்

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் செயற்திறனான முறையில் இயங்கிவருவதாக சர்வதேசத்துக்குக் காண்பிக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான அரசாங்கத்தின் பிரதிபலிப்பு, உண்மை நிலைவரத்துடன் ஒப்பிடுகையில் சர்வதேச சமூகத்துக்குக் கூறப்படும் விடயங்கள் பொய்யானவையென்றும் அச்சபை குற்றம்சாட்டியுள்ளன.

அனைத்து நடவடிக்கைகளும் சரியான முறையில் இடம்பெறுகின்றன என்பதை மனித உரிமைகள் பேரவைக்கும் ஏனைய உறுப்பு நாடுகளுக்கும் காண்பிக்க வேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் தெளிவாக இருக்கின்றது என்றும் அந்தச் சபை சாடியுள்ளது.

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னமும் நீதி வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து ஆவணப்படுத்தல் வடிவிலான அறிக்கையொன்றை சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ளது.

காணாமலாக்கப்படல் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களிடம் நடத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் முதலாம், இரண்டாம் கட்ட ஆய்வுகளின் மூலம் திரட்டப்பட்ட தகவல்களைக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிற்கு அடுத்ததாக உலகிலேயே அதிகளவான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவான இரண்டாவது நாடு இலங்கை என்றும் இதுவரை 6 ஆயிரத்து 259 வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும் இலங்கையில் கடந்த 1980 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தபட்சம் 60 ஆயிரம் அல்லது ஒரு லட்சம் வரையிலான வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருக்கக்கூடும் என்று தாம் மதிப்பிட்டுள்ளதாகவும் அந்தச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.



# தொன்மைவாய்ந்த சுற்றுலாத் தளங்களை பார்வையிட்டார் இராஜாங்க அமைச்சர்

மன்னார் மாவட்டத்தின் தொன்மை வாய்ந்த சுற்றுலாத் தலங்களாக காணப்படும் புராதன சின்னங்களை கொண்ட இடங்களைப் பார்வையிடும் நோக்கில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

தேசிய மரபுரிமைகள் அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மன்னார் மாவட்டத்தில் மன்னார், முசலி மற்றும் மடு பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள தொன்மை வாய்ந்த இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

மேற்படி இடங்களில் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு நடவடிக்கைகளையும் நேரில் அவதானித்தமையுடன் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கிலும், மன்னார் மாவட்ட பகுதியில் புராதன தேசிய மரபுரிமைகள் மற்றும் புராதன சின்னங்களைப் பார்வையிடும் வருகையாக இந்த விஜயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்பில் தீப்பந்த கவனவீர்ப்பு



நாட்டில் காணப்படும் மின்சாரத் தடை, எரிபொருள் தட்டுப்பாட்டைக் கண்டித்து தீப்பந்த கவனவீர்ப்பு நடவடிக்கை ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை இரவு முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சாரத் தடை மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டைக் கண்டித்து புதுக்குடியிருப்பு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் தீ பந்த கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் மு.லக்சிகன் தலைமையில் நடைபெற்ற கவனவீர்ப்பில் பொது மக்களும் கலந்துகொண்டு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் எரிபொருளை பெற்றுக் கொள்வதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக மின்சாரம் தொடர்ச்சியாகத் தடைப்பட்டு காணப்படும் நிலையில் வீடுகளில் விளக்கு எரிப்பதற்கு மண்ணெண்ணெயைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை, வாகன சாரதிகள் நாள் தோறும் தொழிலை மேற்கொள்ள டீசல் இல்லாத நிலை, உந்துருளி மற்றும் கார் வாகனங்களுக்கான பெற்றோல் தட்டுப்பாடு தொடர்ச்சியாக பல நாள்களாகக் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.



# பஸிலுடன் முரண்பாடுகள் எவையும் கிடையாதாம்!

## மத்திய வங்கி ஆளுநர் பதிலடி

நிதி அமைச்சருக்கும் தனக்கும் இடையில் முரண்பாடு எதுவும் இல்லை என்று மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும், மத்திய வங்கி ஆளுநருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது எனவும், மத்திய வங்கி ஆளுநரைச் சந்திப்பதற்குக்கூட நிதி அமைச்சர் நேரம் ஒதுக்குவதில்லை எனவும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் மத்திய வங்கியில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த ஆளுநர், 'அவ்வாறு எந்த விரிசலும் இல்லை. நாட்டுக்குத் தேவையான திட்டங்கள் உரிய வகையில் வகுக்கப்பட்டு வருகின்றன' – என்றார்.

## மலையக மக்களுக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று மாத்தளை நகரிலும் முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சாணக்கியன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரி வித்ததாவது:–

மாத்தளை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்தும், தமிழ் பேசும் நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவரை தெரிவு செய்ய முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இந்நிலைமை மாறவேண்டும். முற்போக்கான சிங்கள சகோதரர்களையும் இணைத்துக்கொண்டு இலக்கை நோக்கி நாம் நகர வேண்டும்.

மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதற்கு எமது கட்சி அன்று கடும் எதிர்ப்பை வெளியிட்டது. அதனால் தான் இலங்கைத் தமிழரசுக் கட்சி கூடத் தோற்றம் பெற்றது. எனவே, இப்பகுதிகளில் நாம் தேர்தல்களில் போட்டியிடா விட்டாலும்கூட, மலையக மக்களுக்காகக் குரல் கொடுத்து வந்துள்ளோம். ஆயிரம் ரூபா பிரச்சினையைக்கூட சர்வதேச மயப்படுத்தினோம்.

பொத்துவில் முதல் பொலிகண்டிவரை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் 10 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அதில் ஒன்று இந்த ஆயிரம் ரூபா சம்பள விவகாரம். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் 1000 ரூபா போதாது. 2000 ரூபா வழங்கப்பட்டாலும் சமாளிக்க முடியாத வகையிலேயே நாட்டில் விலைவாசி உள்ளது – என்றார்.

## அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கின்றோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கையில் அமுலில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை நேற்று மாத்தளை நகரிலும் முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி சட்டத்தரணியான எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என இந்த நாட்டில் உள்ள அனைத்து இன மக்களும் வலியுறுத்தி வருகின்றனர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலும் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டமூலம் எந்த விதத்திலும் போதாது எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொறுப்புக்கூறல் தொடர்பில் முன்னேற்றகரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்ற இலங்கை தொடர்பான கலந்துரையாடலில் பல நாடுகள் கருத்துக்களை முன்வைத்துள்ளன. இதனை நாம் வரவேற்கின்றோம்.

அதேபோல் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என இம் மாநாட்டில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டம் போதும் என இந்தியா ஏற்கவில்லை. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை அந்நாடு வலியுறுத்தியுள்ளது. இந்தியாவின் நிலைப்பாட்டை – கருத்தை நாம் வரவேற்கின்றோம். நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவம் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் – என்றார்.








மணமகள் விவரம்

பிறந்த திகதி - 09.10.1999 மதம் - இந்து
ஜாதி - P பகுதி நட்சத்திரம் - சித்திரை 1
கி.பா - 58 செவ் - 8 இல்
தகைமை - G.C.E.A/L தொழில் -
எதிர்பார்ப்பு - வெளிநாடு, உள்ளூர், அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 31.05.1987 மதம் - இந்து
ஜாதி -K பெண் நட்சத்திரம் - புனர்பூசம் 2
கி.பா - 21 செவ் 11 இல்
தகைமை - பட்டதாரி தொழில் - (DO) அரசசேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் மணமகன்

பிறந்த திகதி - 17.12.1993 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - திருவோணம்
கி.பா - 18 செவ் 5 சூரி 10 இல்
தகைமை - MBBS தொழில் - Australiya
எதிர்பார்ப்பு - Doctor, Eng. மணமகன்

பிறந்த திகதி - 08.09.1993 மதம் - இந்து
ஜாதி -V சைவம் நட்சத்திரம் - ரோகினி 5'8"
கி.பா - 20 செவ் 11 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன் தேவை (5'8"மேல்)

பிறந்த திகதி - 25.04.1988 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 69 செவ் 7 இல்
தகைமை - Bcom தொழில் - Post master
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 14.01.1997 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - பூரட்டாதி 4
கி.பா - 13 செவ் 11 இல்
தகைமை - கல்வியியல் கல்லூரி தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 14.06.1996 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - ரோகினி 1
கி.பா - 39 செவ்/ சூரி 8 இல்
தகைமை - BFA தொழில் - அரசசேவை
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 10.06.1990 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - பூராடம்
கி.பா - 29 செவ் 2 இல்
தகைமை - Engineering Draftsman தொழில் - அரசசேவை
எதிர்பார்ப்பு - வெளிநாடு + அரசசேவை தனியார் மணமகன்

மணமகன் விவரம்

பிறந்த திகதி - 24.05.1981 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் 3
கி.பா - 25 செவ் -2 இல்
தகைமை - Bsc, Msc தொழில் - UK, PR
எதிர்பார்ப்பு - UK or இலங்கை மணமகள்

பிறந்த திகதி - 13.08.1979 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 48 செவ் 5 இல்
தகைமை -Bsc, Msc தொழில் - UK மணமகள்
எதிர்பார்ப்பு - UK, PR மணமகள்

பிறந்த திகதி - 30.04.1992 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தரட்டாதி
கி.பா - 33 செவ் 2 இல்
தகைமை - Bsc Eng. தொழில் - விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி - 26.09.1983 மதம் - RC
ஜாதி -P ஆண் நட்சத்திரம் - பரணி
கி.பா - 63 செவ் 1 இல்
தகைமை - Bcom தொழில் - DO அரசசேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை RC மணமகள்

பிறந்த திகதி - 02.08.1987 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - 38 செவ் 1 சூரி 4 இல்
தகைமை - G.C.E. A/L தொழில் - Phone shop உரிமையாளர்
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள்

பிறந்த திகதி - 02.07.1980 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சதயம்
கி.பா - 18 செவ் 12 இல்
தகைமை - Commers - Bcom தொழில் - Accountant Assistant எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள்


பிறந்த திகதி - 01.10.1988 மதம் - இந்து
ஜாதி -K ஆண் நட்சத்திரம் - மிருகசீரிடம்
கி.பா - 62 செவ் 2 இல்
தகைமை - Eng. தொழில் - Company, Colombo
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்


பிறந்த திகதி - 15.11.1992 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - புனர்பூசம் 4
கி.பா - 38 செவ் 3 இல்
தகைமை - Bsc Eng. தொழில் - Australiya PR
எதிர்பார்ப்பு - Accountant மணமகள்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அனுவகைத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.











காலைக்கதிர் Kalaikkathir

## இந்த வாரம் இவர்

# ஸ்ரீதர் பிச்சையப்பா



ப்ரியமதா பயஸ்

இவர் ஏராளமான வானொலி, மேடை நாடகங்களில் நகைச்சுவைப் பாத்திரங்களில் தோன்றி நடித்ததுடன் பாடல்களை இயற்றுதல், பாடுதல், ஓவியம் வரைதல், மொழிபெயர்ப்புச் செய்தல் போன்றவற்றில் அதிக ஈடுபாடுகொண்ட கலைஞன் ஸ்ரீதர் பிச்சையப்பா.

இவர் 1963ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20 ஆம் திகதி பிறந்தவர் 2010ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் 20ஆம் திகதி மறைந்தார். கொழும்பைச் சேர்ந்த எழுத்தாளர், கலைஞர், நடிகர் ஸ்ரீதர் பிச்சையப்பா தன் வாழ்நாளில் உழைத்து தன் திறமையினால் முன்னிலைக்கு வந்தவர். இவர் சிறு வயதிலே தன் திறமைகளை பன்முகப்படுத்திக் கொண்டவர். அத்தோடு அழகான குரல் வளமும் கொண்டவர். ஸ்ரீதர் பிச்சையப்பா ஒரு சிறந்த பாடகர் , எழுத்தாளர், இயக்குநர் மற்றும் பாடலாசிரியரும் கூட. இவர் கலைத் துறையில் தனக்கென்று தனியான ஒரு முக்கிய இடத்தினை வைத்துக் கொண்டவர். இவர் இலங்கையின் ஒவ்வொருவரினதும் மனதில் பதிந்த சிறந்த கலைத்துறையினர்.

கு. ராமச்சந்திரனின் வானொலி நாடகத்தில் முதல் முதலில் நடித்தார். 1974 இல் கே. செல்வராசாவின் ‘உறவுகள்’ மேடைநாடகத்தில் நடித்தார். தொடர்ந்து சமூகசேவகி, எதிர்பாராதது போன்ற தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்தார். மேலும் பீ. ஏச். அப்துல் ஹமீத்தின் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியில் பாடகனாக அறிமுகமாகி இலங்கை வானொலியில் இடம் பிடித்தார். தொலைக்காட்சியில் இவர் பாடிய பாடல்களில் தனபாலன் இயற்றிய ‘ஓடை சலசலக்க’ என்னும் பாடல் மிகவும் பிரபல்யமானது.


இவர் பல்கலைத் தென்றல் என்ற சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டார். மிக அழகாக பாடும் திறமையைக்கொண்டவர் .இவர் ஒரு கவிஞராக, பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் தந்த கவிதைகள் மிகவும் பிரபல்யமானவை. மேலும் நகைச்சுவை உணர்வு கொண்டு பேசுவதிலும் திறமையானவர். இவர் தொலைக்காட்சித் தொடர்களில் சிங்களத் திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார். இவருடை பாடல்கள் மற்றும் கவிதைகள் சமூகம் சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்துவதாகவே இருந்தன.

அதே போல் ஓவியம் வரைவதிலும் திறமை கொண்டவர் இவர். நவீன ஓவியம் வரைவதில் கொழும்பு மாவட்டத்தில் அவர் முன்னோடியாகவே திகழ்ந்தார். கலைத்துறையில் முன்னணியில் நின்ற ஸ்ரீதர் பிச்சையப்பா கிழக்கு மாகாண கலை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டிருந்த போது குண்டு வெடிப்பில் சிக்கி ஒரு கண்ணை இழந்தார் என்பது குறிப்பிட்டு கூறவேண்டிய விடயம் . இவர் ஒரு பிரபலமான நாடகக் கலைஞர், பின்னணிப் பாடகர், பாடலாசிரியர், இயக்குநர், எழுத்தாளர், ‘மிமிக்ரி’, மற்றும் ஓவியம் எனப் பல கலைத் துறைகளில் ஈடுபட்டு, தன்னை முழுமையாகக் கலைத் தாய்க்கு அர்ப்பணித்தவர். பல்கலைத் தென்றல் என அழைக்கப்பட்டவர். நாடறிந்த நாடகக் கலைஞரான டி.வி. பிச்சையப்பாவின் மகனான ஸ்ரீதர் கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர். தமது சிறுவயதில் இலங்கை வானொலியில் சிறுவர் மலர் நிகழ்ச்சி மூலம் சிறுவர் நாடகங்களில் பிரபல்யமாகி பின்னர் பாடகராக கலையுலகிற்கு பிரவேசித்தார். நவீன ஒவியத்தை வரைவதில் கொழும்பு மாவட்டத்தில் அவர் முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளார். 1975ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இலங்கை வானொலியின் சிறுவர் நிகழ்ச்சியூடாக க.செல்வராஜன் அவர்களால் மேடை நடிகராக அறிமுகப்படுத்தப்பட்டார்.

‘உறவுகள்’ என்ற அந்த நாடகத்தின் மூலம் மேடை நடிகராக அங்கீகாரம் பெற்றபின் ஏராள மான மேடை நாடகங்களில் நடித்தார். அவற்றில் பிரபல நாடக இயக்குநர் சுஹைர் அமீட் அவர் களின் ‘தோட்டத்து ராணி பல்தீஸ் உம்மா’, லடீஸ் வீரமணியின் ‘ஊசியும் நூலும்’ போன்றவை சிறப் பாகப் பேசப்படும் நாடகங்களாகும். ஒரு சில மேடை நாடகங்களுக்கு இவர் உதவி இயக்குநராகவும் பணி யாற்றியிருக்கிறார்.

2010 ஆம் ஆண்டு இதேநாள் அதாவது பெப்ரவரி 20 ஆம் நாள் திடீர் சுகவீனம் காரணமாக ஸ்ரீதர் பிச்சையப்பா தனது 47ஆவது அகவையில் காலமானார் அவரது 12 ஆவது சிரார்த்த தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. இலங்கையின் கலை வரலாற்றில் என்றும் அழிக்கமுடியாத பெயராக ஸ்ரீதர் பிச்சையப்பாவின் பெயர் நிலைத்து நிற்கின்றது. காலம் கலைஞர்களை மிக விரைவாக உலகைவிட்டு அழைத்தாலும், அவர்களது கலைகள் அவர்கள் கலைத் துறைக்கு ஆற்றிய பணிகளை காலத்தாலும் அழித்து விடமுடியாது.

---




கனகா கணேஷ் - ஆஸ்திரேலியா

### முருகபூபதியின் ஏழாவது கதைத் தொகுதி

## புலம்பெயர் தமிழரின் வாழ்வுக்கோலங்களை சித்திரிக்கும் கதைத்தொகுப்பின் கதை

பிரபல எழுத்தாளரும் இலக்கிய செயற்பாட்டாளருமான முருகபூபதி ஈழத்து இலக்கிய உலகில் நான்காவது தலைமுறையைச் சேர்ந்தவர். படைப்பிலக்கிய வாதியாகவும் ஊடகவியலாளராகவும் இயங்கி வருபவர். சிறுகதைக்காகவும், நாவலுக்காகவும் இரண்டு தடவைகள் இலங்கையில் தேசிய சாகித்திய விருது பெற்றவர். அவரது ஏழாவது கதைத் தொகுதியான கதைத் தொகுப்பின் கதை யாழ்ப்பாணம் ஜீவநதி வெளியீடாக வரவாகியுள்ளது.

பதினைந்து சிறுகதைகளைக்கொண்ட இத்தொகுப்பின் ஒவ்வொரு கதையைப்பற்றியும் பதினைந்து தேர்ந்த வாசகர்கள், தங்கள் வாசிப்பு அனுபவத்தை இந்நூலில் பகிர்ந்துள்ளனர். அவர்கள் இலங்கை, ஆஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள். அதனாலும் இந்நூல் தனிச் சிறப்படைகிறது. கதைகளின் பாத்திர அமைப்பும் கதைகளை சுவாரஸ்யமாக சொல்லிய விதமும் ஆசிரியரின் நேர்த்தியான நடையில் அழகாக மிளிர்கின்றது.

ஈழம் மற்றும் புலம் பெயர் மக்களின் வாழ்க்கை, அந்நிய நாட்டில் அவர்களுக்கென அமைத்துக் கொண்ட கலாசாரம் மற்றும் சம்பிரதாய முறைகளை அடிப்படையாகக் கொண்ட இக்கதைத் தொகுப்பில் நாம் நிஜ வாழ்க்கையில் அன்றாடம் சந்திக்கும் பாத்திரங்களையே கதைகளின் நாயகர்களாக நினைவில் நிறுத்துகிறார் ஆசிரியர்.

புலம்பெயர் மக்கள் அந்நிய தேசங்களில் தங்களின் அடையாளங்களை தொலைத்து தங்கள் நடை உடை பாவனைகளில் கூட தங்களை அந்நிய தேசத்தவர்களாகவே இனம் காட்ட முயற்சிப்பதை மிக நாசூக்காக நகைச்சுவையாக சொல்லி இருக்கிறார்.

ஒவ்வொரு கதைக்கும் தேர்ந்தெடுத்த தலைப்புகள் கதையின் போக்கோடு ஒத்து போகின்றன.

தலைப்பினை ஒட்டிய சம்பவக் கோர்வைகளும் தொய்வின்றி கதை சொல்லிய விதமும் ஆசிரியருக்கே உண்டான தனிச் சிறப்பு.

கதைத் தொகுப்பின் கதையைக் கதையென்று மேலோட்டமாக படித்து விட்டு செல்ல முடியாதபடி, கதையின் நாயகி நம் மனதை விட்டு அகல மறுக்கிறார். தங்களது தனித் திறமைகளையும் கனவுகளையும் சமூக அமைப்புக்கு கட்டுப்பட்டு ஆழ் மனதுக்குள்ளேயே புதைத்து நடைப் பிணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் எத்தனையோ சுந்தரி டீச்சர்களை நம்மில் கிளர்ந்தெழச் செய்கிறது ஆசிரியரின் அந்தப் பாத்திர படைப்பு.

கணங்கள் சிறுகதை புலம்பெயர் புகலிடச் சிறுகதை நூல் முகங்கள் தொகுப்பில் இடம் பெற்றிருப்பதோடு சிங்கள மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டது.

இக்கதை ஈழத்து வாழ்வு வெளியிலிருந்து புலம் பெயர்ந்து ஆஸ்திரேலிய மண்ணில் வாழும் தமிழ் – சிங்கள இனத்தாரின் பாதிப்பை அவர்களது வாழ்வில் நேர்ந்த துயர சம்பவங்களை மாறுபட்ட கோணத்தில் சொல்வதாக அமைந்துள்ளது.

போருக்கு பின்னரான இன்றைய நிலையிலாவது தமிழ் – சிங்கள சமூகம் புரிந்துகொள்ள வேண்டிய அன்பின் வழியான இன ஐக்கியம் முக்கியம் என்பது மெல்லிய நூலாக கதையில் இழையோடுவதைக் காண முடிகிறது.

தினம் சிறுகதை, இலங்கை தினக்குரல், ஆஸ்திரேலியா உதயம், தேனீ மற்றும் தமிழ் முரசு இணையம் ஆகியவற்றில் முன்னரே வெளியாகி உள்ளது.

இறுதி யாத்திரைக்கு தயாராகிக் கொண்டிருக்கும் பூதவுடலை விட்டு பிரிந்த உயிர், கதை சொல்வதாக வித்தியாசமாக நகரும் இப்படைப்பு, நம் மனதில் தங்கி விடுகின்றது. ஈழப் போரில் ஏற்பட்ட இழப்புகளின் வேதனைகளையும் வலிகளையும் இறந்த உடலின் ஆன்மா ஊடாகவும், புலம் பெயர் நாடுகளில் தேசியம் பேசிபேசியே தங்களை வளப்படுத்திக் கொள்ளும் சிலரது போலி முகங்களையும் ஆசிரியர் நறுக்குத் தெறித்தாற் போல் சொல்லி இருக்கிறார். இக்கதையை வாசித்து முடித்த போது, நகர்த்த முடியாத பாறாங்கல்லை யாரோ நம் மனதில் தூக்கி வைத்ததைப் போல கனத்துப் போகின்றது..

இரு தலைமுறைகளைச் சார்ந்தவர்களுக்கிடையேயான முரண்பாடுகள் மற்றும் பெண்கள் மீதான ஆண்களின் வன்முறை பற்றி அவள் அப்படித்தான், கொரோனா பெருந்தொற்று காலத்தில் நேர்ந்த வாழ்க்கை முறை மாற்றங்கள் பற்றி கொரோன கால உறவுகள் சித்திரிக்கிறது.

நடையில் வந்த பிரமை சிறுகதை இன, மொழி, மத வேறுபாடுகளுக்கு அப்பால் சக மனிதர்களோடு மலரும் நட்பை எலிசபெத் என்ற அமானுஷ்ய சக்தியின் ஊடாக வித்தியாசமாக சொல்லி இருப்பதன் மூலம் தன்னை ஒரு பண்பட்ட எழுத்தாளராக பரிணமிக்க வைத்துள்ளார் கதாசிரியர்.

இன்றைய யாழ்ப்பாண சமூகத்தில் ஏற்பட்டுள்ள வாழ்வியல் மாற்றங்களை, சமுதாய சீரழிவுகளை, சமூக வலைத்தளங்களின் அதீத பயன்பாட்டால் ஆண் – பெண் இடையே கிளம்பும் பிரச்சினைகளையும் நேர்காணல் சிறுகதையின் மூலம் நயம்பட சொல்லி இருக்கிறார்.

புலம் பெயர் நாட்டில் தங்களது சொந்த நாட்டு பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் பண்பாடுகளை வசதிக்கேற்றவாறு மாற்றிக் கொண்டவர்களின் போலி முகங்களை உரித்துக்காட்டும் காத்தவராயன் கதை, நாம் வழக்கமாகப்பேசும் சர்வதேச அரசியலை கடி செய்கிறது. ஏனைய கதைகளான எங்கோ... யாரோ... யாருக்காகவோ, அம்மம்மாவின் காதல், எங்கள் ஊர் கோவூர், பார்வை, ஏலம், காதலும் கடந்து போகும், தாத்தாவும் பேத்தியும் முதலான கதைகளில் தனக்கே உரித்தான பாணியில் சமூக யதார்த்தங்களை, தனிமனித உணர்வுகளை சராசரி வாழ்வோட்டங்களை எளிமையாகவும் அழகாக வெளிப்படுத்தி உள்ளார் முருகபூபதி.



# மருத்துவக் கதிர்



## சளித் தொல்லையில் இருந்து விடுபட சில ஆலோசனைகள்

மூக்கடைப்பு, சைனஸ், தும்மல்,நெஞ்சுச் சளி போன்ற நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களிற்கு துளசி, மஞ்சள், இஞ்சி, தேன், ஓமம், நீலகிரி கற்பூரத்தைலம் (Eucalyptus), கற்பூரவள்ளி இலைகள், நொச்சி இலைகள் ஆகியன சிறந்த மருந்துகளாகும்.

கொரோனா ஏற்படும் போது மணத்தை மூளையால் உணர முடியாமல் இருக்கும் மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடையும்.

துளசி இலைகள் நாகத்தை (Zinc) அதிகளவில் கொண்டுள்ள மூலிகையாகும்.நாகமானது மூளை யால் மணத்தை உணரும் செயற்பாட்டைத் தூண்டக் கூடியது. கொரோனா ஏற்படும் போது துளசி இலை களை தண்ணீரில் போட்டு ஆவி பிடித்து வர வேண்டும். இதனால் மூக்கடைப்பு, சளி என்பன குணமாகும்.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகும் போது தினமும் 2 துளசி இலைகளை சாப்பிட்டு வர நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

அரை டம்ளர் பாலினை 4 துளசி இலை கள்,1 ஏலக்காய்,வெல்லம் சேர்த்து கால் டம்ளர் ஆகும் வரை காய்ச்சி குடித்துவர நுரையீரல் பலம் பெறும், யூரிக் அமிலம் (uric acid) குறைவடையும்,கீழ்வாத நோய் (Gout) வரமால் தடுக்கலாம் துளசியை தினமும் சாப்பிட்டுவர சிறுநீரக கற்கள் வரா மல் தடுக்கலாம்.



மஞ்சள் ஆனது ஒரு சிறந்த தொற்று நீக் கியாகும். புதினா ஒரு கைப்பிடி, அரை தேசிக் காய் ஆகியவற்றை 2 லீற்றர் தண்ணீரில் கலந்து குடிக்க செரிமானப் பிரச்சினை தீரும். புதினா இலைகளை இஞ்சி,மிளகு, தேன் சேர்த்து துவையல் செய்து சாப்பிட்டு வர செரிமானப் பிரச்சினைகள் தீரும்.

புதினாவில் மெந்தோல் உண்டு. புதினாவை நீரில் சேர்த்து ஆவி பிடிக்கும் போது சுவாசத்தை இலகுவாக்குகின்றது. மஞ்சள் ஒரு சிறந்த கிருமி நாசினியாகும். மஞ்சளை தண்ணீரில் போட்டு ஆவிபிடித்து வர இருமல், சளி குணமடையும். ஓமம் ஆனது செரிமானப் பிரச்சினை, உணவு நஞ்சாதல் ஆகியவற்றையும் ஆஸ்துமாவையும் குணப் படுத்தும்.

இருமல் மருந்துக்களை விட ஓமத்தண்ணீர் ஒரு தேக்கரண்டி குடிக்க 30 – 180 நிமிடங்களில் இருமல் குணமாவதை பரிசோதனை முடிவுகள் உறுதிப்படுத்து கின்றன.

கற்பூரவள்ளி இலைகள் சிறந்த நுண்ணுயிர்க்கொல் லியாகும்.கற்பூரவள்ளி இலைகளிலுள்ள தைமோல், கார்வோகரோல் ஆகியன சளியை வெளியேற்ற உத வும். மோர், தோசை, இட்லி என்பவற்றிலுள்ள நல்ல பற்றீரியாக்களின் வளர்ச்சிக்கு துணை புரியும். சாப்பிட்ட உடனேயே மலம் கழிப்பது போன்ற பிரச்சினைகளை குணப்படுத்தும் ஆற்றல் கற்பூரவள்ளி இலைகளுக்கு உண்டு.

கற்பூரவள்ளி இலைகளை எண்ணெயில் போட்டுக் காய்ச்சி நெற்றி, நெஞ்சில் பூசிவர சளி குணப்படும். கற்பூரவள்ளி இலைகளை தண்ணீரில் போட்டு ஆவி பிடிக்க தலைவலி,மூக்கடைப்பு,சளி குணமாகும்.நீரி ழிவு நோயாளர்கள் காலில் ஏற்படும் புண்களை குணப் படுத்த கற்பூரவள்ளி இலைகளை அரைத்து புண்களில் பூசி வர புண்கள் சீக் கிரம் ஆறும்.



டாக்டர் ஆஷா லெனின்
தமிழ்நாடு, இந்தியா

நீலகிரி கற்பூரத்தைலம் ஆனது நுரை யீரலிலுள்ள சளியை இழக்க உதவும். நொச்சி இலைகளை தலையணைக ளுக்கு கீழ் வைத்துவிட்டு உறங்கும் போது தலைவலி குணமாகும். பாலில் மஞ்சள் தூள், மிளகு சேர்த்துக் குடித்துவர சளி, இருமல் குணமாகும்.

மஞ்சளிலுள்ள கேர்க்குமினாவை (curcmina) உறிஞ்ச மிளகு உதவும். மிளகிலுள்ள பைபரின் (Piperine) இருமலை குணப்படுத்தக் கூடி யது. மிளகு குடல்புற்று நோய், மார்பகப்புற்றுநோய் ஆகியவற்றைக் கூட குணப்படுத்தக் கூடியது.



## எடை அதிகரிக்க என்ன செய்யலாம்?

சக்கரைச்சத்து அதிகமுள்ள உணவுகளையும், கொலஸ்ட்ரோல் அதிகமுள்ள உணவுகளையும் தவிர்க்க வேண்டும். புரதச் சத்து நிறைந்த உணவு களை நிறைய எடுத்துக் கொள்ளலாம். குறிப்பாக முட்டையின் வெள்ளைக்கரு மிகவும் நல்லது. மஞ் சள் கருவில் கொழுப்புச்சத்து நிறைந்துள்ளதால் அதைத் தவிர்க்க வேண்டும்.

பழங்களில் வாழைப்பழம் மிகவும் நல்லது. பருப்புகளில் பாதாம், வால்நட்ஸ் போன்றவை சிறந் தவை. திராட்சை, பேரீச்சம்பழம் சாப்பிடுவது ஊட்டச் சத்துக் குறைபாடுகளைச் சரிசெய்ய உதவும்.

சிலர் அதிகமாக வேலை செய்வார்கள். ஆனால் உணவில் குறைவான கலோரிகளே இருக்கும். தேவையான ஆற்றல் கிடைக்காததால், எடை குறைந் திருக்கும். எனவே, உழைப்புக்கு ஈடான கலோரியை உட்கொள்கிறோமா என்பதில் கவனம் தேவை.

கொழுப்புச்சத்து குறைவான பால் அருந்தலாம். வாரத்திற்கு மூன்று முறை மீன் சாப்பிடலாம். ஊட் டச்சத்து நிபுணரின் பரிந்துரையோடு புரதச் சத்து நிறைந்த பானங்களை அருந்தலாம்.

உழைப்பு குறைவாக இருந்தால் உடல் எடை அதிகரிக்கும் என்ற எண்ணமும் தவறு. தினமும் உடற்பயிற்சி செய்யவேண்டியது அவசியம். வாய்ப் பிருந்தால் தினமும் ஜிம் சென்று பயிற்சிகள் செய் யுங்கள்.

## ஆஸ்துமா உள்ளவர்களுக்கு மூச்சுப்பயிற்சி

பொதுவாக இருமல், சளி, ஆஸ்துமா உள்ள வர்களுக்கு மூச்சு உள்ளெடுத்தல் கடினமாக இருக்கும். கொரோனா ஏற்பட்டவர்களுக்கு பெரும்பாலும் மூச்சுவிடுவது கடினமாக இருக் கும்.

நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய், நீண்டகால புகைப்பிடித்தல், தூசு ஆகியவற் றினால் ஏற்படுகின்றது. படுக்கும் போதும், மாடிப்படிகளில் ஏறும் போதும், கதைக்கும் போதும் மற்றும் நடக்கும் போதும் சுவாசிக்கக் கடினமாக இருப்பதைப் போன்று உணரந்தால் பிரிமென்தகடுத் தசை சுருங்கித் தளர்வடைய சிரமம் ஏற்படுகின்றமையே காரணம் ஆகும்.

பிரிமென்றகடுத் தசை என்பது நெஞ்சறை யையும், வயிற்றையும் பிரிக்கின்ற தசை யாகும். மூச்சு உள்ளெடுத்தலின் போது பிரி மென்தகடு கீழ் நோக்கி அசையும், வயிறு முன் நோக்கித் தள்ளப்படும். மூச்சு வெளிவிடுத லின் போது பிரிமென்தகடு மேல் நோக்கி அசையும், வயிறு உள் நோக்கி இழுக்கப்படும். சுவாசப் பைக்குளிருக்கும் காபனீர் ஒக்சைட்டை வெளியேற்றினால் மட்டுமே வெளியிலிருக்கும் ஒட்சிசனை உள்ளே எடுக்க முடியும். சிறுநீரக செயலிழப்பு, ஈரல் செயலிழப்பு உள்ளவர்க ளுக்கு பிரிமென்தகடு தட்டையாகவே இருக்கும்.

ஈரலில் கொழுப்புப் படிதல் (Fatty acid liver), வயிற்றில் அமிலங்களால் ஏற்படும் பிரச்சினைகள் உள்ள நோயாளர்களிற்கு சாப்பிட்டவுடன் வயிறு வீங்கியது போன்று இருக்கும்.

இதனால் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும். நுரையீரலில் நீர் (Pleural effusion) காணப் படுவதினாலும் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும். சுவாசிக்க சிரமப்படுபவர்கள் சுடுதண்ணீரில் சிறிதளவு பெருங்காயம் சேர்த்து குடித்து வர சுவாசம் சீராகும்.

ஒரு நாளில் 10 சிகரெட் பிடிப்பவர்களிற்கும் தொடர்ந்து 6 மணி நேரம் ஒரே இடத்திலிருந்து வேலை பார்பவர்களிற்கும் ஒரே மாதிரியான இதய நோய்கள் வர சாத்தியமுண்டு.

ஏனெனில் ஒரே இடத்திலிருந்து வேலை பார்ப்பவர்களிற்கு இதயம் சுருங்கும் போது வெளியேறிய குருதி, கெண்டைத்தசையின் (cough muscle) தொழிற்பாடு குறைவடைந்து மீண்டும் கால்களில் இருந்து திரும்பிச் செல் லாமல் அங்கயே தேங்குவதே காரணமாகும்.

இதனால் மாரடைப்புக் கூட ஏற்படலாம். தாழ் குருதியமுக்கம் உள்ளவர்கள் சுவாசிக்க சிரமப்படுபவர்கள் தொடர்ந்து ஜொக்கிங் (Jogging), மிதிவண்டி ஓடுதல், நடத்தல் போன்ற பயிற்சிகள் மூலம் கெண்டைச் சதை யின் தொழிற்பாட்டை அதிகரித்து சாதாரண இரத்த அழுத்தத்தை பேணல் வேண்டும்.

நாம் தினமும் சிறிது நேரம் மூச்சுப் பயிற்சி செய்து வர சுவாசம் சீராகும். தினமும் 4 நொடி களில் மூச்சை உள்ளே இழுத்து 7 நொடிக ளுக்கு மூச்சை உள்ளே நிறுத்தி 8 நொடிகளில் ஆறுதலாக வெளிவிட வேண்டும். இப் பயிற்சி நன்றாக தூங்கவும் உதவும். சளி, இருமல் இல்லாமல் சுவாசிக்கச் சிரமமாக இருந்தால் சுவாச நுட்பம் (Diaphragmatic breathing technique) செய்து வர வேண்டும். அதா வது தலையணைகளைக்கொண்டு தலை,கால்களை உயர்த்தி வைத்து நெஞ்சுப் பகுதிக்குக் கீழ் கையை வைத்து மூச்சை நன்றாக உள்ளே இழுத்து சிறிது நேரம் உள்ளே நிறுத்தி வெளியே விட வேண்டும்.

நாம் ஆரம்பத்தில் காற்றை உள்ளே நிறுத்தி வைக்க முடியாவிட்டால் சுவாசத்தை உள் ளெடுக்க,வெளிவிட மட்டுமே செய்யலாம். 2 நொடிகளுக்கு காற்றை மூக்கினால் உள் ளெடுத்து 5 – 6 நொடிகளுக்கு வாயினால் வெளிவிடுதல் போன்ற (Pursed lip breathing) பயிற்சியினையும் செய்வது சுவாசத்தை சீராக வைத்திருக்க உதவும்.




டாக்டர் ஆஷா லெனின்
தமிழ்நாடு, இந்தியா

# RADIANT DAWN
A Sunday Supplement in English to Kalaikkathir

Page 1 Sunday the 06th of March 2022

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

## Read the text about Chloe and answer the questions.





Hello! My name is Chloe. I am 9 years old and I'm from Sydney, Australia.


For lunch, I like chicken with potatoes, onions and peppers. I don't like tuna or tomatoes, but I really like fruit: oranges, bananas, apples, pears, melon, strawberries and mango. My favourite fruit is pineapple! Peter is my dad. He likes eggs and sausages, but he doesn't like tuna.

My mum is Alice. She doesn't like milk, but she loves eggs and cheese! My sister Sarah likes cheese, sausages, ham and bacon, and her favourite fruit is pineapple too!

1. What's her name? ..................................................
2. How old is she? ..................................................
3. Where is she from? ..................................................
4. Does she like tomatoe ? ..................................................
5. Do you like tomatoes ? ..................................................
6. Does she like chicken? ..................................................
7. Does she like fruit? ..................................................
8. Does Peter like sausages? ..................................................
9. Does Alice like milk? ..................................................
10. Does Sarah like ham? ..................................................
11. Do Peter and Chloe like tuna? ..................................................
12. Do Alice and Sarah like cheese? ..................................................
13. Do Chloe and Sarah like pineapple? ..................................................
14. Do you like pineapple? ..................................................







## *Kate and Bob's big adventure*

Kate and her cousin, Bob, are going on holiday to an adventure camp.

They love adventure sports. So when they arrive, they feel very excited because it's a really beautiful place where they can do lots of different sports. On Monday, they ride mountain bikes. "Wow, this is great!" says Bob. "You can ride very well" says Kate. On Tuesday, they go rock climbing "You can climb very fast Bob, but I can't!" says Kate. On Wednesday, they go rafting. Bob is a bit scared because he can't swim very well but Kate can. "Come on Bob, this is fantastic!" says Kate.

On Thursday they go surfing. Kate can do a lot of surfing tricks. "Look at me! I'm a great surfer, I love it!" says Kate. "Congratulations Kate, you can surf very well" says Bob. On Friday, they go parachuting. They jump and fall through the air. "I feel like I can fly", says Bob, but Kate doesn't answer, because she is a bit scared. Kate and Bob had an amazing week, but now they are ready to go home and rest for the rest of the weekend.

1. Kate and Bob love adventure sports. T / F
2. In the adventure camp they can sing and dance. T / F
3. Kate and Bob can ride bikes. T / F
4. Kate can climb fast. T / F
5. Kate can swim very well. T / F
6. Bob and Kate go surfing. T / F
7. They go parachuting on Friday. T / F
8. Kate says "I feel I can fly". T / F
9. Kate and Bob had a fantastic time in the adventure camp. T / F
10. Kate and Bob go to school after the adventure camp. T / F



## RELATIVE ADVERBS : WHEN - WHERE - WHY



**When :** It refers to a time expression.It means "in/on which".
It was the day **when** I had an accident.



**Where :** It refers to a place.It means "in/at which".
That was the building **where** we held the meeting.



**Why :** It refers to a reason.It means "for which".
A severe hurricane was the reason **why** some houses were damaged.


**A.** Match the sentences below

1. The scientists will search the reasons (.......)
2. I was the happiest man in the world (.......)
3. This is the best restaurant in the town (.......)
4. It was the most difficult day for me (.......)
5. Samuel really doesn't know a book shop (.......)
6. His parents want to know (.......)
7. He is looking for a nice hotel (.......)
8. The firemen are trying to find (.......)

a. where you can taste traditional dishes.
b. when I had a surgical operation last summer.
c. why people catch the flu so easily
d. where he can stay for two weeks.
e. when I had a baby girl two years ago.
f. why the house burnt down so quickly.
g. where he can find a book about pyramids.
h. why he failed in the Science exam.

Focus on your goal. Don't look in any diraction but ahead.

# STATES OF MATTER




**States of matter can be more than just your average solids, liquids and gases!**

When water turns into snow, is it still water? The answer is yes! Our world is filled with solids, liquids, gases and even other matter that can go from one state of matter to another without changing its chemical substance. In this lesson, students explore these different states of matter and their interactions.

A "state of matter" is a way to describe the behaviour of atoms and molecules in a substance.

**There are three common states of matter:**

**Solids –** relatively rigid, definite volume and shape. In a solid, the atoms and molecules are attached to each other. They vibrate in place but don't move around.

**Liquids –** definite volume but able to change shape by flowing. In a liquid, the atoms and molecules are loosely bonded. They move around but stay close together.

**Gases –** no definite volume or shape. The atoms and molecules move freely and spread apart from one another.

Plasma is sometimes referred to as a fourth state of matter. While it's similar to a gas the electrons are free in a cloud rather than attached to individual atoms. This means that a plasma has very different properties from those of an ordinary gas. Plasmas occur naturally in flames, lightning and auroras.

Other, more exotic states of matter can occur at extremely high energy levels or at extremely low temperatures, where atoms and molecules (or their components) arrange in unusual ways. Scientists also sometimes distinguish between crystalline solids (where the atoms and molecules are lined up in a regular pattern) and glassy solids (where the atoms and molecules are attached in a random fashion).

**Each of these states is also known as a phase.**

Elements and compounds can move from one phase to another phase if energy is added or taken away. The state of matter can change when the temperature changes. Generally, as the temperature rises, matter moves to a more active state.

The word phase describes a physical state of matter, when a substance moves from phase to phase, it's still the same substance.

For example, water vapour (gas) can condense and become a drop of water. If you put that drop in the freezer, it would become a solid. No matter what phase it is in, it is always water — two atoms of hydrogen attached to one atom of oxygen (H20).

# Metals and Non-metals



## Physical Properties

**Metals –** Metals have some properties which distinguish them from other materials like they are hard, lustrous, malleable, ductile, sonorous and good conductors of heat and electricity. Examples of metals are iron, copper, aluminium, calcium, magnesium, etc.

**Non – metals –** Non- metals like coal and sulphur are soft and dull in appearance. They are not sonorous and are poor conductors of heat and electricity. Examples of non-metals are sulphur, carbon, oxygen, phosphorus, etc

**Malleability –** The property by which they can be beaten into thin sheets is a characteristic property of metals and is called malleability.

**Ductility –** The property of metals by which they can be drawn into wires is called ductility.

**Lustrous –** The shine on the surface of metals is called lustre so we know that metals are lustrous.

**Sonority –** Metals produce ringing sounds and are said to be sonorous. Non – metals are not sonorous.

**Conductivity –** Metal things like an iron rod, nail and copper wire are good conductors of heat and electricity while rolled sulphur piece and coal piece are poor conductors being non – metals.

**Some exceptions –** Metals like sodium and potassium are soft and can be cut with a knife. Mercury is the only metal that is found in a liquid state at room temperature.a

## Chemical Properties

**Reaction with Oxygen –** Iron rusts in the presence of oxygen or being exposed to moist air, magnesium similarly reacts to oxygen by burning. In both cases oxide formation takes place. Copper vessels when exposed to moist air for long acquire a dull green coating of copper hydroxide and copper carbonate represented by the formula 2Cu+H2O+CO2 +O2→Cu (OH)2 + CuCO3. So we find that burning metals react with oxygen to produce metal oxides which are basic in nature.

Sulphur's reaction with oxygen makes sulphur dioxide gas. When sulphur dioxide is dissolved in water sulphurous acid is formed by the formula – Sulphur dioxide (SO2 ) + Water (H2O) → Sulphurous acid (H2SO3 ) Oxides of non-metals are acidic in nature generally.

**Reaction with Water –** Sodium metal is very reactive and when it reacts with oxygen and water a lot of heat is generated in the reaction. It is therefore generally stored in kerosene to prevent this mishap. Some other metals like iron react with water slowly and do not have such immediate reactions. Some metals react with water to produce metal hydroxides and hydrogen gas.

Non-metals usually do not react with water though they may be very reactive in the air such non-metals are stored in water. For example, phosphorus catches fire if exposed to air. To prevent the contact of phosphorus with atmospheric oxygen, it is stored in water since it is a very reactive metal.

**Reactions with Acids –** Non-metals generally do not react with acids but metals react with acids and produce hydrogen gas that burns with a pop sound. Copper does not react with dilute hydrochloric acid even on heating but it reacts with sulphuric acid easily. Metals react with acids to produce metal salts and hydrogen gas.

**Reactions with Bases –** As before the pop sound indicates the presence of hydrogen gas and metals react with sodium hydroxide to produce hydrogen gas. Reactions of non-metals with bases are way more complex.  So we find that some metals react with bases to produce hydrogen gas.

**Displacement Reactions –** One metal displaces another metal from its compound in aqueous solutions.  Zinc replaces copper from copper sulphate and that's why the blue color of copper sulphate disappears and a powdery red mass of copper is deposited at the bottom of the beaker.

It can be represented by this formula to make it easy for you to understand – Copper Sulphate (CuSO4) + Zinc (Zn) (Blue) → Zinc Sulphate (ZnSO4) + Copper (Cu) (Colourless) (Red). Zinc can replace copper but copper cannot replace zinc because a more reactive metal can replace a less reactive metal but a less reactive one cannot replace a more reactive metal. This is a rule that applies in these reactions since zinc is more reactive it can displace copper but vice versa cannot happen.



குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்




# நெய் டப்பாவும் பொற்காசும்



ஒருநாள், அக்பரின் அனுமதியுடன் தர்பாருக்கு வந்த மதுசூதன் என்ற வியாபாரி அவரை வணங்கியபின், பிரபு, என் பெயர் மதுசூதன். நான் ஒரு நெய் வியாபாரி! ஒரு மாதத்திற்கு முன் அஸ்லாம்கான் எனும் என் நண்பன் என்னிடம் வந்து 20 ரூபாய் கடன் கேட்டான். பதினைந்து நாள்களுக்குள் திருப்பித் தருவதாகச் சொன்னவன் இதுவரை அதைத் திருப்பித் தரவேயில்லை என்றார்.

நீ கொடுத்த கடனுக்கு அவனிடம் இருந்து பத்திரத்தில் கையெழுத்து வாங்கியிருக்கிறாயா? என்று அக்பர் கேட்டார். அஸ்லாம்கானை எனக்கு இருபது வருடங்களாகத் தெரியும். அதனால் கடன் பத்திரத்தில் கையெழுத்து வாங்கவில்லை. ஆனால் நான் சொல்வது உண்மை! என்றார். உடனே அக்பர், பீர்பால்! இந்த வழக்கை நீ கவனிக்கிறாயா? என்று கேட்டார்.

அதற்குச் பீர்பால் சம்மதித்தார். பீர்பால் அஸ்லாம் கானைத் தன்னை சந்திக்கும்படி தகவல் அனுப்பினார். சற்று நேரத்தில் அஸ்லாம்கான் பீர்பாலைத் தேடி வந்தார். நான் தான் அஸ்லாம்கான்! என்னை வரச் சொன்னீர்களாமே! என்றார். உங்கள் மீது ஒருவர் புகார் கொடுத்திருக்கிறார். அதைப்பற்றி உங்களை விசாரிக்க வேண்டும் என்றார் பீர்பால். என் மீது புகாரா? என் மீது புகார் வர வாய்ப்பு இல்லையே! என்றான் அஸ்லாம். மதுசூதன் அவர் மீது தொடுத்து உள்ள வழக்கைப் பற்றி பீர்பால் விவரித்ததும், நான் ஏன் அவரிடம் இருந்து கடன் வாங்க வேண்டும்? எனக்கு ஏராளமாக சொத்து இருக்கிறது. நெய் வியாபாரத்தில் நல்ல லாபமும் சம்பாதிக்கிறேன். மதுசூதன் என் மீது வீணாகப் பழி சுமத்துகிறான் என்றான் அஸ்லாம்.

உடனே பேச்சை மாற்றிய பீர்பால், அஸ்லாம்! உங்களால் எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா? என்றார். சொல்லுங்கள் என்று அஸ்லாம் கூற, என் நண்பனிடம் எனக்கு ஒரு டின் நெய் அனுப்பச் சொன்னேன். அவன் இரண்டு டின் அனுப்பி விட்டான். ஒரு டின் நெய்யை எங்காவது விற்று விட்டால் நல்லது என்றார் பீர்பால். அதை என்னிடம் கொடுங்கள். அதை விற்றுப் பணத்தை உங்களுக்கு அனுப்புகிறேன் என்றான் அஸ்லாம்.

மறுநாள், மதுசூதன் வீட்டுக்குச் சென்ற பீர்பால், அஸ்லாம்கானிடம் கூறியதுபோல் கூறிவிட்டு நெய்யை விற்றுத்தரமுடியுமா என்று கேட்டார். மதுசூதனும் அதற்கு ஒப்புக் கொண்டதும், இரண்டு பேர் கடைக்கும் இரண்டு நெய் டின்கள் அனுப்பப்பட்டன. மறுநாள் பீர்பால் வீட்டுக்கு, மதுசூதன் வந்தார். பீர்பால், நீங்கள் அனுப்பியிருந்த டின்னில் ஒரு பொற்காசு இருந்தது. அதைக் கொடுக்க வந்தேன். நெய் விற்ற பணம் இதோ! என்று அவர் மொத்தத்தையும் பீர்பாலிடம் தந்தார். அடுத்த நாள் பீர்பால் வீட்டுக்கு வந்த அஸ்லாம் உங்களுடைய நெய் விற்ற பணம் இதோ! என்று பணத்தை அளித்தார். அவருக்கு நன்றி தெரிவித்த பின் அவரை உட்காரச் சொல்லிவிட்டு பீர்பால் தன் வேலைக்காரனை அழைத்து அவன் செவிகளில் ரகசியமாக ஏதோ கூறினார். அவர் என்ன கூறினார் என்று அஸ்லாமின் செவிகளில் விழவில்லை. பீர்பால் தன் வேலைக்காரனிடம் ரகசியமாகக் கூறியது நேராக நீ அஸ்லாமின் வீட்டுக்குப் போ. அவருடைய மகனைக் கூப்பிடு. அவனுடைய தந்தை பீர்பாலின் வீட்டிலிருப்பதாக கூறு. பிறகு நெய் டின்னில் இருந்த ஒரு பொற்காசை எடுத்துவர மறந்து விட்டதாகவும், அதை உடனடியாக எடுத்து வரவும் அவன் தந்தை கூறியதாகச் சொல், என்றார். வேலைக்காரனை அஸ்லாமின் வீட்டுக்கு ரகசியமாக அனுப்பியபின், பீர்பால் அஸ்லாமிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டு காலத்தைக் கடத்தினார்.

சற்று நேரத்தில் அஸ்லாமின் மகனுடன் பீர்பாலின் வேலைக்காரன் திரும்பினான். அந்தச் சிறுவன் அஸ்லாமை நோக்கி ஓடிவந்து, அப்பா! நீங்கள் எடுத்துவரச் சொன்ன பொற்காசு இதோ! இது நமக்கு நேற்று நெய் டின்னில் கிடைத்தது என்று உண்மையை உளறிவிட, அஸ்லாம் கோபத்துடன் உன்னை யார் இங்கே வரச் சொன்னது? நெய் டின்னில் பொற்காசா? என்று உண்மையை மறைக்க அரும்பாடு பட்டார். இந்தப் பொற்காசை நான்தான் நெய் டின்னில் வைத்தேன். உங்களை சோதிப்பதற்காகத்தான் அதைச் செய்தேன். இனியும் பொய் பேச முயன்றால், உங்கள் தலை போய்விடும் என்று பீர்பால் மிரட்ட, அஸ்லாம் உண்மையை ஒப்புக் கொண்டு பொற்காசை பீர்பாலிடம் திருப்பித் தந்தார். நீங்கள் மதுசூதனிடம் கடன் வாங்கிய 20 முகராக்களையும் இதேபோல் என்னிடம் திருப்பித் தந்துவிடுங்கள் என்றார் பீர்பால். நான் மதுசூதனிடம் கடன் வாங்கவே இல்லை என்றான் அஸ்லாம். இதைக் கேட்டதும் பீர்பால் அஸ்லாம்! இனியும் பொய் பேசினால், உங்களுக்கு தூக்குத் தண்டனை நிச்சயம்! என்று அஸ்லாம் கானை பயமுறுத்த, அவன் உண்மையை ஒப்புக்கொண்டு கடனைத் திருப்பிக் கொடுப்பதாகக் கூறி பீர்பாலிடம் மன்னிப்புக் கேட்டு, வாங்கிய கடனை மொத்தமாக திருப்பி அளித்தான். பீர்பாலின் புத்திசாலித்தனத்தை, அக்பர் வெகுவாகப் பாராட்டினார்.

## விடுகதைகள்

1. ஒரு தட்டில் ஆயிரம் ஓட்டைகள் அது என்ன?
   சல்லடை
2. ஒற்றைக் கால் நாராயணன் ஓடையிலே மீன் பிடிக்கிறான் அவன் யார்?
   கொக்கு
3. குதி குதி என குதிக்கிறார் கொட்டை பல்லால் சிரிக்கிறார் அவன் யார்?
   சோளன்பொரி
4. கண்ணிலாதவன் குருடனுக்கு வழி காட்டுகிறான் அவன் யார்?
   வெள்ளைப் பிரம்பு
5. சின்ன செங்காரம் வீடெல்லாம் சிங்காரம் அது என்ன?
   தீபம்

## பழமொழிகள்

**அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.**
**இளமையில் சோம்பல் முதுமையில் வருத்தம்.**
**அகல உழுகிறதை விட ஆழ உழு.**
**ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்.**
**அந்தி மழை அழுதாலும் விடாது.**
**காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.**
**ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.**
**ஆனை வரும் பின்னே. மணி ஓசை வரும் முன்னே, கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே.**
**எறும்பு ஊர கல்லுந் தேயும்.**
**ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு.**
**ஆனை விழுந்தாலும் குதிரை மட்டம்.**
**ஆழமறியாமல் காலை விடாதே.**


## ஓசைகள் கேட்பாய்

**மாடு கத்தும் ஓசை கேள்**
**மா மா என்றுமே**
**ஆடு கத்தும் ஓசை கேள்**
**மே மே என்றுமே**
**பூனை கத்தும் ஓசை கேள்**
**மியாவ் மியாவ் என்றுமே**
**காக்கை கத்தும் ஓசை கேள்**
**கா கா என்றுமே**
**நாய் குரைக்கும் ஓசை கேள்**
**லொள் லொள் என்றுமே**
**கிளிகள் கத்தும் ஓசை கேள்**
**கீ கீ என்றுமே**
**குயில்கள் கத்தும் ஓசை கேள்**
**கூ கூ என்றுமே**
**கோழி கத்தும் ஓசை கேள்**
**கொக் கொக் என்றுமே ...**

## இது ஒரு உலகப்புகழ் பெற்ற புதிர்




**கேள்விக்குறியுள்ள இடத்தில் என்ன எண் வரவேண்டும்?**




## புதிருக்கு விடை


4 அதாவது 234 என்றுதான் இந்த புதிருக்கு பெரும்பாலானவர்கள் விடை சொல்லி இருக்கிறார்கள். 235 என்று சொன்னவர்கள் மிகவும் சொற்பம்.







# நீர்ப்பாசன முறையொன்றின் தேவை




இலங்கை நாகரிகம் நீர் நிலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பமாகி வளர்ச்சியடைந்தது. கி.மு. 6ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் வந்து குடியேறிய ஆரியர்களாலேயே இந்நாகரிகம் உருவானது. அவர்கள் நதிக்கரையில் தமது குடியேற்றங்களைக் அமைத்துக் கொண்டமையுடன் நதியின் நீரைப்பெற்று விவசாய நடவ டிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். காலப்போக்கில் விவசாய நடவடிக்கைகளுக்காக நீரைச் சேமித்து வைக்க வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. எனவே நீர்ப்பாசன அமைப்பொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அவர்கள் முன்வந்தனர்.

**நீர்ப்பாசனமுறையொன்றின் தேவைக்கான காரணங்கள்**

1. மக்களின் பிரதான ஜவனோபாயமாக நெற்செய்கை விளங்கியமை.
2. ஆற்றுநீர் நெற்செய்கைக்கு போதாமை.
3. மழைவீழ்ச்சி வருடத்தில் பருவக்காலங்களில் மாத்திரம் கிடைத்தமை
4. கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சி போதியதாக இல்லை.
5. சனத்தொகை அதிகரிப்பினால் விவசாய நிலங்கள் விஸ்தரிக்கப்பட்டமை.

அந்தவகையில் அனுராதபுர இராசதானியில் மன்னர்கள் சிறப்பிடம் பெற காரணமாக அமைந்ததில் அம்மன்னர்கள் ஆற்றிய நீர்ப்பாசனத்திற்கான பங்களிப்பு முதன்மையானதாகும். இலங்கையில் குடியேறிய ஆரியர்கள் நீர்ப்பாசன முறைகளைக் அறிந்தவர்களாயிருந்தனர். இலங்கையின் நதிக்கரைகளை மையமாகக் கொண்டு ஆதி ஆரியர் குடியேற்றங்களைக் அமைத்தனர். இவர்கள் நெற்செய்கை முறையை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையைப் பின்பற்றினர். காலப்போக்கில் ஏற்பட்ட சனத்தொகை பெருக்கமானது நீர்ப்பாசனம் பற்றிய எண்ணப்பாட்டினை ஏற்படுத்தியது. எனினும் ஆரியர் வழிவந்த சிங்களவர் நுட்பமும், சிக்கலும் நிறைந்த பாரிய நீர்த்தேக்கங்களையும், பல மைல்களுக்குச் செல்லும் கால்வாய்களையும் பின்னரே இலங்கையில் விருத்தி செய்தனர்.

ஆரம்பத்திலே இலங்கை வந்த ஆரியர் மல்வத்து ஓயா, கலா ஓயா, தெதுறு ஓயா, மகா ஓயா, களனி கங்கை, வளவகங்கை, மாணிக்ககங்கை போன்ற ஆறுகளுக்கு அண்மையான பகுதிகளிலேயே குடியேறினர். இவ்வாறு குடியேறிய பின்னர் நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்தயொரு நாகரிகத்திற்கு வித்திட்டதெனலாம். ஆற்று நீரைப்பயன்படுத்தி விவசாயம் செய்வதன் பொருட்டு ஆரியர் ஆறுகளுக்கு அண்மையில் குடியேறினர். ஆரம்பத்தில் இந்த ஆற்று நீர் நெற்பயிர்ச்செய்கைக்கு போதியதாக காணப்படவில்லை. சனத்தொகை பெருக பெருக உணவுப் பொருள்களின் உற்பத்தியை பெருக்க வேண்டிய அவசியமாயிற்று. நீர் வழங்க வேண்டிய நிலங்களின் பரப்பும் அதிகமாயிற்று. ஒரு வருடகாலத்தில் இருந்த மழைநீர் வருடம் முழுவதிற்கும் போதுமாக காணப்படாமையினால் கோடைக்காலத்தில் பயன்படுத்தும் பொருட்டு அதனை சேர்த்து வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஆகவே மனித முயற்சியால் நீரைப் பெறும் முறைகள் ஏற்பட்டன.

## இலங்கையின் அழகிய சொரபொர வாவி



உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் வகையில் இயற்கை எழில் கொஞ்சும் இடங்களில் ஒன்றாக 'சொரபொர' வாவியும் அதனைச் சூழவுள்ள பகுதியும் விளங்குகின்றது.

அம்பாறை மாவட்டத்தையும் பதுளை மாவட்டத்தையும் இணைக்கும் எல்லைப் பிரதேசமான மஹியங்கணைப் பகுதியில் இயற்கை அழகு பொருந்தியதாக 'சொரபொர' வாவி அமையப்பெற்றுள்ளது.

கி.மு. 102 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பிரதேசத்தை ஆட்சி செய்த துட்டகைமுனு மன்னனால் நீர்ப்பாசனத்தை விருத்தி செய்து விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக அமைக்கப்பட்டதே இந்த வாவியென வரலாறு கூறுகின்றது.

இந்த வாவியைப் பார்வையிடுவதற்காக அதிகளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாளாந்தம் வந்தவண்ணமுள்ளனர்.

# கல்விக்கதிர்



- அகரன் -

# இலங்கையின் வரலாற்றில் துட்டகைமுனு




இலங்கையின் 2,600 வருடங்களுக்கும் மேற்பட்ட வரலாற்றின் பெரும்பகுதியை தொடர்ச்சியாக பட்டியற்படுத்திய ஒரே வரலாற்று இலக்கிய மூலாதாரம் மகாவம்சம். இலங்கையின் முதலாவது ஆரிய மன்னனான விஜயன் தொடங்கி மின்னேரியா குளத்தை நிறுவிய மகாசேனன் வரையான மன்னர்களின் வரலாற்றை கவித்துவத்துடன் முன்வைக்கும் மகாவம்சம் இலங்கையில் உருவான ஒரு சிறப்பான பாளி இலக்கியமாகவும் கருதப்படுகிறது. பெரும்பாலான காவியங்கள் தங்களுக்கென ஒரு பாட்டுடைத்தலைவனை கொண்டிருப்பது போல மகாவம்ச காவியமும் தனக்கென ஒரு காவியத்தலைவனை கொண்டிருக்கிறது. அவன் துட்டகைமுனு.

ஈழத்தில் புத்தசாசனத்தை நிறுவிய தேவநம்பியதீசனின் ஆட்சியைத்தொடர்ந்து அவரது இளைய சகோதரர்களே ஆட்சியை தொடர வேண்டிய மரபு நிலவியது. அந்த வரிசையில் உத்தியன், மகாசிவன் ஆகியோரை தொடர்ந்து மகாநாகனும் இருந்தான். தேவநம்பிய தீசனின் மனைவி தன்னுடைய மகனை விரைவில் ஆட்சிப் பீடத்தில் அமர்த்த வேண்டி மகாநாகனை கொல்வதற்கு சாதி திட்டமொன்றை தீட்டினாள். தீட்டிய திட்டத்தின் முடிவில் தன்னுடைய சொந்த மகனையே இழந்தாள். தலைநகரில் தன்னுடைய உயிருக்கு நிலவும் ஆபத்தை உணர்ந்த மகாநாகன் தென்னிலங்கையான உருகுணையை அடைந்தான். மகாகம என்ற சிறிய கிராமத்தை தன்னுடைய புதிய தலைநகராக மாற்றி அங்கிருந்தவாறே ஆட்சி புரிய ஆரம்பித்தான்.

மகாநாகனின் இந்த நடவடிக்கையே உருகுணை ராச்சியத்தை உண்டாக்கியது. பிற்காலத்தில் ஏற்பட்ட அனைத்து தென்னிந்திய படையெடுப்புகளின் போதும் இலங்கையின் சிங்கள அரசர்களுக்கான பாதுகாப்பு மிக்க ஒரு அரணாக இந்த உருகுணை பிராந்தியம் திகழ்ந்தது. மகாநாகனை தொடர்ந்து அவரது மகன் ஜத்தால தீசனும், ஜத்தால தீசனை தொடர்ந்து அவரது மகன் கோத்தாபயனும், அவரைத் தொடர்ந்து அவரது மகன் காவந்தீசனும் (கி.பி. 205 - கி.பி. 161) முறையே உருகுணையை ஆட்சி புரிந்தனர். காவந்தீசனின் மனைவி விஹார மகாதேவி. கல்யாணி அரசின் இளவரசி. காவந்தீசனுக்கு அரசி மூலமாக இரு புத்திரர்கள். கைமுனு மற்றும் தீசன். காவந்தீசனுக்கு அபிஸ்வர்யா என்ற தமிழ் ஷத்திரிய இளவரசியால் திக்காபயன் என்ற புதல்வனும் இருந்தான். ஏறக்குறைய காவந்தீசன் ருஹூனுவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற காலத்தில் வடக்கில் புதியதொரு ஆட்சியாளர் உருவானார். அவர் தமிழ் மன்னன் எல்லாளன்.

தேவநம்பிய தீசனைத் தொடர்ந்து மரபு வழியாக அவரது சகோதரர்கள் உத்தியன்(கி.பி. 267 - கி.பி.257) மற்றும் மஹா சிவன்(கி.பி. 257 - கி.பி. 247) ஆகியோர் ஆட்சியில் அமர்ந்தனர். அவர்களை தொடர்ந்து அவர்களின் சிறியதந்தை சூரதிஸ்ஸ(கி.பி. 247 - கி.பி. 237) அரசரானார். சூரதிஸ்ஸனின் ஆட்சியிலேயே சேனன் குத்திகன்(கி.பி. 237 - கி.பி. 215) என்ற இரு தமிழ் வியாபாரிகள் அனுராதபுரத்தின் அரியாசனத்தை கைப்பற்றினர். இதுவே இலங்கை வரலாற்றில் பதிவான முதலாவது தமிழ் ஆட்சி. 22 வருடங்கள் நிலவிய இந்த ஆட்சியை தேவநம்பிய தீசனின் கடைசி தம்பியான அசேலன்(கி.பி. 215 - கி.பி.205) முடிவுக்கு கொண்டுவந்து மீண்டும் சிங்கள அரசை நிறுவினார். எனினும் அது நீண்டகாலம் நிலைக்கவில்லை. அசேலனின் வெற்றி ஒரு தசாப்தத்தை கடக்கும் முன்னரே மீண்டும் ஒரு தமிழராட்சி உண்டானது. இந்த முறை முன்னரை காட்டிலும் வலுவாக இருந்தது. கி.பி. 205 இல் இலங்கைக்கு வடக்கில் இருந்து எல்லாளன் என்ற தமிழ் இளவரசன் ஈழத்தை தாக்கி, வடக்குப் பகுதியாக இருந்த இராசரட்டையை கைப்பற்றினார்.



# கலைக் கதிர்



# பறவைகளுக்கு திசைகள் தெரியாது; நூல் விமர்சனம்




கவிஞர் சித்தாந்தன் அவர்களின் பறவைகளுக்கு திசைகள் தெரியாது தொகுப்பினை வாசித்திருக்கிறேன். சித்தாந்தன் அவர்களின் கவிதைகள் யாதார்த்தம் மற்றும் மாயாவாதம் ஆகிய தளங்களினூடே மாறி மாறிப் பயணிப்பவை, வாசகனை கற்பனையின் உச்சிப் புள்ளிக்கு அழைத்துச் செல்பவை. அவருடைய கவிதைகளை உதிரியாக படித்திருக்கும் எனக்கு தொகுதியாக படிப்பது ஒரு புதிய அனுபவத்தையே தந்தது.

'பறவைகளுக்கு திசைகள் தெரியாது என்பதை நான், புறத்தே நம் கண்களுக்கு தெரியும் பறவைகளுக்கு அகத்தே தன் திசைகள் தெரிவதில்லை என்றே பொருட்கோடல் செய்கிறேன். ஏனெனில் இந்த தொகுதி முழுவதுமே அகமும் புறமுமான சொற்களின் கோவைகளினாலானது.

வருங்காலத்தில் பறந்து கொண்டிருக்கும் பறவை என்றோர் கவிதை. யதார்த்த நிலையில் பறவைக்கு இறந்த காலமும் நிகழ்காலமுமே பறத்தலினால் நிகழ்கின்றன. ஆனால் ஒரு கவிஞனால் மட்டுமே எதிர்காலத்திலும் பறவையினை பறக்க செய்யவியலும் என்கிறார் சித்தாந்தன்.

பறவைகளையும் மனதின் நினைவுகளையும் கூறியபடி நீளும் இந்த கவிதையின் முடிப்பு இருண்மை நிலையிலேயே முடிகிறது.

**என் இமைகளின் கீழ் படபடக்கும்**
**இரண்டு பறவைகளும்**
**எதிர்காலத்திலிருந்தே பறந்தபடியிருக்கின்றன**

கவிதையின் அகதரிசனமும் புறதரிசனமும் இணைந்த ஒரு முடிச்சாக கவிதை நிறைவுறுகிறது.

யுகக்குருதி கவிஞனின் மீகற்பனையின் இன்னோர் பரிணாமம். காதலை போர்த்தியிருப்பதாக பாசாங்கிக்கும் இந்தக் கவிதையின் வரிகளில் நிணவேட்கை வெள்ளமென பீறிடுகிறது.

**தேகத்தில்**
**குருதி வழிய வந்திருந்தான் அவன்**
**அந்தரங்க கூடத்தின் தடாகத்தில்**
**மலர்ந்திருந்த மென்மலர்களால்**
**அவளது மேனியை வருடினாள்**
**நூறாயிரம் யுகத்தின் பிணநெடி**
**வீசியபடிதானிருந்தது**

இந்த கவிதைக்கு கொற்றவையின் காதலன் என பெயரிட்டிருக்கலாமோ தெரியவில்லை. காதலை ஓர் மெல்லுணர்வாக பாடும் கவிதைகளுக்கான எதிர்க் குரலெனலாம் இந்தக் கவிதையினை.

நினைவுகளால் ஒரு சுடர் கவிதையானது நாம் எதிர்கொண்ட யதார்த்தங்களின் மீதான ஒரு மீள் விசாரணைக் குறிப்பாகவுள்ளது. இந்த கவிதையின் நுட்பம் என்பது யாதெனில் சாதாரண காட்சி ஒன்றில் ஆரம்பித்து மெதுமெதுவாக ஆழத்தை நோக்கி பயணிப்பதாகும். இந்த கவிதையை வாசிப்போர் நிச்சயமாக ஆழ்கடலுக்கு போகும் படகின் பயணத்தை இது ஒத்திருப்பதை உணரலாம்.

**இந்த யன்னல்**
**என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறது**
**அலையும் நினைவுகளில்**
**அசைகிறது அதன் திரைச்சீலைகள்**

எனத்தொடங்கி

**சுடர்களால் நினைவுகூர முடியா காலத்தில்**
**வெறிகொண்டலையும்**
**நூறாயிரம் கண்களிடையே**
**நானேற்றிய சுடர்**
**ஒரு சூரியனை போலாகி**
**சுடர்ந்துகொண்டிருக்கிறது**

ஈழத்தின் கவிதைசொல்லிகளில் தனக்கென பிரத்தியேகமான மொழியும் நுட்பத்தையும் கொண்டவர் கவிஞர் சித்தாந்தன். இந்த தொகுப்பு முழுவதுமே ஆழ்ந்து நோக்கக்கூடிய அற்புதமான கவிதைகளால் நிரம்பியுள்ளது.

அண்மைக்காலமாக சிறந்த கவிதை தொகுதிகளை வெளியிட்டு வரும் தாயதி பதிப்பகத்தின் வெளியீடாக இந்த தொகுதி வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. புதிய கவிதைசொல்லிகள் கட்டாயம் வாசிக்க வேண்டிய பிரதி.

**லலிதகோபன்**

# உறவுகள் பலவிதம்

ஞாலத்தின் படைப்பில் எத்தனை விந்தைகள்
ஞாயிறின் வெளிச்சமே நாளொன்றின் கூறாகும்
சுமந்தவள் வயிற்றிலே சுகமாக தங்கியே
சுற்றம் சூழவே குழந்தையாய் தவழ்கிறோம்

இரத்தத்தால் வந்ததும் சொந்தத்தால் பெற்றதும்
இவ்வுலகை காட்டிட இணைந்தே குலவிடும்
தேவையின் பொருட்டு பாசத்தை தெளித்திடும்
தேய்பிறை மாந்தரும் எம்மோடு பயணிப்பர்

உன்னத அன்பையும் உற்சாகத் தெம்பையும்
உயிராக கொடுத்திடும் உயர்ந்தவரே உத்தமர்
செல்வத்தின் பயனாக சேர்க்கை கூடுமே
செருக்கும் தலையோடு இலவசமாய் இணைப்பாகும்

இரக்கத்தின் வரட்சியில் இழிவாகும் இலக்குகள்
இன்பத்தின் தோல்வியும் ஆங்காங்கே பிறக்குதே
என்போடு தசைச்சுவர் ஒன்றாகிய கூட்டுக்குள்
ஏராளம் கேள்விகள் ஏற்றவரை தெரிந்திட

விடை தெரியாமல் மூடராக சிலர்
வியந்து வாழ்த்தி வீழ்த்தும் பலர்
மண்ணில் மனிதர் வாழும் வரையில்
மதிப்பிட்டு அறியாத உறவுகள் பலவிதமே

**சம்பூர் சமரன்,**
**திருகோணமலை.**







# பேரன்பின் படிமங்கள் கவிதை நூல் அறிமுக விழா

அன்பின் பாதை சமூகத்தின் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றம் நடாத்திய வேலணையூர் ரஜிந்தன் எழுதிய பேரன்பின் படிமங்கள் கவிதை நூல் அறிமுக விழா கவிஞர் கனக தீபகாந்தன் தலைமையில் திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கல்யாண மண்டபத்தில் கடந்த 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக திருகோணமலை உயர் தொழில்நுட்பக் கல்லூரி சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் திரு. தங்கராசா ஜீவகன் கலந்து சிறப்பித்ததோடு முதன்மை விருந்தினர் உரையையும் நிகழ்த்தினார்.

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக்குருக்கள் அவர்கள் ஆசி வழங்கி முதற்பிரதியையும் பெற்றுக்கொண்டதோடு நூலாசிரியர் வேலணையூர் ரஜிந்தனை பொன்னாடை போர்த்தி கௌரவித்திருந்தார்.

நிகழ்வின் வரவேற்புரையை கவிஞர் தி. லலித்தகோபனும், நூல் நயவுரைகளை கவிஞர் ஷெல்லிதாசன் மற்றும் கவிதாயினி பானு சுதாகர் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

ஏற்புரையினை நூலாசிரியர் வேலணையூர் ரஜிந்தன் நிகழ்த்தினார். நன்றியுரையை றொசில்டா வழங்கினார்.


இந்நிகழ்வில் மூத்த கலைஞர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்விற்கான ஊடக அனுசரணையினை காலைக்கதிர், தினக்கதிர் மற்றும், எஸ் .எஸ் டிஜிட்டல், ஈஸ்ட் எவ் .எம் ஆகியோர் வழங்கியிருந்தார்கள்.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

## இலக்கிய நயம்

# நேற்று வரை இல்லாத காதல்...!

● யாழ். மகள் சைந்தவி



உணர்வுகளை மட்டுமல்ல அக்காலத்திய சமூக சித்திரத்தையும் பழம்தமிழ் பாடல்கள் நமது கண் முன்னால் தூசி தட்டி விரித்து வைக்கிறது. நற்றிணையில் உள்ள ஒரு அழகான சித்திரத்தை இந்த இடத்தில் காண்பது நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இளம் காதலர்கள் இருவர் ஒரு தன்னந்தனி தோப்பிற்குள் நடந்து வருகிறார்கள். மாலை இளம் சூரியனின் இதமான வெப்பமும் குளிர் மிகுந்த தென்றலும் இருவர் மனதில் சிலிர்ப்பை ஏற்படுத்துகிறது. அந்த சோலையில் ஒரு புன்னை மரம் நிற்கிறது அதன் அடர்ந்த நிழலில் உட்கார்ந்து இன்பக் கதைகள் பேச ஆசைப்படுகிறான் காதலன் ஆனால் வெட்கத்தோடு மறுக்கிறாள் காதல் தலைவி.

காரணம் என்னவென்று அவன் கேட்க இந்த புன்னை மரம் எனக்கு தமக்கை உறவாகும் என்று அவள் வீணை குரலில் கிசுகிசுக்கிறாள். மங்கைக்கு சகோதரி பச்சை மரமா என்று அவன் கேள்வி கேட்க துணியும் போதே அவளிடம் இருந்து பதிலும் வந்து விடுகிறது. என் அம்மா குழந்தைப் பருவத்தில் இந்த சோலைக்கு வந்து தான் விளையாடுவாளாம் அப்பொழுது கேட்பாரற்று கிடந்த புன்னை மரம் விதை ஒன்றை எடுத்து மணலில் ஊன்றி வைத்தாளாம்.

அவள் வாலிப பருவத்தை தொட்டப் போது அன்று ஊன்றிய விதை துளிர்த்து நிற்பதை கண்டாளாம். அதன் நிழலில் தான் தோழிகளோடு விளையாடுவாளாம். அன்னை வளர்த்த தான் அறிமுகம் செய்து வைத்தாளாம். அதன் காரணமாக அக்கா முன் அத்தான் நீ தொட்டால் பற்றிக் கொள்ளாதோ வெட்கம் மென விளக்கம் சொன்னாளாம் பொருளை புரிந்த பிறகு இந்த நற்றிணை பாடலை படித்துப் பாருங்கள்.

**விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ்முலை அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்த்தது**
**நும்மினும் சிறந்தது நுவ்வை யாகும் என்று**
**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே**
**அம்ம நாணுதும் தும்மொடு நகையே!**

இதில் என்னபெரிய விடயம் இருக்கிறது. ஜன்னி நோய் கண்டவன் உளறுவதுபோல காதல் நோய் வந்தவர்கள் அர்த்தமற்ற வார்த்தைகளை கூறி பிதற்றுவது வழக்கம் தானே என்று சிலர் கேட்கலாம்.

ஆண்கள் மட்டும் இளைத்தவர்களாக என்ன? அவள் காலுக்கு செருப்பு வாங்கி கொடுக்க காசு இருக்காது. ஆனால் அதை வெளிக்காட்ட முடியுமா உடனே மலரே நீ நடக்க பாதையெல்லாம் பூவிரித்தேன் என்பான் குளிக்காமல் நாற்றம் அடிக்கும் அவள் வியர்வையை செந்தேன் துளி எனச் சொல்லி நம்மை அருவருப்பு அடைய வைப்பான் அப்படித் தான் இந்த நற்றிணை காதலியும் எதையோ சொல்ல வந்து சொல்லத் தெரியாமல் மரம் எனக்கு அக்கா என்று உளறுவதுபோல் தோன்றும்.

காதல் என்பதே ஒரு வித பைத்தியம் தான் அப்படிப்பட்ட பைத்தியக்கார பேச்சாக இந்த பாடலை நாம் எடுத்துக் கொள்ள முடியாது. இதில் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகளின் பின்னணியை ஆராய்ந்தால் நமக்கு மலைப்பு ஏற்படுகிறது. முதலில் காதலர்கள் நடந்துவரும் சோலையை எடுத்துக் கொள்வோம். இந்த சோலை காதலியின் அம்மா காலத்திலும் சோலையாகத்தான் இருந்திருக்கிறது. இப்போதும் அப்படித்தான் இருக்கிறது. இதில் நமக்கு கிடைக்கும் உண்மை பண்டைய கால தமிழன் இயற்கையை சிதைக்க முயலவில்லை. அதை வளர்க்கவே விரும்பியிருக்கிறான். அதனால் தான் நாடும் நகரமும் வளமையோடு இருந்திருக்கிறது.

மேலும் இந்த பாடலில் அவள் விதையை ஊன்றினாள் என்று எழுதப்பட்டிருக்கிறதே தவிர தண்ணீர் ஊற்றி வளர்த்தாள் என்று எங்கேயும் சொல்லப்படவில்லை. தண்ணீர் இல்லாமல் ஒரு விதை எப்படி மரமாகும் இங்கே ஆகியிருக்கிறது அப்படி என்றால் மாதம் மும்மாரி மழை பெய்தது என்று சொல்வது கற்பனை அல்ல. அலங்கார வார்த்தையல்ல நிஜமான உண்மையென்பது தெரியவரும்.

# பட்ட மரமும் பச்சைக் கொடியும்

மாணவர்கள் பலர் பயத்தில் வீரிட்டுக் கத்தினர். எல்லா மாணவர்களையும் ஆசிரியர்கள் வாங்குகளிற்கும் மேசைகளிற்கும் கீழே படுக்க வைத்தனர். விமானங்கள் போட்ட குண்டுகள் பாடசாலைக்கு அருகில் தம் தும் என்று பாரிய சத்தத்துடன் விழுந்து வெடித்தன. எல்லா மாணவர்களுடனும் சேர்ந்து சீலனும் அதிர்ந்து போயிருந்தான். விமானங்கள் சென்று மறைந்ததும் பெற்றோர்கள் தத்தமது பிள்ளைகளை மிகவும் அவசர அவசரமாக வந்து அழைத்துப் போயினர். முதலில் வந்து போய் மறைந்த விமானங்களிற்குப் பதிலா புதிய விமானங்கள் வானில் தோன்றி திடீரென குத்திப்பதிந்து குண்டுகளை வீசின. பாடசாலை இருந்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த மாணவர்களில் சிலர் அக்குண்டு சிதறல்களுக்கிடையில் அகப்பட்டு கருகிப்போயினர். பலர் காயங்களுக்குட்பட்டனர்.

சமாதனத்தின் சின்னமான வெள்ளை உடைகளெங்கும் சிவந்த இரத்தம் தோய்க்கப்பட்டது. புத்தகப் பைகளும் புத்தகங்களும் தண்ணீர்ப்போத்தல்களும் பாதையெங்கும் சிதறிக் கிடந்தன. காயப்பட்டவர்கள் கிடைத்த வாகனங்களிலும் சைக்கிளிலும் ஏற்றி வைத்திய சிகிச்சைக்கு எடுத்துச் செல்லப் பட்டனர். கருகி இறந்த இளம் தளிர்கள் அடக்கம் செய்யப் பட்டும் அக்கினியுடன் கலக்கப்பட்டும் அமைதியாயினர்.

அடுத்த நாளின் விடிகாலைப் பொழுது எறிகணை மற்றும் விமானங்களின் இரைச்சல் என்பவற்றுடனேயே புலர்ந்தது. மக்கள் அனைவரும் தாம் பிறந்த நம்முன்னோர் பிறந்து தவழ்ந்து வாழ்ந்து மடிந்த மண்ணை வீட்டு வேர் அகலப்பட்ட விருட்சங்களாய் அகதிகளாக இடம்பெயரத் தொடங்கினர்.

ஒவ்வொருவரது கையிலும் கொண்டு செல்லக்கூடிய சொத்துக்களே அவர்களுக்கு அப்போது சொந்தமாய் இருந்தன. வழியெங்கும் ஒரே மக்கள் கூட்டம்மூட்டை முடிச்சுகளுடன் நடந்தும்வாகனங்களிலும் மக்கள் சாரிசாரியாக வீதியை நிறைத்த படி சென்று கொண்டு இருந்தனர். பாதை நிறைந்து மக்கள் போவதற்கு இடமின்றி நின்றனர். நல்லூர் தேர்த் திருவிழாவிற்கு முண்டியடிப்பது போல இருந்தது. அந்த நேரம் பாரத்து மழை தூறத்தொடங்கியது. சற்று நேரத்தில் அது பலமாகிப் பெரிதானது.பகல் தாண்டி மாலை கழிந்து இரவு வந்த போதும் மழையைப் போல குண்டு வீச்சும் எறிகணை வீச்சும் தொடர்ந்து கொண்டிருந்தன. வாகனங்களின் முகப்பு விளக்கு வெளிச்சம் அந்த மழை நீரை ஊடுருவிப் பாய்ந்தது. சீலனின் வீட்டாரும் குண்டுவீச்சுக்கள் தொடர்ந்தபடியால் இடம்பெயரத் தயாராயினார்.

சீலன் தனது சிறிய குடையை எடுத்து விரித்துப் பிடித்தான். சிறிது தூரம் தான் நடந்திருப்பான் கால்கள் சோர்ந்து ஓய்ந்து போயின. மறுகையில் இருந்த பாரமான பையைத் தாங்க முடியாமல் அவனின் தோள்பட்டைகள் வலித்தன. சீலனின் அடித்தொண்டை வரண்டது. கண்கள் நித்திரையைத் தேடிச் செருகின. எவ்வாறெனினும் அவர்கள் ஒருவாறு மெதுவாக நடந்து சென்று ஒரு மரத்தடியை அடைந்தனர்.

அங்கே தம் பொதிகளை இறக்கி வைத்து விட்டு மக்கள் இளைப்பாறினார்கள். சீலனும் தன் பையை நிலத்திலே வைத்து விட்டு அப்படியே சாய்ந்து நித்திரை கொள்ளத் தொடங்கினான். எவ்வளவு நேரம் இவ்வாறு நித்திரை கொண்டிருப்பான் என்று சொல்ல முடியாது.



**தொடர்கதை**
**பாகம் 02**

சி .ஜெயகுகன்
கொழும்பு

திடீரென கண்விழித்து பார்த்த போது தான் ஒரு தென்னந் தோப்பில் இருப்பது தெரிய வந்தது.அவனருகே அவனது அம்மாவும் அப்பாவும் எதனையோ பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தனர். சீலனின் இளைய தம்பி அம்மாவின் கைகளில் நித்திரை கொண்டிருந்தான். தங்கை அப்பாவின் மடியில் தலையை வைத்து நித்திரை செய்து கொண்டிருந்தாள். அப்போது அங்கே ஒரு நாய்க்குட்டி ஓடிப்போவதைப் பார்த்தான்.

அது அவனைக் கண்டதும் வாலை ஆட்டிக்கொண்டு வந்து அவனருகில் நின்றது. அவன் தன் பையிலிருந்து விசுக்கோத்து துண்டொன்றை அதற்குப் போட்டான். அது வாலை ஆட்டியபடி அதனைக் கடித்து தின்றதை மிகவும் மகிழ்ச்சியாகப் பார்த்துக் கொண்டிருந்தான். 'தம்பி இனிப் போடாதேங்கோ' என்றாள் அம்மா. சீலன் மௌனமாகத் தலையாட்டினான். சீலனது எண்ணம் எல்லாம் தான் முன்னர் வளர்த்த தன் சிறிய நாய்க்குட்டியான மணியினைப் பற்றியதாக இருந்தது. ஒரு நாள் சீலனின் அப்பா ஒரு நாய்க்குட்டியை கொண்டு வந்து கொடுத்தார். அதற்கு 'மணி' என்று பெயர் வைத்தான் சீலன். அன்றிலிருந்து அது அவனுடன் ஒட்டிக் கொண்டது. காலையில் அவன் நித்திரையிலிருந்து எழுந்ததும் அறை வாசலில் நின்று வாலை ஆட்டி வரவேற்கும். பின்னர் சில வேளைகளில் அவனுடன் சேர்ந்து குளிக்கும். அவன் சாப்பிட்டு விட்டு பள்ளிக்கூடம் போகும் வரைக்கும் வாசல் வரை அவனுடனேயே வந்து வழியனுப்பும். பள்ளிக்கூடத்திலிருந்து சீலன் திரும்பி வரும் வரை வாசலில் காத்திருக்கும். மாலையில் மணி சீலனுடன் விளையாடும். பின்னர் அவன் படிக்கும் மேசைக்குக் கீழே வந்து படுத்துக்கொள்ளும். அது தான் அதனது படுக்கையறை. மணியை நினைத்ததும் சீலனுக்கு நெஞ்சு விம்மி முட்டியது. 'அம்மா மணி எங்கே? மணியை வீட்டிலேயே தனியாக விட்டிட்டு வந்திட்டம்' – என்று கண் கலங்கக் கூறினான் சீலன்.

'தம்பி! அது அங்கையிருக்கும்' என்று சமாதானம் சொன்னாள் அம்மா. 'மணி இப்போது என்ன செய்து கொன்டிருக்கும்? என்னைத் தேடிக் கொண்டிருக்குமா? இல்லை நித்திரை செய்து கொண்டிருக்குமா? அல்லது பயத்தில் எங்காவது பதுங்கி இருக்குமா?' என்ற கேள்விகள் மனதுள் ஓடின. அந்த நேரம் சீலனின் வீட்டுப் பக்கமாய் எறிகணைகள் விழுந்து வெடிக்கும் சத்தங்கள் கேட்டன. மணியை நினைத்து அழுது கொண்டிருந்த சீலனைத் தேற்றிய அவனது அப்பாவும் அம்மாவும் அவனையும் கூட்டிக் கொண்டு சீலனின் சித்தப்பா வீட்டை அடைந்தனர். சித்தப்பா, சித்தி மலர் எல்லோரும் அவர்களை மலர்ந்த முகத்துடன் வரவேற்றனர். அடுத்த நாள் காலையில் எல்லாச் சிறுவர்களும் எழுந்து காலைக் கடன்களை முடித்தனர். பெரியம்மா பரிமாறிய அரிசிமாப் புட்டையும் உருளைக் கிழங்குப் பொரியலையும் சாப்பிட்டு விட்டு அருகில் இருந்த காணிக்குள் விளையாடச் சென்றனர். அங்கே மா மரங்கள் தென்னை, மரங்கள் வேப்ப மரங்கள் என்பன நிழல் செய்தன. அம்மரங்களிலே காகங்களும் குருவிகளும் அவற்றைத் தம் வீடு போல் நினைத்து கிளைக்கு கிளை தாவியும் வானத்தில் பறந்து விட்டு வந்து அமர்ந்து இராச்சியம் நடத்திக் கொண்டிருந்தன. சிறுவர்கள் தம் புற உலகை மறந்து தம் உலகில் புகுந்தனர்.

ஆரம்பத்தில் சிறிது நேரம் வேப்பமரத்தில் கட்டியிருந்த ஊஞ்சலில் ஒருவர் மாறி ஒருவராக ஆடினர். பின்னர் அவர்கள் தமக்குள் தாமே ஒரு விளையாட்டை விளையாடத் தொடங்கினர்.

(தொடரும்...)

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள்!

பிரியமதா பயஸ்



வாழ்க்கையில் சிலருக்கு எல்லாம் சுலபமாக கிடைத்து விடுகிறது. சிலருக்கு எவ்வளவு போராடினாலும் கிடைப்பதில்லை. ஏன் இந்த பாரபட்சம்?.

நோர்வேயுக்கும் இலங்கைக்கும் நான்கு மணி நேரம் வித்தியாசம். அதுக்காக இலங்கை 4 மணி நேரம் வேகமாக முன்னே ஓடுது என்றும், நோர்வே தாமத மாக பின்னே செல்கிறது என்றும் அர்த்தம் இல்லை.

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு Time Zone இருக்கு அவ்வளவுதான்.

எப்படி ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு Time Zone இருக்கோ அதே மாதிரி நம் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு Time Zone இருக்கு.

பல நேர்முகத் தேர்வுகளில் எவ்வளவோ முயற்சி செய்தும் சிலருக்கு வேலை கிடைப்பது இல்லை. ஆனால் கூட படித்தவர்களுக்கு வேலை கிடைத்துவிடும். அந்த நேரத்தில் பார்க்கும்போது , என்னடா நமக்கு மட்டும் ஏன் இப்படி என்று தோன்றும்.

ஆனால் சில வருடம் கழித்து , முதலில் வேலை கிடைக்காமல் இருந்தவர்களுக்கு நல்ல வேலை கிடைத்து நல்ல சம்பளத்துடன் நன்றாக இருப்பார்கள். அதேவேளை முதலில் வேலை கிடைத்தவர்களுக்கு கொரோனா வந்ததால Lay Off ஆகி மீண்டும் வேலை தேடும் நிலைமைக்கு தள்ளப்பட்டிருப்பார்கள்.

தனிமையில் இருப்பவர்களுக்கு துணையுடன் ஊர் சுத்துபவர்களை பார்த்தால் சிலநேரம் பொறாமையாக இருக்கும்,எனக்கென யாருமில்லையே என்று தோன் றும்.

அதுவே கல்யாணம் ஆனதும் அழகான மனைவி அன்பான துணைவி அமைந்ததில் பேரின்பமே என்று வாழ்க்கை அமையும்.

அதே வேளை துணையோடு இருந்த சிலர் காதலில் தோல்வி கண்டு எம்மா எம்மா காதல் பொன்னம்மா நீ என்னைவிட்டு போன தேனம்மா என்று சோகத்தில் இருப்பார்கள்.

ஆக, இங்கே ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு வகை இருக்கு Time zone இருக்கு. அதுக்கேற்றமாதிரி தான் எல்லாம் நடக்கும்.

கூட இருக்கிறவன் நம்மை விட வேகமா ஓடுவதுபோலதான் தெரியும். அதுக்காக அவனை பார்த்து பொறாமைப் படவோ வருத்தப்படவோ தேவையே இல்லை. அவனுக்கான ஓடுபாதையில் அவன் ஓடுகிறான் அவ்வளவு தான் ,அவனுக்கான பாதை வேறு நமக்கான பாதை வேறு.

நமக்கானநேரம் வரும்,அதுவரைக்கும் ஓடுவதை நிற்பாட்டக் கூடாது.

வரிக்குதிரை குட்டியை ஈன்றதுமே அந்த குட்டியை வேட்டையாட சிறுத்தையும் சிங்க மும் தயாராக காத்திருக்கும். பிறந்த வுடனேயே, தன் வாழ்க்கைய காப்பாற்ற ஐந்தறிவு குதிரை குட்டியே ஓட ஆரம்பிக்கிறது. நம்மால் முடியாதா என்ன ??

# இவ்வளவும்தான் வாழ்க்கை!

30 வயதுக்குபின், இரவும், பகலும் ஒன்று தான்.

கொஞ்ச நாள் தூங்கமில்லை என்றால் கூட சமாளித்துக் கொண்டு போக கற்றுக்கொள் வோம்.

40 வயதுக்குபின், அதிகமா படிச்சிருந் தாலும், குறைவா படிச்சிருந்தாலும் ஒன்று தான்.

குறைவாக படிவர்கள் பெரும்பாலும் முதலாளியா இருப்பார்கள் , அதிகமாவும் சம் பாதிப்பார்கள்.

50 வயதுக்குப்பின், அழகா இருந்தாலும், அசிங்கமா இருந்தாலும், வெள்ளையா இருந் தாலும், கறுப்பா இருந்தாலும் ஒன்றுதான்.

எவ்வளவு அழகா இருந்தாலும், இந்த வயதில், முகத்தில் சுருக்கங்கள், கரும் புள்ளிகள் வந்துவிடும்.

60 வயதுக்குபின், மேலதிகாரி, கீழதிகாரி எல்லோரும் ஒன்றுதான்.

ஓய்வுக்கு வந்தபின் எல்லோர் நிலையும் ஒன்றுதான்.

70 வயதுக்குபின், பெரிய வீடோ, குட்டி வீடோ எல்லாம் ஒன்று தான்.

மூட்டு வலி, தள்ளாமை, நடக்க முடியாத நிலை எல்லாமே வந்துவிடும். கொஞ்ச இடத்தில் மட்டுமே புழங்க முடியும்.

80 வயதுக்குபின், பணம் இருந்தாலும் பணம் இல்லை என்றாலும் எல்லாமே ஒன்று தான்.

அதிகமா செலவழிக்க முடியாது, தேவை களும் குறைந்துவிடும், ஆசைகளும் குறைந்து விடும் .

90 வயதுக்குபின், ஆணோ, பெண்ணோ எல்லாரும் ஒன்றுதான்.

ஆணுக்கு உரிய தன்மைகளும், பெண் ணுக்கு உரிய தன்மைகளும் எல்லாமே மங்கி போயிருக்கும்.

100 வயதுக்குபின், படுத்து இருந்தாலும், நடந்துகொண்டு இருந்தாலும் எல்லாம் ஒன்றுதான் நடக்க முடிந்தால் கூட, செய்வதற்கு எந்த வேலையுமே இருக்காது. அதனால் வாழ்க்கையை ஈசியா எடுத்துக்கொள்வோம்.

என்ன இருக்கோ, அதுக்காக சந்தோப்பட கற்றுக்கொள்வோம் , இல்லாததை நினைத்து வருத்தப்படுவதை விட்டு விடுவோம்.

மனித வாழ்வில் நாற்பது வயதுக்குள் நாம் என்ன மாதிரியான வாழ்க்கையை வாழப் போகிறோம் என்பது முடிவு செய்யப்பட்டு விடுகிறது. எனவே உங்களின் வாழ்க்கையை வளமாக்கும் வழிமுறைகளை கண்டறிந்து உங்களின் வாழ்க்கையை நிலைநிறுத் துங்கள்.





# பணம் என்பதே வாழ்க்கை!

உங்களிடம் பணம் இல்லாத போது பிறரிடம் கேட்பது உங்கள் தகுதியை நீங்கள் இழக்க நேரிடும்.

உங்களைப் புரிந்து கொண்ட வர்கள் கூட உங்களை துச்சமாக நினைக்கலாம்.

இந்த உலகத்தில் எல்லா மனி தர்களிடத்திலும் பணம் என்பது வாழ்க்கையாகி விட்டது.

உங்களுக்கு பணம் வேண் டும் என்றால் எதற்காக? ஏன்? அந்தப் பணத்தை வைத்து என்ன செய்யப் போகிறீர்கள் என்ற எல்லாவற்றுக்குமான பதிலை கொண்டு தீர்மானி யுங்கள்.

நீங்கள் மற்றவர்களிடம் இலவசமாக பணம் கேட்பதை விட்டுவிட்டு தனியார் கடன் கொடுக்கும் நிறுவனம் அல்லது வட்டி தொழில் செய்வோரை அணுகுவது சிறந்தது.

உங்களால் மற்றவர்க்கு இலாபம் இருக்கும் என்றால் அவர்கள் கடன் கொடுக்க தயங்கு வதில்லை.

கடன் அன்பை முறிக்கும். உங்கள் வாழ்க்கையின் முக்கிய தருணத்தில் சிலதை இழந்து விடும் நேரம் வரும்போது அந்த நேரத்தில் பணத் தேவை எனில் அப்போது கூட நீங்கள் இலவச மாக பணம் கேட்காமல் வட்டிக்கு அல்லது உங்கள் சொத்தை அடமானம் வைத்தோ கேட்பது உங்கள் மரியாதையை நிலை நிறுத்தும்.

# அந்தோனிப்பிள்ளை யூட் கறோவ் அ.ம.தி.அடிகளாரின் 'பலவான் இயேசுவே' என்ற இசை இறுவட்டு வெளியீடு

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்றர்)

சில்லாலை மண்ணின் மைந்தனும், யாழ் மாகாண அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்தவருமான அந்தோனிப்பிள்ளை யூட் கறோவ் அ.ம.தி. அடிகளாரின் 'பலவான் இயேசுவே' - என்னும் திருவழிபாடு மற்றும் ஆராதனைப் பாடல்கள் அடங்கிய இசை இறுவட்டு வெளியீடு பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இலங்கையில் அமல மரித் தியாகிகளின் சபை காலடி வைத்ததின் 175 ஆவது ஆண்டின் முதல் நிகழ்வாக நடைபெற்றது என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒரு முக்கிய செய்தியாகும்.

அந்த இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு நடந்த விதம் அனைவரையும் கவர்ந்து, இது ஒரு புதிய விதம் என எண்ண வைத்தது. மிகப் பெரிய அளவிலான இறுவட்டு அரங்கின் மேலிருந்து மெல்ல மெல்ல இறக்கப்பட, மேலிருந்து பல நிற வண்ண சோடனைத் துவள்கள் கொட்ட, குருமுதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளாரும் இதர விருந்தினர்களும் நாடாவை வெட்டி இறுவட்டை அதற்கென அமைக்கப்பட்ட மேடையில் வைத்தனர். இது வித்தியாசமாக இருக்கிறது என்பதைத் தொடர்ந்து கொண்டே இருந்த கரகோசம் உறுதிப்படுத்தியது.

### இசையைக் கற்பித்த தந்தையாருக்கு மறை ஆசிரியப் பணிக்கும் கௌரவம்

தனக்கு இசையைக் கற்பித்த தனது அன்புத் தந்தையார் சுவாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்கள் 75ஆவது அகவையில் கால் பதித்துள்ளமை மற்றும் 50 ஆண்டு கால மறை ஆசிரியப் பணியை நிறைவு செய்துள்ளமை ஆகிய இரு நிகழ்வுகளுக்காகவும் அவரை கௌரவிக்கும் நோக்குடன் அவரின் மைந்தன் யூட் கறோவ் அ.ம.தி. அடிகளார் அவருக்கு அர்ப்பணித்த இறுவட்டின் முதல் பிரதியைத் தனது பெற்றோருக்கு நன்றியோடு சமர்ப்பித்தார். இது ஒரு அ.ம.தி. வெளியீடாகும்.

கடந்த ஐம்பது வருடங்களாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மறை மாவட்டங்களில் இல்லற தொண்டன்



என அழைக்கப்படும் நிரந்தர மறை ஆசிரியராக மறைபணி ஆற்றியவர் மறையாசிரியர் சுவாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை என்பது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டும்.

### அந்தோனிப்பிள்ளை யூட் கறோவ் அடிகளார் சில்லாலை மண்ணின் நாற்பதாவது குரு

அந்தோனிப்பிள்ளை யூட் கறோவ் அ.ம.தி அடிகளார், சில்லாலை பெற்றெடுத்த 40ஆவது குரு மணியாவார். 1985ஆம் ஆண்டு பிறந்த இவர் தன் உலகியற் கல்வியை சில்லாலை உரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் யாழ்ப்பாணம் புனித சம்பத்தரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தனது குருத்துவக் கல்வியின் மெய்யியல் துறைக் கல்வியை கண்டி அம்பிபிற்றிய தேசிய குருமடத்திலும், இறையியற் துறைக் கல்வியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் பெற்று 2017ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

மெய்யியல் மற்றும் இறையியல் இளங்கலைமாணிப் பட்டங்களை உரோமை உர்பாணியானா பல்கலைக்கழகத்தில் பெற்ற இவர், 2017 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையின் ஆன்மீக குருவாகவும், அமலமரித் தியாகிகளின் உயர் கல்வி நிறுவனத்திற்கும் அக்குவைனாஸ் பல்கலைக்கழகக் கல்லூரிக்கும் இடையிலான இணைப்பாளராகவும் பணியாற்றினார்.

2018ஆம் ஆண்டு மன்னார் பொது வைத்தியசாலையின் ஆன்மீக குருவாகவும், மன்னார் இயூஜின் அக்கடமியின் இயக்குநராகவும் பணியாற்றினார். அக்காலத்தில் மன்னார் பொது வைத்தியசாலையில் ஆரோக்கிய அன்னை ஆலயத்தையும் மண்டபத்தையும் கட்டியெழுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

2020ஆம் ஆண்டு முதல் அரியாலை ஞானதீபம்



இளையோர் திறன் விருத்தி மையத்தின் இயக்குநராக பணியாற்றி வருகிறார்.

இப்பணியோடு அமலமரித்தியாகிகளின் யாழ். மாகாண அழைத்தல் இயக்குநராகவும் அமலமரித் தியாகிகளின் உயர் கல்வி நிறுவனத்தில் ஆங்கில டிப்ளோமாக் கற்கைநெறியின் விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகிறார்.

### நிகழ்வில் கலந்து கொண்டோர்

மண்டபத்திற்குப் போதுமான அளவு சில்லாலைப் பங்கு மக்களோடு, குருக்கள், துறவிகள், அருட்சகோதரிகள் இறுவட்டு வெளியீட்டுடன் தொடர்புடையவர்கள் எனப் பலருடன் விழாவின் பிரதம விருந்தினரான யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார், சிறப்பு விருந்தினராக அமலமரித்தியாகிகள் யாழ் மாகாண முதல்வர் இயூஜின் பெனடிற் அ.ம.தி. அடிகளார், கௌரவ விருந்தினராக செபமாலை தாசர் சபை இலங்கை மாகாண முதல்வர் ஜெயசீலன் செ.தா. அடிகளார் ஆகியோரும் வந்திருந்தனர்.

அமலமரித்தியாகிகள் சிறிய குருமட உப அதிபரும் சில்லாலை மண்ணின் மைந்தனுமாகிய ஜெனிஸ் அ.ம.தி. அடிகளாரின் வரவேற்புரையைத் தொடர்ந்து வரவேற்பு நடனத்தை கம்சத்பிரியா இசைக்கல்லூரி மாணவிகள் நிகழ்த்தினர்.

### ஜெயசீலன் அடிகளார் உரை

சில்லாலை மண்ணின் மைந்தன், செபமாலை தாசர் சபை இலங்கை மாகாண முதல்வர் ஜெயசீலன் செ.தா. அடிகளார் உரையாற்றும் போது -

உலகத்தில் இருந்த இசையை கடவுளுக்குரிய திரு இசையாக, திருவழிபாட்டுக்கு ஏற்றதாக, மாற்ற வேண்டும் என்று அதற்கு வடிவம் கொடுத்தது திரு அவையே. எனவே அந்த வகையில் இந்த இறுவட்டும் இத்திரு வழிபாட்டுக்கு மென்மேலும் வலுச்சேர்க்கும் என்பதில் ஐயமில்லை . - என்று ஆசி கூறினார்.

அமலமரித்தியாகிகள் யாழ் மாகாண முதல்வர் இயூஜின் பெனடிற் அ.ம.தி. அடிகளார் பேசும் போது - கடந்த 175 ஆண்டுகளாக இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சியிலே பல்வேறு காத்திரமான பணிகளை ஆற்றிய அமல மரித்தியாகிகளின் வாழ்வு பாராட்டத்தக்கது. யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை யூட் கறோவ் அ.ம.தி. அடிகளாரின் முயற்சியில் வெளிவரும் அ.ம.திகள் வெளியீட்டின் இன்னொரு படைப்பான 'பலவான் இயேசுவே' என்னும் இறுவட்டை பாராட்டுகிறேன். - என்றார்.

### நயப்புரை

இறுவட்டிற்கான நயப்புரையை திருமறை கலாமன்றத்தின் பிரதி இயக்குனரும் யாழ்ப்பாண கல்வி வலயத்தின் நாடக ஆசிரிய ஆலோசகருமான திரு. யோண்சன் ராஜ்குமார் அவர்கள் வழங்கினார்.



அவர், பாடல்வரிகளின் அர்த்தத்தையும் இசைபிரயோகத்தின் ஆழத்தையும் தெளிவாக கோடிட்டு காட்டி, இப்பாடல்கள் நிச்சயமாக கேட்போரின் மனதை இறைவன் பால் ஈர்க்கும் என்றார். அத்தோடு இவ்விறுவட்டில் அடங்கியுள்ள ஒன்பது பாடல்களையும் சுருக்கமாக தொகுத்து அப்பாடல்களின் முதல்வரியை கொண்டு ஒரு சிறிய செபத்தையும் அவர் உருவாக்கியமை இவ்விறுவட்டிற்கு மேலும் வலுசேர்ப்பதாகவும் கூறினார்.

### மறையாசிரியரின் சிறப்புரை

மறையாசிரியர் சுவாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்களின் சிறப்புரை உரையில் -

இரண்டாம் வத்திக்கான் சங்கம் முன்னெடுக்கப்பட்ட காலத்திலே பொதுநிலையினரின் பங்களிப்பு திருச்சபையிலே முக்கியமான பங்கு வகிக்க வேண்டும் என்பதற்காக அன்றைய யாழ் மறைமாவட்ட ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை பொதுநிலையினராகிய எம்மை விசேட பயிற்சிக்காக திண்டிவனத்துக்கு அனுப்பிய காலப் பகுதியில் மறைப்பணியோடு இறைப்பணியையும் ஆற்றுவதற்காக இசையைக் கற்றுக்கொண்டேன். எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை வத்திக்கான் சங்கத்திற்குப் போகும் போதெல்லாம் இந்தியா வந்து எம்மைச் சந்தித்து விட்டுப் போவார். உங்களுக்கு என்ன தேவை என்று கேட்பார். நான் ஒரு தடவை எனக்கு ஓர் ஆர்மோனியப்




காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

பெட்டி வேணும் என்று கேட்டேன். அவர் இந்தியாவில் 300 ரூபாவிற்கு ஒரு ஆர்மோனியப் பெட்டியை வாங்கித் தந்தார். நான் பணியாற்றிய இடமெல்லாம் அதைக் கொண்டு சென்று பயன்படுத்தி அதை இன்னும் பத்திரமாக வைத்திருக்கிறேன். எனது குருமகன் அதில் கற்று அப்பணியை தொடர்ந்து ஆற்றுவது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. - என்றார்.

### குருமுதல்வர் உரை

குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் பேசும் போது -

யாழ் ஆயர்தான் இவ்விழாவிற்கு வருகை தர இருந்தார். ஆயர் அவர்கள் மறையாசிரியர் அந்தோனிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்திற்கு ஆற்றிய அனைத்துப் பணிகளுக்கும் நன்றி கூறும் விதமாக இவ் விழாவிற்கு வருகை தர இருந்திருக்கலாம். ஆனால் அவர் அவசரமாகக் கொழும்பு சென்றமையால்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்.

அந்தோனிப்பிள்ளை யூட் கறோவ் அ.ம.தி. அடிகளார் உண்மையில் ஒரு நல்ல பிரசங்கியார். அவரின் மறையுரைகளை நான் கேட்டிருக்கிறேன். அவரின் மறையுரையில் வேறு சிலரின் மறையுரைகளைப் போல் அலட்டலும் இருக்காது. திருப்பத் திரும்ப கூறலும் இருக்காது. - என்றார்.

### அடிகளாரின் ஏற்புரை

அந்தோனிப்பிள்ளை யூட் கறோவ் அ.ம.தி அடிகளார் தமது ஏற்புரையில் -

இக்காலம் இறுவட்டுகளுக்கான யுகமாக இல்லாதிருந்தும் எனது துறவற வாழ்வின் பல்வேறு சவால்கள் மத்தியிலும் என்னைப் பராமரித்து, பக்குவப்படுத்தி பாதுகாத்துவரும் இறைவனைப் புகழ, பாடல்களை பஜனைப் பாணியில் எழுதி, இசையமைத்து, மெருகூட்டியதன் வெளிப்பாடே இவ் இறுவட்டாகும்.

இவ் இறுவட்டின் வெற்றிக்கு உதவிய அனைத்து கலைஞர்களுக்கும் குறிப்பாக ஒலிப்பதிவை செய்த திரு ஜே.ஏ.யேசுதாஸ் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன். அனுமதி பெறப்பட்டுள்ளதால் இப்பாடல்களைத் திருவழிபாட்டில் பயன்படுத்தலாம். - என்றார்.

அந்தோனிப்பிள்ளை யூட் கறோவ் அ.ம.தி.அடிகளாரின் தொடர் பணி சிறக்க காலைக்கதிர் கிறிஸ்தவ அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

## முழு '13'ஐயும் மாகாணத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்துள்ள அவதான அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இந்தியாவின் பிரதிநிதி இவ்வாறு குறிப்பிட்டார்.

"இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை மிக முக்கியமான, கவனிப்புக்குரிய விடயங்களைக் கொண்டுள்ளது என இந்தியா கருதுகிறது" – என்றார் அவர்.

"அனைத்துப் பிரஜைகளினதும் அடிப்படை சுதந்திரம் மற்றும் மனித உரிமைகப் முழுமையாகப் பேணப்படுகின்றமையை உறுதிப்படுத்தும் விதத்தில் நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் உட்பட தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாசைகளை கவனத்தில் கொண்டு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைச் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாம் இலங்கைக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்."

"ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்கள் எதிர்பார்க்கும் சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவற்றை நிறைவு செய்வது இலங்கையின் சொந்த நலனுக்கு எப்போதும் உகந்ததாக அமையும் என இந்தியா கருதுகிறது.

"மாகாணசபை தேர்தலை விரைந்து, தாமதமின்றி நடத்துமாறும், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் உள்ளடங்கலாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது பற்றுறுதிக்கு அமைவாக நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கையை இந்தியா வேண்டுகின்றது" – இவ்வாறு இந்தியப் பிரதிநிதி அங்கு மேலும் தெரிவித்தார்.









மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை வளர்ச்சிக்கு உதவும் முகமாக Ride4Ceylon குழுமத்தினர் மற்றும் லண்டனைத் தளமாக இயங்கும் நண்பர் குழாமும் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்ட கொழும்பு – யாழ்ப்பாணத்துக்கிடையிலான வருடாந்த சைக்கிள் ஓட்ட நிகழ்வு கடந்த 02 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றையதினம் மானிப்பாயை வந்தடைந்தது.

30 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு சைக்கிளோட்ட வீரர்களுடன் நடைபெற்ற இந்த நிகழ்வின் மூலம் சுமார் ரூபா 80 லட்சத்துக்கும் அதிகமான பணம் சேகரிக்கப்பட்டு வைத்தியசாலையின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது. தொடர்ச்சியாக 6 வருடங்களாக நடைபெற்ற இந்த நிகழ்வு வருகின்ற வருடங்களிலும் மேலும் கூடியளவிலான வீரர்களின் பங்களிப்பு மற்றும் நிதி சேகரிப்புடன் நடைபெறுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மேலதிக விவரங்களை www.ride4ceylon.com எனும் இணையத் தளத்தில் அறிந்துகொள்ளலாம்.




சொர்க்கம்
திருமண சேவை
இல.102/ A , பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.



| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| பிறந்த திகதி - 24.01.1990 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூராடம்<br>கி.பா - செவ் -<br>தகைமை - A/Level தொழில் - Canada Technician<br>எதிர்பார்ப்பு - யாழ்ப்பாணத்து மணமகள் | பிறந்த திகதி - 05.03.1994 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - கேட்டை கி.பா -<br>செவ் - 2ல் சூரி செவ் தகைமை - Diploma in Medical Administration தொழில் - Canada Team Leader எதிர்பார்ப்பு - உள்ளூர் உத்தியோக மணமகன் |
| பிறந்த திகதி - 30.01.1989 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சுவாதி<br>கி.பா - செவ் -<br>தகைமை - B.Com (Hons) தொழில் - Canada<br>எதிர்பார்ப்பு - உள்ளூர் அழகிய மணமகள் | பிறந்த திகதி - 30.11.1995 மதம் - இந்து<br>ஜாதி - P நட்சத்திரம் - பூரட்டாதி<br>செவ் - 7இல் சூரி செவ் தகைமை - BFA<br>தொழில் - எதிர்பார்ப்பு - அரச தனியார் மணமகன் |
| பிறந்த திகதி - 16.06.1991 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம் கி.பா -<br>செவ் - லக்கினத்தில் செவ் தகைமை -HND QS SLIATE<br>தொழில் - quantity surveyor<br>எதிர்பார்ப்பு - உள்ளூர் உத்தியோக மணமகள் | பிறந்த திகதி - 13.12.1993 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - கேட்டை செவ் - 12 இல்<br>தகைமை - LLB தொழில் - Lawyer Assistant<br>எதிர்பார்ப்பு - உள்ளூர் உத்தியோக மணமகன் |
| பிறந்த திகதி - 02.08.1990 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை<br>செவ் - 7 இல் தகைமை - Bsc, Qs Master Degree<br>தொழில் - quantity surveyor எதிர்பார்ப்பு - உள்ளூர் உத்தியோக மணமகள் | பிறந்த திகதி - 06.01.1990 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - அச்சுவினி<br>செவ் - லக்கினத்தில் தகைமை - BA (Hons-Spl)<br>தொழில் - Operation எதிர்பார்ப்பு - உள்ளூர் படித்த மணமகன் |

077 650 5097, 077 887 6969
தலைமை அலுவலகம் - கனடா - 0014166661855

சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
Reg.No:DS882
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை



தலைமைக் காரியாலயம்:-
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706

web:- sasikalearners.com
email:- sasikadrivingschool@gmail.com
உரிமையாளரின் தொடர்புக்கு: 0777 226 247/ 077 614 0361

கிளை நிறுவனங்கள் :-

| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|---|
| T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 | T.P:<br>021 225 2454<br>070 510 2484 | T.P:021 226 0999<br>071 755 0999<br>077 261 2446 | T.P: 021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | T.P: 021 224 5001<br>076 384 0684<br>077 934 6509 | T.P:<br>021 221 5472<br>070 301 3012 |


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.03.2022இல் வெளியிடப்பெற்றது.

சிறுகதை

கேணிப்பித்தன்

# ஆனந்த அனுபவம்

அவர் இருதலைக்கொள்ளி எறும்பாகித் தவித்தார். வாழும்போது மகிழ்ச்சியைத் தவிர வேறெதையும் அவர் காணவில்லை. கணவனின் குணாம்சங்களைப் புரிந்து அதற்கேற்பத் தன்னைப் பக்குவப்படுத்தி இருந்தாள் மனைவி அன்புமலர். அழகும் அன்பும் கொண்ட மாது அவள். அவருக்குக் கிடைத்த பொக்கிஷம். ஆளுக்காள் விட்டுக் கொடுக்காத இனிய தம்பதியினர். அவரின் மகிழ்ச்சியே தனது மகிழ்ச்சியாக ஏற்று கைப்பிடித்தாள். மலரவன் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர். நடந்தும், சைக்கிளிலும் பாடசாலைக்குச் சென்று வந்து கொண்டிருந்ததை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

குறைந்த சம்பளம் என்றாலும் சமாளிக்கக் கற்றுக் கொண்டார். அந்தக் கிராமத்தில் அவர்களது சிறிய நிலத்தில் பல் பயிர்த்திட்டத்தைச் செயற்படுத்தினார். சொந்தக் கிராமத்தைச் சொர்க்கமாக்கும் திட்டத்தை வீட்டுத்தோட்டச் செய்கைத் திட்டமாக்கி அதனைப் போட்டியாக செயற்படுத்தினார். பிள்ளைகள் சுறுசுறுப்பாக இயங்கினார்கள். அன்று மலரவன் பரபரப்பாக இருந்தார். மேற்கொண்டு படிப்பதா, முடியுமா? சமாளிக்கலாமா? யோசனையில் ஆழ்ந்திருந்தார். இப்படி என்ன யோசனை அவருக்கு? பக்கத்தில் வந்து விசாரித்தாள்.

‘மேல் வகுப்பு மாணவருக்கு கற்பிக்கும் திறனை வளர்த்தெடுக்கும் முயற்ச்சியில் ஈடுபட யோசிக்கிறேன்’ என்றார். ‘அதைப்பற்றித்தான் நானும் யோசித்தேன். உங்கட பேருக்குப்பின்னால் ஒரு பி.ஏ. பட்டம் கிடைத்தால் எனக்குப் பெருமைதானே’? அதனை அவர் எதிர்பார்க்கவே இல்லை. அப்படியே உறைந்து போனார்.

கேட்டதும் அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தார். ‘மலர்! உன்னைப் பற்றியே என் மனதில் கவலை. நான் படிக்க வெளியூர் சென்றால் எப்படிக் குடும்பத்தைச் சமாளிப்பாய்? அதுதான் கவலை.’

‘நீங்க ஏன் அதைப்பற்றியெல்லாம் இப்ப யோசிக்கிறீங்க, முதலில் ஏ. எல். பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துங்க’ மலர் தொடக்கி வைத்தாள்.

மலரவன் நெகிழ்ந்து போனார். பாடசாலையில் கற்பிப்பதும், பகல் உணவின்பின் சற்று ஓய்வும், பின்னர் மேலதிகமாகப் பிள்ளைகளுக்குப் படிப்பிப்பதும், முடிந்ததும் மண்வெட்டியுடன் தோட்டத்தில் வேலை செய்வதும் எனக் கஷ்டப்பட்டு உழைத்தார். குளித்து அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் மேல்வகுப்பு மாணவர்களுக்குப் பாடங்களை கற்பிக்க ஆயத்தப்படுத்துவதுமாக சுறுசுறுப்பாக இயங்கினார்.

தோட்டத்தில் கச்சான், சோளன், இடையிடையே மரவெள்ளியையும் பயிரிட்டிருந்தார். மழை தூறத்தொடங்கியதும் நிலத்தைக் கீறி முளைகள் வெளிவரத் தொடங்கின. பார்த்துப் பரவசம் அடைந்தார். மேரிமலர் தனது கணவனின் விடாமுயற்சிக்கு உந்து சகதியானாள். மாணவர்கள் உயர்தரப் பரீட்சை எடுத்தார்கள். மலரவன் அதே பரீட்சையை வேறு ஒரு நிலையத்தில் தனிப்பட்ட பரீட்சார்த்தியாகத் தோற்றினார். அவர் பரீட்சை எழுதியது யாருக்கும். தெரியாது. அவருக்கு மனதில் ஒரு அச்சம் இருந்தது மாணவர்களும் பரீட்சை எடுக்கிறார்கள். தானும் அதே பரீட்சையை எடுப்பதால் தான் சித்தியடையாதுவிட்டால்.....? பரவாயில்லை.

மாணவர்கள் சித்தியடைந்தால் அதுதான் வெற்றி. அந்தச் சந்தோசமே போதும். பரீட்சை முடிந்து வீட்டுக்கு வந்தார். மனைவிக்கு மட்டுந்தான் தெரியும். மேரிமலர் இதைப்பற்றி மூச்சே விடவில்லை.

விடுமுறை முடிந்து பாடசாலைகள் தொடங்கிவிட்டன. பாடசாலைகள் தொடங்கினால் நாடு எங்கிலும் ஒரே கலகலப்புதான். காலையில் வீதிகள் எங்கும் வெள்ளைக் கோலம் போட்டதுபோல் இருக்கும். சூரியக் குஞ்:சுகள் புறப்பட்டது போன்று காட்சியாகியது. அது மக்கள் உள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. பாடசாலையில் நாள்கள் விரைந்தன. உயர்தரப் பரீட்சை பெறுபேறு வந்துவிட்டது. அஞ்சல் அலுவலகத்தில் இருந்து பாடசாலைக்குரிய பெறுபேறு வந்துவிட்டது.

பிரித்துப் பார்த்ததும் துள்ளிப் பாய்ந்தார். தனது மாணவர்கள் திறமையாகச் சித்தியடைந்துள்ளமையை எண்ணி மகிழ்ந்தார். அதேபோல் அவர் மனதில் அமைதியற்ற நிலை தோன்றி அவரை வாட்டியது. பாடசாலைகளுக்கே முதலில் பெறுபேறு கிடைக்கும். அந்தப் பாடசாலையில் மலரவனே அதிபராகச் செயற்பட்டார். பயிற்றப்பட்ட பின் ஐந்து வருடச் சேவை முடித்தவர்கள் அதிபருக்கான போட்டிப் பரீட்சை எடுக்கலாம். மலரவன் அப்பரீட்சைக்குத் தன்னை ஆயத்தப்படுத்தி சித்தியடைந்தார். இன்று அப்பாடசாலையின் அதிபராகத் திறமையாக நடத்திச் செல்கிறார்.

வழமைபோல் பாடம் நடத்திக் கொண்டிந்தார். தபால்காரர் கடிதங்களைக் கொடுத்துச் சென்றார். கடிதங்களை ஒரு ஆசிரியர் வாங்கி அதிபரின் மேசைமேல் வைத்துவிட்டார். அது இடைவேளைக்கான நேரம். அதிபர் அலுவலகத்தினுள் வந்தார். கடிதங்களைத் தரம் பிரித்து அலுவலகக் கடிதங்களை வேறுபடுத்தி உரிய கோவைகளில் திணித்தார். தனக்கு வந்த கடிதத்தை தனிமையில் பிரித்தார். அது தான் எடுத்த உயர்தரப் பரீட்சை பெறுபேறுதான். அதனை மனைவி மேரிமலரிடம் சொல்வதற்காக எழுந்து சைக்கிளில் விரைந்தார். வீடு அண்மையிலேயே இருந்தது.

பாடசாலைக்குச் சென்றால் ஏதும் அவசரம் என்றால் மட்டுமே வீடு வருவார். வீட்டில் மேரிமலர் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தார். எங்கிருந்து வந்தது அவருக்கு அந்தத் தைரியம். அப்படியே மனைவியை அலக்காகத் தூக்கிக் கொண்டாடினார். ‘மலர் உனது ஊக்கத்தால் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தேன். பல்கலைக்கழகம் கிடைக்கும். நான் படிக்கச் சென்றால் எப்படிக் குடும்பத்தைக் காப்பாற்றுவாய்’? அவர் கண்கள் குளமாயின.

மேரிமலர் தைரியமானவர் என்பதை மலரவன் உணர்ந்திருந்தார். ‘என்னங்க நீங்க. இதற்காகத்தானே இவ்வளவு காலமும் காத்திருந்தேன். உங்கட பேருக்குப் பின்னால் பி.ஏ. பட்டம் அடையாளமாக பிரகாசிக்க வேண்டும். அதற்காக நான் எதையும் எதிர்கொள்ளத் தயாராகிவிட்டேன். எப்ப பல்கலைக்கழகத்தில் இருந்து கடிதம் வரும்.’?

மனைவியின் பதில் மலரவனைத் திருப்திப்படுத்தினாலும் அவர் உள்ளத்தில் கவலையை ஊன்றிவிட்டது.

யாவுமாகி விஸ்வரூபமாய் நிறைந்திருந்தாள். மனைவி வெறும் போகப்பொருள் என்ற கருத்து எங்கோ மறைந்து விட்டது. சைவசித்தாந்தம் இறைவனை அர்த்தநாரீஸ்வரன் என்று கூறும். ஆண் பாதி, பெண் பாதியாக விளங்குவதாக ஐதீகம். அதனை சிவனும், சக்தியும் என அழைப்பார்கள். நமது உடலின் அமைப்பும் அவ்வாறே உள்ளது. வலப்பக்கம் தூய்மையான செவ்விரத்தம் ஓடுகிறது. இடப்பக்கமாக நீலநிறமாக ஓடுகிறது. இதயம் சுத்திகரிக்கும் இயந்திரமாக இயங்குகிறது. இந்த இதயம் இயங்கும்வரைதானே எல்லா ஆட்டமும்.

மலரவன் மனதில் தத்துவம் உருண்டோடியது. மனைவி கொடுத்த தேநீரைக் குடித்தார். அப்படியே பாடசாலைக்குச் சென்றார். தான் பல்கலைக்கழகம் சென்றால் பாடசாலையை நடத்த அதிபர் வேண்டும். அதற்குரிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினார். பாடசாலையில் இருந்து பரீட்சை எடுத்தவர்களில் பதினைந்துபேர்களில் பதின்மூன்று பேருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கிடைத்துவிட்டது. மற்ற இருவருக்கும் கல்வியியல் கல்லூரியில் இடம் கிடைத்து விட்டது. மலரவன் மகிழ்ச்சியில் ஆழ்ந்துவிட்டார். அவருக்குப் பேராதனை பல்கலைக்கழகம் கிடைத்திருந்தது.

‘நீ என்னவாக ஆகவேண்டும் என்று எண்ணிச் செயல்படுகிறாயோ அப்படியே ஆகுவாய்’. என்று விவேகானந்தர் கூறினார். கொழும்பு கல்வி அமைச்சின் அலுவலர்களின் ஆலோசனையின் பேரில் கண்டிக்கு இடமாற்றம் பெற்று பாடசாலை ஒன்றில் கடமையேற்றார். அவர் இடமாற்றத்தில் சென்றுவிட்டார் என்றே ஊரார். உரிய விண்ணப்பப்படிவத்தை நிரப்பி இரண்டு வருடக்கடமை லீவுக்கு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தார்.

கற்பித்தலை நன்றாகவே செய்தார். நல்ல நண்பர்களையும் பேராசிரியர்களின் அன்பையும் தேடிக் கொண்டார். சனி, ஞாயிறு, விடுமுறை நாள்களில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களையும், கல்வியையும் தொடர்ந்தார். அவர்களையும் தனது பாடசாலைக்கு அழைத்து அவர்களைக் கௌரவித்தார். பேராசிரியர்களும், பல்கலைக்கழக மாணவ நண்பர்களும் பாடசாலைக்கு வந்து கற்பித்தலில் உதவினார்கள். இது ஒருபுதிய அணுகுமுறையாகும்.

மலரவன் கற்பித்த பாடசாலை மிகப்பின்தங்கிய பெருந்தோட்டப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை. ஒரு வசதியும் இல்லாத பாடசாலை. ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை நிலவியது. இந்த நெருக்கடியான நிலையில் மலரவன் துவண்டு போனார். உயர்கல்வியைத் தொடரும், அதேவேளை பாடசாலைப் பிள்ளைகளின் கல்வியிலும் கவனம் செலுத்தினார். க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் பத்துப் பிள்ளைகள் திறமையாகச் சித்தியடைந்தனர். பெற்றோரும், ஊர்சனங்களும் பாடசாலையில் கூடி அதிபரையும், ஆசிரியர்களையும் பாராட்டினார்கள். விடுமுறை காலம் வந்தது. மலவரனின் பட்டப்படிப்பும் முடிந்து பெறுபேறும் வந்து விட்டது.

தான் பி.ஏ.பரீட்சையில் சித்தியடைந்தமையை மனைவிக்கு அறிவித்தார். அது நவீன காலம் இல்லை. கடிதம் மூலம் செய்திகளை அனுப்புவார்கள். ஒரு கிழமையின்பின் மனைவியின் கடிதம் கிடைத்தது.

திரு.மலரவன், பி.ஏ. அதிபர், என முகவரி எழுதியிருந்தாள். முதன் முதல் எனது மனைவியே எனக்கு பி.ஏ. பட்டத்தை எழுதி அனுபவித்து அனுப்பியுள்ளாளே. அவள் கண்ட கனவை உண்மையாக்கி விட்டேன். அவர் அழுதேவிட்டார். கடிதத்தில் அவளின் ஆதங்கங்களை கொட்டி எழுதியிருந்தாள்.

பெண் ஒரு போகப் பொருளல்ல. சாதனை படைக்க வந்த சக்தி. அவளுடைய பாராட்டுக்கள் மலரவன் உள்ளத்தை நிரப்பியது. ஒரு பெண் நினைத்தால் சாதனை படைப்பாள். இந்த உலகத்தில் புளோறன்ஸ் நைரிங்கேள், ஹெலன் கெல்லர், அன்னை தெரேசா வரிசையில் எனது மலரையும் சேர்க்கலாம். எனது உயர்வுக்காகத் தன்னை உருக்கித் தியாக தீபமாக விளங்குகிறாளே! அவரது கண்கள் கசிந்தன.

# அழகு என்பது தோற்றம் அல்ல குணாதிசயங்களைச் சார்ந்தது



பெண்ணுடைய ஆளுமையில் எத்தனையோ அம்சங்கள் இருக்க, அவளுடைய தோற்றத்துக்கு மட்டும் முக்கியத்துவம் தரும் அழகு ஆணின் கண்ணோட்டத்தில் பெண்ணின் மீது காலங்காலமாகச் சுமத்தப்பட்டு வருகிறது.

அழகு என்பது, பிறரை நேசிப்பது, மதிப்பது, திறமைகளை வெளிக்கொணர்வதில்தான் இருக்கிறது. அழகு என்பது தோற்றத்தை அல்ல, குணாதிசயங்களைச் சார்ந்த ஒன்றாகும்.

அழகு என நாம் பொதுவாகக் கருதும் பல அம்சங்கள் இயற்கையில் அமைந்தவை. அந்த அழகை மெருகேற்றிக்கொள்வது சாத்தியம்தான் என்றாலும், அடிப்படையான அம்சங்கள் பிறவியிலேயே தீர்மானிக்கப்பட்டு விடுகின்றன. ஒவ்வொருவர் பார்வையிலும் அழகு என்பது வேறுபடும் என்றாலும் பெண்களிடத்தில் சில அம்சங்களை அழகு என இந்தச் சமுதாயம் பொதுவாக வரையறுத்து வைத்திருக்கிறது.

உயரம், நிறம், முக அமைப்பு, கண்கள், மூக்கு, உதடுகள், உடல் வாகு, மெல்லிடை, பிற உடல் உறுப்புகள் போன்றவற்றை வைத்துத்தான் இந்தச் சமுதாயம் பெண் அழகை வரையறுக்கிறது.


அழகை ரசிப்பதிலோ, ஆராதிப்பதிலோ தவறில்லை. சொல்லப்போனால் அது இயல்புதான். அழகுணர்ச்சி என்பது நம் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கும்.

இயல்பான அழகாக இருந்தாலும் அது பெரிதும் இயற்கையின் கையில்தான் இருக்கிறது. இதையெல்லாம் தெளிவாகப் புரிந்துகொள்பவர்கள் மாயையான அழகையும் தேட மாட்டார்கள்.

அழகை வைத்துப் பெண்களை மதிப்பிடாதீர்கள். அழகு என்பது முகத்தில் இல்லை, உள்ளத்தில் இருக்கிறது.

# “எதை நாம் அடையும்போது அளவில்லா ஆனந்தம் தோன்றுகிறதோ அதுவே நம் சாதனையாகிறது”

**Salon Lena அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் ரூபாஜினி துரைராசா உடனான நேர்காணலிது.**



ரூபாஜினி துரைராசா
உரிமையாளர்
Salon Lena அழகுக்கலை நிறுவனம்

### ☑ உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் ரூபாஜினி துரைராசா. நான் யாழ்ப்பாணத்திலுள்ள Salon Lena அழகுக்கலை நிலையத்தை நடாத்தி வருகின்றேன். எனது உயர்தரத்திற்கு பின்னர் அழகுக் கலைத் துறைக்கான கற்கையில் ஈடுபட்டேன். தற் போது NVQ level 6 மற்றும் BSc in Cosmetology கற்கையை தொடர்ந்து வருகின்றேன்.தற்போது முழுமையாக இந்த துறையில் ஈடுபட்டு ஏராளமான பிரத்தியேக வாடிக்கையாளர்களையும் இணைத்தக்கொண்டு வெற்றிகரமாக எனது தொழிலை செயற்படுத்தி வருகின்றேன்.

### ☑ அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

அழகுக்கலைத்துறையில் என்னை ஈடுபடுத்திக்கொள்வது ஆரம்பத்தில் எனக்கு பிடிக்கவில்லை. எனது பாடசாலைக் கற்கையை நிறைவு செய்த பின்னர் என்னுடைய தாய் கேட்டு கொண்டதற்கிணங்க இதனைப் பற்றி கற்க ஆரம்பித்தேன். அழகுக் கலைத்துறை என்பது வெறுமென அழகுபடுத்துவது என்றே நினைத்த எனக்கு அதில் ஆழமான விடயங்கள் நிறைய இருக்கின்றன என்பது கற்கும்போது தான் புரிந்தது. மிகவும் ஆர்வமாக அழகுக்கலைத்துறையை கற்க ஆரம்பித்தேன். கற்கும் போதே என்னுடைய துறை இதுதான் என்பதை நான் யூகித்துக்கொண்டேன். ஆகவே என்னை நான் வளர்த்தெடுக்க இதிலேயே இன்னும் நிறைய விடயங்களை தேடி படிக்கவேண்டுமென்ற ஆர்வம் எனக்குள் தோன்றியது. இப்படி புதுப் புதுவிடயங்களைத் தேடி தேடி கற்கும்போது தான் என்னை அறியாமலேயே முழுமையாக அழகுக்கலைத்துறையில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். கற்கும்போதே நிறைய ஓர்டர்களும் வந்தன. அதனை திருப்திகரமாக செய்து வாடிக்கையாளர்களிடம் நன்மதிப்பை பெற்று எனது சொந்த முயற்சியில் ஒரு அழகுக்கலை நிலையத்தை தற்போது வெற்றிகரமாக நடாத்திவருகின்றேன்.

### ☑ இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?

ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து தனது சொந்தமுயற்சியில் ஒரு சுயதொழிலை செய்யும் போது ஏதாவதொரு விதத்தில் எதிர்ப்பை காட்டும் ஒரு சமூகத்தில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சமூகத்தில் இவற்றிற்கெல்லாம் முகங்கொடுத்து தொடர்ந்து வெற்றிகரமாக நம்மை நிலைநிறுத்திக்கொள்வது என்பது பெரிய சவால்தான். இதனை தவிர நான் எதிர்கொள்ளும் சவால் என்று பார்க்கும்போது நான் படித்துக்கொண்டேதான் என் தொழிலை செய்துகொண்டு வருகிறேன். அன்றாட எனது வேலைகளை கவனித்துக்கொண்டும் படித்துக்கொண்டும் வேலைப்பளு அதிகமாக இருந்தாலும் எனது கடமைகளை சரிவர செய்யவேண்டியது எனக்கொரு சவாலாகவே உள்ளது. படிப்போ வேலையோ என்னைப் பொருத்தமட்டில் இரண்டும் சமனாக இருக்வேண்டும்.



### ☑ அழகுக்கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..

வாய்ப்புகள் என்று பார்க்கும்போது எனக்கு கிடைக்கும் வாய்ப்புகள் என் சேவைக்காக என்னை தேடிவருவதாகும். அழகுக்கலைத் துறையில் நான் புதுபுது விடயங்களை உள் நுழைக்கின்றேன். என்னை நானே update செய்து கொள்கிறேன் என்றுதான் கூறவேண்டும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் அழகுக் கலைத்துறையில் உள்ள நிறைய updateகள் இல்லை. அவற்றை நான் கொண்டு வருவதென்பது எனக்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கிறது. என்னுடைய சேவையில் திருப்தியடைந்த என் வாடிக்கையாளர்கள் மூலமாகவே எனக்கான வாய்ப்புகள் என்னை தேடி வருகின்றன என்றே கூறவேண்டும். சாதனை என்பது நாம் அடைவதில் தான் இருக்கிறது. அப்படி எதை நாம் அடையும்போது அளவில்லா ஆனந்தம் தோன்றுகிறதோ அதுவே நம் சாதனையென்று கூறலாம். அப்படி நான் அடைந்த அல்லது தற்போது அடைந்துகொண்டிருக்கும் சாதனையென்றால் எனது திறமையை நம்பி என்னைத் தேடி வரும் வாடிக்கையாளர்களையே நான் கூறுவேன். அதிலும் என்னிடம் வரும் வாடிக்கையாளர்கள் மன திருப்தியோடு செல்லும்போதுதான் எனக்குள் ஒரு மகிழ்ச்சி தோன்றுகிறது. இதனையே நான் ஒரு சாதனையாகப் பார்க்கின்றேன்.

### ☑ சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.

பெண்களாகிய நாம் நமக்கு பிடித்த துறையை தேர்ந்தெடுத்து செய்யும் போது எப்போதும் எதிர்க்கும் சமூகம் ஒன்று எங்களைச் சுற்றி இருக்கிறது. அவர்களுடைய எதிர்மறையான மற்றும் தாழ்வான கருத்துக்களில் துவண்டு போகாமல் நம்முடைய வேலையிலேயே கவனமாக இருக்கவேண்டும். நேர்மையாக நம் கடமைகளை பொறுப்பேற்க வேண்டும்.சாதிக்க நினைக்கும் என்னைப் போன்ற பெண்களுக்கு நான் இதைத்தான் கூறுவேன். இந்த சமூதாயத்தின் கண்ணோட்டத்தில் நாம் எப்படியிருக்கிறோம் என்பது தான் ஒரு கேள்வி. ஆனால் நம்மை பொறுத்தவரையில் நாம் எப்படியிருக்கிறோம் என்பதை விட என்ன செய்கிறோம் என்பதில் தான் நம்முடைய வெற்றியே தங்கியுள்ளது. பிடித்ததை நேர்மையாகவும், முயற்சியோடும் செய்தால் அனைவரும் வெற்றியாளர்கள் தான்.





# சரும வறட்சியைத் தடுக்க வேண்டுமா?





**வெண்மையான பற்களுக்கு**

வாழைப்பழத்தில் ஏராளமான ஊட்டச்சத்துக்கள் இருக்கின்றன. அதன் தோல்களுக்கு பற்களை வெண்மையாக்கும் சக்தி இருக்கிறது. தினமும் இரண்டு முறை வாழைப்பழத் தோலை பற்களில் சில நிமிடங்கள் தேய்த்து வரலாம். அதில் இருக்கும் பொற்றாசியம்,மங்கனீசு மற்றும் மக்னீசியம் போன்ற தாதுக்கள் பற்களால் உறிஞ்சப்படும். அவை வெண்மை நிறத்தை தக்கவைத்துக்கொள்வதற்கு உதவும்.

**பித்த வெடிப்பு குணமாக**

மருதாணி இலைகளை நன்றாக அரைத்து பித்த வெடிப்பு உள்ள இடங்களில் தேய்த்து உலர விடவேண்டும். பின்னர் தண்ணீரில் கழுவி வர நாளடைவில் பித்த வெடிப்பு குணமாகும்.

**முகச்சுருக்கம் நீங்கி இளமையான தோற்றம் பெற**

அவகாடோ பழத்தைத் தோல் நீக்கி, மிக்ஸியில் அடித்துக்கொள்ளுங்கள். முகத்தை நன்கு கழுவிய பிறகு அந்த அவகாடோ பசையை முகம் முழுக்க பரவலாகப் பூசுங்கள். 15 நிமிடங்கள் கழித்து கழுவிவிடுங்கள். இரண்டு நாள்களுக்கு ஒருமுறை இதைச் செய்துவந்தால்,



முகச்சுருக்கம் நீங்கி இளமையான தோற்றம் பெறலாம்.

நன்றாகப் பழுத்த பப்பாளியை மசித்து முகத்தில் தடவவும். 20 நிமிடங்கள் கழித்து முகத்தைக் கழுவவும். பப்பாளி சருமத்தில் உள்ள இறந்த செல்களை நீக்கி சுத்தப்படுத்தும்.

அதேபோல் முகத்தின் நிறத்தை அதிகரிக்க ஒருதேக்கரண்டி தோடம்பழத் தோல் பொடியுடன் இரண்டு தேக்கரண்டி தயிர் சேர்த்து அதை முகத்தில் சமமாக தடவி அரை மணி நேரம் கழித்து சுத்தமான நீரில் கழுவவும். இது நிறத்தை அதிகரிக்க உதவும்.

ஜாதிகாய்த்தூளுடன் சந்தனத்தூளைச் சம அளவில் எடுத்துக் கொண்டு, அதனுடன் சிறிது கஸ்தூரி மஞ்சள்தூள் கலந்து முகத்தில்பூசி, 20 நிமிடங்கள் கழித்து முகத்தைக் குளிர்ந்த நீரால் கழுவவும். இப்படித் தொடர்ந்து செய்தாலும் கரும்புள்ளி காணாமல்போகும்.



# எழில் கதிர்



# கோடைக் கால சருமப் பிரச்சினை



கோடைக் காலம் வந்துவிட்டது இனி பெரும்பாலானோர் அவதிப்படும் ஓர் சரும பிரச்சினை என்றால் அது முகப் பருக்கள் தான். பொதுவாக எண்ணெய் பசை சருமத்தைக் கொண்டவர்கள் தான் இந்த பிரச்சினையால் அதிகம் அவஸ்தைப்படுவார்கள். முகம், மூக்கு, முதுகு, மார்பு மற்றும் தோள்பட்டை ஆகிய பகுதிகளில் பருக்கள் வருகின்றன. நமது தோலின் சுரப்பிகள் எண்ணெய் அல்லது மெழுகு போன்று இருக்கும் சீபமை உற்பத்தி செய்கின்றன. சீபம் அதிகமாகும் போது முகத்தில் பருக்கள் வருகின்றன. பொதுவாக பெண்களுக்கு அவர்கள் பருவம் அடையும் போது முகப்பருக்கள் வருகின்றன.

ஆனால் அசுத்தமான காற்று மற்றும் மோசமான பருவநிலைகள் இருந்தால் எந்த வயதிலும் யாருக்கும் முகப்பருக்கள் வரலாம். முகப்பரு இருக்கும் பகுதியைச் சுற்றி சிவப்பாக இருக்கும். பின் அந்த இடத்தில் வீக்கம் ஏற்படும். ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் முகப்பருக்களைக் உடைக்கக்கூடாது அல்லது கிள்ளக் கூடாது. அவ்வாறு செய்தால் முகத்தின் மற்ற பகுதிகளிலும் பருக்கள் பரவ வாய்ப்பாக அமையும்.

தாடையில் பருக்கள் வருவதற்கு காரணம் நமது உடலில் உள்ள ஹார்மோன்களில் ஏற்படும் மாற்றங்கள் ஆகும்.

பெண்களுக்கு மாதவிடாய் வருவதற்கு சில நாள்களுக்கு முன் தாடைகளில் பருக்கள் ஏற்படும். நமது உடலில் உள்ள ஹார்மோன்களை சீராக வைத்திருக்க வேண்டும். அவ்வாறு சீராக வைத்திருக்க வேண்டும் என்றால் நல்ல ஆரோக்கியமான உணவுகளை உண்ண வேண்டும். ஹார்மோன்கள் சமச்சீராக இல்லை என்றால் தாடைகளில் பருக்கள் தோன்றும். ஆகவே நமது தாடைகளை நன்றாக பராமரிக்க வேண்டும். மேலும் அடிக்கடி நமது தாடைகளைத் தொடக்கூடாது.

கன்னங்களில் பருக்கள் தோன்றுவதற்கு முக்கிய காரணம் மாசு நிரம்பிய காற்று ஆகும். நமது சருமம் நீண்ட நேரம் அசுத்தமான காற்று இருக்கும் இடங்களில் இருந்தால் நமது கன்னங்களைச் சுற்றி பருக்கள் உருவாகும். கன்னங்களில் உள்ள தோல்கள் மிகவும் உணர்திறன் கொண்டவை. ஆகவே நாம் மாசடைந்த காற்றில் அதிக நேரம் இருக்கக்கூடாது. காற்றில் உள்ள தூசுகளில் இருந்து காத்துக் கொள்ள முகக்கவசம் அணியலாம். இரத்தத்தில் சர்க் கரையின் அளவு உயர்தல், சுவாச கோளாறுகள் மற் றும் சுத்தமில்லாமல் இருப்பது போன்றவையும் கன்னங்களில் பருக்கள் உண்டாவதற்கு காரணங்களாக இருக்கின்றன.

முன் நெற்றியில் பருக்கள் தோன்றுவதற்கு முக்கியக் காரணம் செரிமானக் கோளாறு ஆகும். செரிமான அமைப்பு சாயாக வேலை செய்யவில்லை என்றால் முன் நெற்றியில் பருக்கள் உண்டாகும். மேலும் கல்லீரலில் பிரச்சினைகள் இருந்தால்,தூங்குவதில் பிரச்சினைகள் இருந்தால் மற்றும் மன அழுத்தம் அதிகம் இருந்தால் முன் நெற்றியில் பருக்கள் உண்டாவதற்கு வாய்ப்புகள் உண்டு. நாம் நீர்ச்சத்துடன் இருந்தால் முன் நெற்றியில் பருக்கள் தோன்றாமல் பார்த்துக் கொள்ளலாம்.

மூக்கின் மேல் பருக்கள் இருந்தால் நாம் கண்டிப்பாக நமது இரத்த அழுத்தத்தை பாசோதனை செய்ய வேண்டும். உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய்கள் ஆகியவை மூக்கின் மேல் பருக்கள் தோன்றுவதற்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன. சுத்தமான மற்றும் ஆரோக்கியமான உணவுகளை உண்ணுதல் மற்றும் தினந்தோறும் யோகா பயிற்சிகளைச் செய்து வருவது போன்றவற்றை கடைப்பிடித்து வந்தால் மூக்கில் பருக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

பருக்களை நமது கைகளால் உடைத்து விட்டால் அவை நமது தோலில் வடுக்களை ஏற்படுத்தும். பருக்கள் வராமல் இருக்க வேண்டும் என்றால் நல்ல ஆரோக்கியமான உணவுகளை உண்ண வேண்டும். மேலும் நம்மை நாமே சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

நமது தோலின் வகைகளுக்கு ஏற்ப பலவகையான பருக்கள் உள்ளன. அதற்கு பல காரணங்கள் உள்ளன.

**ஹார்மோன் ஏற்ற இறக்கம்**

முகத்தில் வரும் கட்டிகள் முகப்பருக்களுக்கான அடையாளங்களாகும். முகப்பருக்கள் தோலின் எண்ணெய் சுரப்பிகளையும், மயிர்க்கால்களையும் பாதிப்படையச் செய்கின்றன. ஹார்மோன் ஏற்ற இறக்கம் காரணமாக, எண்ணெய் சுரப்பிகள் அதிக எண்ணெய் உற்பத்தி செய்வதால், துளைகள் அடைக்கப்படும் நிலை உண்டாகலாம். இதனை ஹார்மோன் கட்டிகள் என்று கூறுவர். ஹார்மோன் கட்டிகள் பெரும்பாலும் மூக்கு, தாடை மற்றும் முகவாய் பகுதியில் தோன்றும். மெனோபாஸ் காலகட்டத்தில் உண்டாகும் கட்டி ஹார்மோன் கட்டி வகையாகும்.

**குறைவான அளவு தண்ணீர் பருகுவது**

உங்கள் உடலில் அதிக அளவு கழிவுகள் இருந்தால், தினசரி அவற்றை வெளியாக்குவது அவசியம். உடலில் உள்ள கழிவுகளைப் போக்க சிறந்த வழி அதிக தண்ணீர் பருகுவது. சரும அணுக்கள் சீரான முறையில் செயல்பட போதுமான அளவு தண்ணீர் தேவை. குறைந்த அளவு தண்ணீர் பருகுவதால் உடல் எண்ணெய் உற்பத்தியை அதிகரித்து தானாகவே அவை பருக்கள் மற்றும் கட்டிகள் வடிவத்தில் முகத்தில் வெளிப்படுகிறது.

**சுத்தம் செய்யப்படாத தலையணை உறைகள்**

சுத்தம் செய்யப்படாத தலையணை உறைகளை தொடர்ந்து பயன்படுத்துவதால் பருக்கள் ஏற்படலாம். இரவு வேளைகளில் சருமம் மற்றும் தலைப் பகுதி எண்ணெய்யை வெளியேற்றும். தூங்கும் நேரம் என்பதால் இந்த எண்ணெய் வெளியேற்றத்தை தலையணை உறிஞ்சிக் கொள்ளும். இதனால் பருக்கள் ஏற்படும் வாய்ப்பு ஏற்படுகிறது.

**பால் பொருள்கள்**

பால் பொருள்கள் புரதச் சத்து இருப்பதால் அவை உடலுக்கு மிகவும் முக்கியம் என் பது அறியப்பட்டாலும், அதிக அளவு பால் பொருள்கள் உட்கொள்ளல் பருக்கள் உண்டாகக் காரணமாக உள்ளன. பால் பொருள்கள்,சரும துளைகளை அடைத்து, ஹார்மோன் உற்பத்தியை அதிகரித்து,பருக்கள் உண்டாகக் காரணமாக உள்ளது. ஆகவே பால் பொருள்களை முழுவதும் தவிர்க்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் அதனை உட்கொள்ளும் அளவில் கவனம் தேவை. அதிகரித்த அளவு பால் பொருள்கள் உட்கொள்ளல், சருமத்தில் கட்டிகள் மற்றும் பருக்களை உண்டாக்குகின்றன.

# சபரிமலை
# ஸ்ரீ ஐயப்பன் ரேடர்ஸ்

## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.

No. 315, Kandy Road, Kilinochchi.

**Tel:- 021 228 3701,076 307 8091**




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

**077 986 2476 - 077 983 8091** எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

**076 307 8091, 021 228 3701, 077 986 2470**

# பொறுப்புக்கூறலை வலியுறுத்துபவர்கள் தீவிரவாதிகளாக பார்க்கப்படுகின்றனர்!

## ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு



இலங்கையைப் பொறுத்தமட்டில் பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதும் உயிரிழந்த தமது அன்பிற்குரியவர்களுக்கான நீதியை நிலைநாட்டுமாறு கோருவதும் தீவிரவாதமாக நோக்கப்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கிளைக்கூட்டத்தொடரில் உரையாற்றிய போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வதற்கு அவசியமான அழுத்தங்களை அரசாங்கத்தின்மீது பிரயோகிக்குமாறு சர்வதேசத்திடம் வலியுறுத்தும் நோக்கில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோமற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் கடந்த திங்கட்கிழமை அதிகாலை ஜெனிவாவிற்குப் பயணமானார்கள்.

புதன்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரின்ஓரங்கமாகநடைபெற்ற கிளை கலந்துரையாடலில் பங்கேற்றுக் கொண்டு உரையாற்றிய எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோமேலும் கூறியவை வருமாறு-

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள எமது சகோதர நாடாளுமன்ற உறுப்பினரின் விடுதலையை வலியுறுத்தும் நோக்கிலேயே நாம் இங்கு வருகைதந்திருக்கின்றோம். இலங்கையின் சட்டத்தில் 'நீதிமன்ற அவமதிப்பு' குறித்து உரியவாறு வரையறுக்கப்படவில்லை என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளில் ஈடுபட்ட முன்னிலை அதிகாரியொருவரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், நிலைமாறுகாலநீதி நிலைவரம், அனைவராலும் பரவலாகப் பேசப்படும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் ஆகியன தொடர்பிலும் தெளிவுபடுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

ஒரேயொரு நாளில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச்சட்டம், ஆரம்பத்தில் பயங்கரவாதத்தை இல்லதொழிப்பதற்கான ஒரு தற்காலிக சட்டமாகவே கொண்டுவரப்பட்டது.

சந்தேகநபர்களைத் தன்னிச்சையாகக் கைதுசெய்வதும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல் 18 மாதங்கள் வரையில் தடுத்துவைப்பதும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு உதவும் என்று அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பங்களிப்புச்செய்தவர்கள் நம்பியபோதிலும், அது சாத்தியமாகவில்லை.

மாறாக, நாட்டில் பயங்கரவாதம் தீவிரமடைவதற்கும் மேலும் பல பிரச்சினைகள் தோற்றம்பெறுவதற்கும் இந்தச் சட்டம் வழிவகுத்துள்ளமையை வரலாற்று நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன. இந்தச் சட்டம் சிறுபான்மையினத்தவரின் உரிமைகளும் எமது நாட்டில் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டுவந்த சட்டத்தின் ஆட்சியும் மீறப்படுவதற்கு வழிவகுத்தது. பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் நிறைவேற்றப்பட்டு 4 வருடங்கள் கடந்ததன் பின்னர் நீண்டகால சிவில் யுத்தத்துக்குள் நுழைந்தது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அதனை முடிவிற்குக்கொண்டுவரவில்லை. மாறாக, அதனை மேலும் தீவிரப்படுத்தியது.

எவ்வித வேறுபாடுகளுமின்றி அனைத்துத் துறைசார் தரப்பினரும் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கான அந்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டார்கள். உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கம் வெளிக்காட்டிவரும் அசிரத்தை தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றத்தில் முக்கிய கேள்விகளை எழுப்பியமைக்காக நான் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படுவேன் என்ற அச்சுறுத்தலுக்குள்ளானேன். இன்றளவில் இலங்கையைப் பொறுத்தமட்டில் கிறிஸ்தவ தேவாலயங்களில் குண்டை வெடிக்கச்செய்து பெருமளவான உயிர்கள் பலியாவதற்குக் காரணமானவர்கள் தீவிரவாதிகளாக நோக்கப்படவில்லை. மாறாக அந்தத் தாக்குதல்கள் தொடர்பில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுமாறு வலியுறுத்துபவர்களும்அந்தத்தாக்குதல் சூத்திரதாரிகள் பற்றிய விசாரணைகளை முன்னெடுப்பவர்களுமே தீவிரவாதிகளாக நோக்கப்படும் நிலையுருவாகியுள்ளது.

அரசியல் ரீதியான தலையீடுகளின்றி பொலிஸார் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு இடமளிப்பது உள்ளடங்கலாக கட்டமைப்பு ரீதியில் உரியவாறான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதன் ஊடாகத் தீவிரவாதத்தை முறியடிக்கமுடியும்.

அண்மையில் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான முன்மொழிவுகளை முன்வைத்திருக்கின்றது. இருப்பினும் அந்தத் திருத்த முன்மொழிவுகள் 'பயங்கரவாதம்' என்பதற்குரிய வரைவிலக்கணத்தை வழங்குதல், சந்தேகநபர்களைத் தன்னிச்சையாகத் தடுத்துவைப்பதற்கு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் குறைத்தல் உள்ளடங்கலாக மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கக்கூடியவாறான சரத்துக்களைத் திருத்தியமைப்பதற்குத் தவறியிருக்கின்றன.

தமது மக்கள் தொடர்பில் நிறைவேற்றப்படவேண்டிய பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தவறியிருக்கும் நிலையில், அதனை மழுங்கடிப்பதற்கானதொரு முயற்சியாகவே இந்தத் திருத்த முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இன்றளவிலே இலங்கை ஜனநாயக ரீதியில் மாத்திரமன்றி பொருளாதார ரீதியிலும் சீர்குலைந்திருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு, இன மற்றும் மதரீதியான பிளவுகளை ஏற்படுத்தும் வகையிலான அரசியல் கலாசாரம், ரஞ்சன் ராமநாயக்க போன்று நியாயமான விடயங்களைப் பேசுபவர்கள்மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்தல் ஆகிய- வற்றை முன்னிறுத்தி இலங்கை மேற்கொள்ளும் பயணத்தைத் தடுத்துநிறுத்த வேண்டும். அதற்கு உங்களுடைய பங்களிப்பு அவசியம் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன். - என்றார்.

# வேறு நாடுகளின் நடுநிலையான மத்தியஸ்தம் இல்லாது சகலரும் ஏற்கும் அரசமைப்பை அரசு கொண்டுவராது!

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. ஆணித்தரம்



வேறு நாடுகளின் மத்தியஸ்தம் இல்லாது சகல மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசமைப்பை அரசாங்கம் கொண்டு வராது எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார். வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிற்குப் பிறகு வருகின்ற ஆட்சியாளர்கள் புதிய அரசமைப்பு சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று முயற்சி செய்தனர். அதன் தொடர்ச்சியாகத் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கான நிபுணர் குழு ஒன்றை நியமித்த போதும் அரசமைப்பு மாற்றம் ஒன்று வரும் என்று நம்பிக்கையில்லை. வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸைப் பொறுத்தவரை அரசியல் யாப்பு தொடர்பான நீண்டகால அனுபவம் உள்ள ஒருவர்.

ஆனால் சகல மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் அரசியல் யாப்பை இலங்கை அரசாங்கம் கொண்டு வராது. அதற்கு வேறு நாடுகள் மத்தியஸ்தம் வகித்து இன ரீதியாகத் தமிழர்கள் பாதிக்கப்படும் விடயங்களை வலியுறுத்துவதன் மூலமே தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசமைப்பு ஒன்று வருமே ஒளிய, இலங்கை அரசாங்கத்தால் எடுக்கப்படும் முயற்சியில் தமிழர்கள் இன ரீதியாக, கௌரவமாக வாழக் கூடிய வகையில் அரசமைப்பில் எந்தவொரு மாற்றமும் வராது என்பது என்னுடைய கருத்து எனத் தெரிவித்தார். (100)

# புதையல் தோண்ட முற்பட்ட நால்வர் முல்லையில் கைது!

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பளம்பாசி பிரதேசத்தில் புதையல் தோண்ட முற்பட்ட நால்வரை ஒட்டுசுட்டான் பொலிஸார் கைது செய்துள்ளனர். பளம்பாசி பிரதேசத்தில் புதையல் தோண்ட முற்பட்ட சந்தேகத்தில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்ட நால்வரை ஒட்டுசுட்டான் பொலிஸார் வியாழக்கிழமை இரவு கைது செய்தனர்.

மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த இருவர், புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர், நெடுங்கேணி சேனைப்பிலவைச் சேர்ந்த ஒருவர் என நால்வரைக் கைதுசெய்துள்ள ஒட்டுசுட்டான் பொலிஸார், அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

இவர்கள்புதையல்தோண்டுவதற்காக வந்துள்ளமையுடன் இவர்களிடம் வெற்றிலைப் பாக்கு, பழம், சாம்பிராணி போன்ற பொருள்கள் காணப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான ஒதிய மலை, தண்ணிமுறிப்பு பகுதிகளில் புதையல் தோண்டும் நடவடிக்கைகள் அண்மைக் காலத்தில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொவிட் தொற்றுக்குள்ளானோரில் 72 பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்!

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 72 பேர் தொடர்ந்தும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் மேலும் 81 கொரோனா நோயாளிகளுக்கான கட்டில்கள் மாத்திரமே காணப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். கொரோனா நோயாளிகளுக்காக வைத்தியசாலைகளில் 13 ஆயிரத்து 599 கட்டில்கள் ஒதுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவற்றில் இதுவரை 4 ஆயிரத்து 299 கட்டில்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன எனப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

# கொவிட்டால் இறப்பவர்களின் சடலங்களை மயானங்களிலும் அடக்கம் செய்ய அனுமதி!

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அனைத்து மயானங்களிலும் அடக்கம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்று(சனிக்கிழமை) சடலங்களை அடக்கம் செய்ய முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களின் சடலங்களை மட்டக்களப்பு - ஓட்டமாவடியில் மாத்திரமே அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 300**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 754.போருக்குப் பின்னாலான அரசியலால் தமிழ் மக்கள் தீர்வை எதிர்பார்க்கலாமா?

முதலாவது தீர்வைப்பற்றிப் பேசிக் கொண்டு எத்தனை கட்சிகள், வால்கள் இருக்கின்றன என தமிழ் மக்கள் கணக்குப் பார்க்க வேண்டும். அடுத்து இந்த வால்கள் எல்லாவற்றையும் ஓரளவாவது தீர்வொன்றை நோக்கி நிமிர்த்தலாமா எனப் பார்க்க வேண்டும். அதையடுத்து தமிழ் மக்கள் தாங்கள் இருக்கும் நிலையில் இருந்து தீர்விற்கான முன்னேற்றங்களை கணித்து, அவற்றை அமுல்படுத்த கட்சித் தலைவர்களை நிர்ப்பந்திக்க வேண்டும். தற்சமயத்தில் இடைப்பட்ட ஆளுமையான சமூக சிவில் கட்டமைப்புக்கள் இல்லாததால் அரசியல் தலைவர்களுக்கும் மக்களுக்குமிடையேயும் கூட ஒரு பாலம் இருப்பதாகப் படவில்லை. அவை பெரும்பாலும் ஊடகங்களின் மூலமே நடக்கின்றன.

இறைமையுள்ள தனிநாடான தமிழீழக் கோரிக்கையான வட்டுக்கோட்டை தீர்மானத்தைக் கைவிட்டு கூட்டமைப்பு மக்களிடம் சமஷ்டிக்கு (இரட்டை ஆட்சிக்கு) ஆணை கேட்டு அதனைப் பெற்றுக் கொண்டது. சிங்கள பேரினவாதமோ சமஷ்யை ஏற்காமல் ‘ஒரு நாடு; ஒரே சட்டம்; ஒற்றையாட்சி’ என முருங்கை மரத்திலேயே ஏறி நிற்கின்றது.

போரை நடத்திய சர்வதேசங்கள் – முக்கியமாக அமெரிக்கத் தரப்புக்கள் – தங்களது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழுத்தங்கள் தந்தார்கள். ஆக எந்த தீர்வு தருவார் என மஹிந்த போருக்கு முன்னும், அதன் முடிவிலும் கூறியிருந்தாலும், அதில் அவர் அக்கறை கொள்ளவில்லை. பேரினவாதத்தின் பிரதிநிதியாகப் பிரபாகரனை அழித்து, நாட்டை முற்றாக வென்று, இனிப் போக வேண்டிய சுபீட்சத்தைப் பற்றியே பீற்றினார். சர்வதேசம் மஹிந்தாவை சீனாவின் ஆதிக்கத்திலிருந்து வெளியே எடுக்க தீர்வுக்கான அழுத்தங்களைத் தர, ஒரு அரசியல் தீர்வை நோக்கி மஹிந்த கூட்டமைப்பினருடன் சில இணக்கப்பாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் தொடங்கி நடத்தினார். ஒரு தீர்வைத் தருவதற்கு தங்களின் மேல் சுமத்தப் படக்கூடிய போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பவை தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு பற்றிய பேரங்களும் முன்வைக்கப்பட்டன.

முள்ளிவாய்க்காலைப் பெரிதாக்காமல் கூட்டமைப்பினர் தீர்வுக்காக முன்னேற வேண்டும் என்பதும், மனித உரிமை மீறல்களைத் தங்களிடையே பேசித் தீர்க்கலாம் என்பதும் மஹிந்தவின் திட்டம். அந்த பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை வைத்து, இந்தியாவை அணுகி ஒப்பந்தத்தை அமுல்படுத்த ஆதரவு கேட்ட காலங்களில் சுமந்திரனும், மாவை சேனாதிராஜாவும் தாங்கள் 13 இற்க்கும் மேலானதற்கு மஹிந்தவிடம் பேசிக் கொண்டிருக்கிறோம், ஆதலால் 13 ஆம் திருத்தத்துக்காக மன்மோகன் சிங்கிடம் ஓட வேண்டிய தேவையில்லை, அது இந்தியா பெற்ற பிள்ளை, இந்தியாவே பார்த்துக் கொள்ளட்டும் என வசிஷ்ட முனிவர் போல நின்றார்கள்.

போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் சர்வதேச சமூகத்தால் எடுக்கப்படுபவை. அதனை மஹிந்தவும் அரசும் கவனிக்க வேண்டும். தீர்வுப் பொதி ஒன்றை தந்து ஏற்றுக்கொண்டால் மனித உரிமைகள், போர்க்குற்றங்கள் சம்பந்தமாக தாங்கள் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்காக அவற்றைக் கடைய மாட்டோம் என சமரசப்படுத்தினாலும், தீர்வுத் திட்டம் இழுபறியாகியது. வழமைபோல் அந்த அணுகுமுறைக்கு தமிழ்ப் புலம்பெயர் தரப்புக்களிடமிருந்து எதிர்ப்புகள் கிளம்பின.

போர்க்காலத்திலும் அதனைத் தொடர்ந்த நாள்களிலும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தமிழ் சிவில் சமூகங்களின் ஊடாக ஆளுமை பெற்றவராக இருந்தார். அவரும் மனித உரிமை மீறல்களையும் போர்க் குற்றங்களையும் சமரசம் ஏற்படுத்தி தீர்வுக்காக மஹிந்தாவுடனான பேச்சுவார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. அவற்றை மீறி கூட்டமைப்பு தீர்வு பற்றிப் பேசவில்லை. இந்தியாவை நாடவுமில்லை.

இந்தியா மஹிந்தாவின் அரசுக்கு தந்த அழுத்தங்களில் மாகாண சபைத் தேர்தல்களில் பங்கு பற்றினார்கள். பதவி ஏற்ற மாகாண அரசு துரதிர்ஷ்டவசமாக மாகாணசபை எவற்றை மாகாணத்திற்காக – போரின் பாதிப்பிலிருக்கும் மக்களின் வாழ்வாதாரத்திற்காக – செய்யக் கூடும் என்ற அதிகாரங்களை கையெடுக்காமல், இனப்படுகொலைத் தீர்மானம் நிறைவேற்றி தேசிய அரசியலிலும் சர்வதேசத்தோடும் அவர்களது பிரதிநிதிகளாக இயங்கியது.

### 755.இவை தீர்வுக்கு உதவினவா?

மாகாணசபையை அமுலாக்கி, அதிகாரத்தைக் கொடுத்தாலும் தமிழ் தலைவர்கள் அதனைத் தங்களது பிரிவினைக்குத்தான் ஆதரவாக செயல்படுத்துவார்கள் எனத் தனக்கு வசதியாக மஹிந்தா இவற்றைப் பாவித்து. சர்வதேச அழுத்தங்களை குறைத்து சீனாவுடன் மேலும் நேசக்கரம் நீட்டினார். போரை நடத்தி விடுதலைப் புலிகளை அழித்தும் மஹிந்தாவை, சீனாவிடமிருந்து விலத்திக் கொள்ள முடியாததால் அமெரிக்கா போர்க்குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் கையிலெடுத்து, மனித உரிமை மன்றில் தீர்மானங்களை ஊக்குவித்து, அனுசரணை தந்தது.

அந்த ரயிலில் தமிழ் மக்களின் தலைவர்களும் புலம்பெயர் சமூகமும் தங்களது தனித்துவ கொடிகளுடன் ஏறி தீர்வென்பது சர்வதேசத்திலிருந்து வரவேண்டுமென நடை நடையாய் அலைந்து கொண்டிருக்கின்றனர்.மனித உரிமைகள் மன்றின் மூலம் அடையக் கூடியவை எவை என தெளிவாக தெரிந்து, எவ்வகையான மனித உரிமை மீறல்களுக்கு அதனிடமிருந்து ஆதரவுகள் கிடைக்கும் என்பதையும் விட்டு, தனித் தமிழீழம் என்ற கோஷத்தில் இருந்த மாதிரி, நடந்தவை இனப்படுகொலையாகவே காணப்பட வேண்டும் என்ற கொடிகளை உயரப்பறக்க விடுவதால் மற்றவர்கள் ஏன் வம்பு என்று ஏனோ தானோ என அங்கு போவதும் வருவதுமாக இருக்கிறார்கள்.

சுவாமி தேரேறியதும் அதனை இழுப்பதற்கு தேர்வடம் பிடிப்பவன் ஒவ்வொருவனும் தன்னால்தான் தேர் அசைகிறது என்று நினைப்பதுண்டு. அப்படியான மனப்பாங்கில் இங்கு ரயிலேறிய எல்லோரும் தங்கள் பெட்டி முதல் சென்று வெற்றியீட்டிவிடும் என்று கருத்தாங்கள் செய்கிறாங்கள். இவர்கள் ஒரு யதார்த்தத்தை உணர்வதில்லை. ஐ.நா. செயலாளரால் தருஷ்மனின் குழு அறிக்கை தருவதற்கு உந்து சக்தியாக இருந்தவர்கள் சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International), மனித உரிமை கண்காணிப்பு மையம் (Human Rights Watch) போன்ற சர்வதேச மனித உரிமை குழுக்களே. ஸ்ரீலங்காவில் – முக்கியமாக போரின்போது – நடந்த அட்டூழியங்கள் கணக்கெடுக்கப்படாது விடப்படக்கூடாது என அவர்கள் நிர்ப்பந்தித்ததினாலேயே பயங்கரவாதத்தை ஒழித்ததற்கு மஹிந்தாவுக்குப் புகழாரம் சூட்டி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தீர்மானம் நிறைவேற்றிய பின்னும் மனித உரிமை கவுன்ஸிலுக்கு இவை பாரப்படுத்தப்பட்டன. ஆகவே இன்று தமிழ் மக்களுக்கு வரக்கூடிய தீர்வு சர்வதேசத்திலேதான் தங்கியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது. அதனை யதார்த்தமாக கையாள வேண்டிய பொறுப்புக்கள் அவர்களுக்கு உண்டு. தமிழ் மக்கள் தங்களது கோங்களாலும் தாம் நிறைவேற்றும் தீர்மானங்களாலும் கட்டுப்பாடுகள் விதித்து, சர்வதேசம் அவர்களுக்கு கட்டுப்பட்டு தீர்வுகள் தர வேண்டும் என்று நினைப்பது முள்ளிவாய்க்கால் போல் வினையாகவும் முடியலாம்.

(வளரும்)

# கடற்றொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்கக் கோரி தமிழ்நாடு முதல்வருக்கு வடக்கு மீனவர்கள் கடிதம்



(ந.லோகதயாளன், கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மார்.06

**நீடிக்கும் இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறும் கோரி வடக்கு மாகாண மீனவர் சங்க பிரதிநிதிகள் ஒன்றிணைந்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பவுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன தலைவர் அன்னராசா தெரிவித்தார்.**

தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு கடிதம் அனுப்புவது தொடர்பில் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இத. தொடர்பில் மேலும் விவரம் தெரிவிக்கையில் அவர் கூறியவை வருமாறு:–

இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு நோக்கி இரண்டு அரசாங்கங்களும் செயற்படவில்லை என்பது வடக்கு மீனவர்கள் மத்தியில் கவலையாக உள்ளது.

எனவே மீனவர்கள் போராடும் போதும், ஆர்ப்பாட்டம் செய்யும் போதும், பிரதேசசெயலகங்களை முற்றுகையிடும் போதும், மீனவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அத்தோடு இரண்டு அரசாங்கங்களும் தீர்வு பெற்றுத் தருவார்கள் எனக் காத்திருந்த போதிலும் தீர்வு பெற்றுக் கொடுப்பது என்பது பேசு பொருளாக மாத்திரமே காணப்படுகின்றது.

எனவே இன்றைய தினம் இலங்கைக் கடற்தொழிலாளர்களாகிய நாம் எமது கோரிக்கையை ஒரு வேண்டுகோளாகக் கடித வடிவத்தில் தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு அனுப்ப இருக்கிறோம். அதை பத்திரிகைகளும் எடுத்துச் செல்ல வேண்டும்.

தமிழ்நாடு மற்றும் எமது வட இலங்கை மீனவர்களுக்கிடையிலான தொப்புள் கொடி உறவுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாதவண்ணம் ஒரு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க இந்த கடிதத்தை மூலம் வேண்டுகிறோம்.

வடக்கு கடற்றொழிலாளர்களின் வேண்டுகோளாக இந்தக் கடிதத்தில் பின்வருமாறு கோரியுள்ளோம்.

வட இலங்கையின் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த – கடற்றொழிலில் தங்கியிருக்கும் – ஏறத்தாழ இரண்டு லட்சம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த வேண்டுகோளை முன்வைக்கின்றோம். முப்பது வருட கால யுத்தத்தினால் சொல்ல முடியாத துயரங்களையும் அழிவுகளையும் நாங்கள் சந்தித்திருந்தோம். யுத்தம் காரணமாக வெளி மாவட்டங்களிலும் தென்னிந்தியாவிற்கும் என தொடர்ச்சியான இடப்பெயர்வுகளையும் உயிர் மற்றும் உடைமை இழப்புக்களையும் சந்தித்திருந்தோம்.யுத்த காலத்தில் எமது சமூகத்திற்கு அடைக்கலம் தந்தமைக்குத் தமிழ்நாட்டு மக்களுக்கு முதற்கண் எமது நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

யுத்தத்திற்குப் பின்பு எமது வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்பக் கடுமையாக முயற்சித்த போதிலும், பல சவால்களையும் தோல்விகளையுமே நாம் சந்திக்க நேர்ந்தது. வருமானத்தின் வீழ்ச்சி மற்றும் பெரும் கடன் சுமை காரணமாக எமது இளந்தலைமுறை கடற்றொழிலையே கைவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. யுத்ததிற்கு பின்பான இந்த சமூக பொருளாதார சூழலுக்கான முக்கிய காரணம் தழிழ்நாட்டு இழுவைப் படகுகள்.

இந்த இழுவைப்படகுகள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி, வலைகளை அறுத்துச் செல்வதனால் பெரும் இழப்புகள் ஏற்படுகின்றன. மேலும் சொத்து இழப்புக்களைத் தவிர்க்க நாம் இழுவைப் படகுகள் வரும் நாள்களில் கடலுக்கு போகாமல் இருப்பதால் பெருமளவான வருமானத்தை இழக்கின்றோம். கடல் வளங்களைச் சுரண்டும் இழுவைமடிகளால் சிறு மீனவர்களின் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இழுவைமடி முறையால் வட இனங்கை மற்றும் தமிழ் நாட்டு சிறு கடற்றொழிலாளர்களின் எதிர்காலமே அழிக்கப்படுகின்றது.

இந்தப் பிரச்சினை இலங்கை கடற்றொழிலாளருக்கும் தமிழ்நாட்டு கடற்றொழிலாளருக்கும் இடையில் இருக்கும் வரலாற்று ரீதியான உறவையே பாதிக்கின்றது. இழுவைப் படகுகளை முற்றாக நிறுத்துமாறு இருநாட்டு கடற்றொழிலாளர்களுக்கும் மத்தியில் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோதிலும், அவற்றின் மூலமாக ஒரு தீர்வும் எட்ட முடியவில்லை.

உண்மையில் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு என்பது இரு நாட்டுக் கடலிலும் இழுவைப்படகு முறையினைத் தடை செய்வதாகும். எனினும் இந்த பிரச்சினையைத் தீரப்பதற்கான அரசியல் விருப்பு இரு நாடுகளின் மத்திய மற்றும் மாநில அரசியல் தலைமைத்துவங்களிடம் இருக்கவில்லை.

தாங்கள் முதலமைச்சராகப் பதவியேற்ற பின்பு தென்னிந்தியாவில் வாழும் இலங்கை தமிழ் அகதி மக்களுக்காக நீங்கள் முன்வைத்த தீர்வுகளை அறிந்த நாம் உங்களுக்கு எமது நன்றிகளை கூறக் கடமைப்பட்டுள்ளோம். உங்களுடைய இவ்வாறான – முற்போக்கான – பார்வையில் தமிழ்நாட்டு இழுவைப்படகுகளால் பாதிக்கப்படும் வட இலங்கை கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளையும்கவனத்தில்கொண்டு, இதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தீர்வுகளைப் பெற்றுத்தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். – என்றுள்ளது.

# தமிழ்நாடு முதல்வருக்கு அனுப்பும் கடிதத்தில் ஒப்பமிட மன்னார் மீனவர்கள் சங்கம் மறுப்பு!

## ட்றோலர் தடைக்கு இணங்க முடியாதாம்

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், மார்ச் 06

வடக்கு மாகாண மீனவர் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சருக்கு அனுப்பும் கடிதத்தில் உடன்பட மறுத்து மன்னார் மீனவ சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் இருந்து வெளியேறினர்.

வடக்கு மீனவர்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறும் கோரி வடக்கு மாகாண மீனவர் சங்க பிரதிநிதிகள் ஒன்றிணைந்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்ப முடிவு செய்யப்பட்டது. நேற்றைய தினம் வடக்கின் நான்கு மாவட்ட மீனவ சங்க பிரதிநிதிகளுக்கும் அகிலன் கதிர்காமர் மற்றும் சூசைதாசன் போன்றோருக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் நீண்ட நேர கலந்துரையாடல் இடம்பெற்று கடிதம் தயார் செய்யப்பட்டது.

இருந்த போதும் மன்னார் மாவட்டத்திலே 300 மேற்பட்ட ட்றோலர் படகுகள் உள்ள நிலைமையில் அந்த முறைமையினைத் தடை செய்ய வேண்டும் எனக் கோரும் கடிதத்தில் ஒப்பமிட முடியாது எனத் தெரிவித்து கூட்டத்தின் இறுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொள்ளாது வெளியேறினர்.

# இலங்கைக்குக் கடத்தப்பட இருந்த ரூ.2 கோடி ஏலம் படகுடன் சிக்கியது



(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், மார்ச் 06

தமிழ்நாடு தூத்துக்குடி மாவட்டம் விவேகானந்தா கொலனி கடற்கரையில் இருந்து நேற்று மாலை இலங்கைக்கு கடத்தப்பட இருந்த 2 கோடி ரூபா (இந்தியப் பணத்தில்) மதிப்புள்ள ஏலக்காய் கியூப் பிரிவு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டுப் படகில் 14 மூடை ஏலக்காய் இலங்கைக்கு கடத்தப்படுவதாக கியூப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று மாலை பொலிஸார் இவற்றை கைப்பற்றினர்.

கடத்தலுக்குபயன்படுத்தப்பட்டபடகை க்யூ பிரிவு பொல்லிஸார் கைப்பற்றியபோது படகில் எவரும் இருக்கவில்லை.

இதேநேரம் படகின் இலக்கத்தின் அடிப்படையில் படகு உரிமையாளர் உள்ளிட்டவர்களை பொலிஸார் தேடிவருகின்றனர்

# அதிக போதை மாத்திரைகளை உட்கொண்ட இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச். 06

யாழ்.தெல்லிப்பளை, கட்டுவன் மேற்கைச் சேர்ந்த 19 வயதுடைய கட்டடத் தொழிலாளி ஒருவர் போதை மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை போதை மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டதையடுத்து, அன்றிரவு உயிரிழந்துள்ளார். சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளைஞர் அதிகளவிலான மாத்திரைகளை ஒரே தடவையில் உட்கொண்டார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. விசாரணையின் போது இரண்டு போதை மாத்திரைகளை உட்கொண்ட மற்றையவரிடமும் வாக்கு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# கோட்டா - கம்மன்பில எதிர்பாராத சந்திப்பு!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விற்கும் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவிற்கும் இடையில் நேற்றுக் காலை எதிர்பாராத திடீர் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அநுராதபுரத்தில் எதிர்காலத்தைக் கணித்துக் கூறும் நடவடிக்கைகளில் பெயர் பெற்ற பெண்மணி ஒருவரின் இடத் தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

எனினும், இந்தச் சந்திப்பு தற்செயல் நிகழ்வு என்றும், சுமுகமான உரையாடல் மட்டுமே நடைபெற்றதாகவும் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை ஆட்சேபித்து மட்டக்களப்பில் கவனவீர்ப்பு!







ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை கண்டித்தும், ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களை நிறுத்தக் கோரியும் மட்டக்களப்பில் நேற்று கவனயீப்புப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் தொழிற்சங்கம் என்பன இணைந்து இந்த கவன ஈர்ப்புப் போராட்டத்து முன்னெடுத்தன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு.ஊடக அமையம் ஆகியவற்றின் தலைவர் வா.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த கவனஈர்ப்புப் போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன் உட்பட அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

அண்மையில் வந்தாறுமூலையில் செய்தி சேகரிக்க சென்ற ஐ.பி.சி தமிழ் ஊடகவியலாளர் தேவபிரதீபன் தாக்கப்பட்டமையை கண்டித்தும், ஊடகவியலாளர்களுக்கு காவல்துறை விசாரணையென்ற பெயரில் முன்னெடுக்கப்படும் அச்சுறுத்தல்களை நிறுத்தக்கோரியும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரிலுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் ஞாபகார்த்த தூபிக்கு அருகில் கவனயீப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், கண்டன ஊர்வலமும் நடைபெற்றது.

## கண்டியிலும் கையெழுத்து வேட்டை




பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக ஒழிக்க வேண்டும் எனக் கோரி கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை கண்டியிலும் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் கண்டி, ஜோர்ஜ் டி. சில்வா பூங்கா (டொரிங்டன்) முன்னால் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், இரா. சாணக்கியன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மூவின மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டுதத்தமது கையெழுத்துக்களைப் பதிவிட்டனர்.

இன்று ஹட்டனிலும், பண்டாரவளையிலும் இந்தக் கையெழுத்துச் சேகரிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீட்டுத் திட்ட வீடுகளின் உரிமையாளர்கள் இன்னமும் நிரந்தமாகக் குடியேறவில்லை!

### இப்படிக் கூறுகிறார் அங்கஜன் எம்.பி.

வீட்டுத்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட சுமார் 700 வீடுகளில் நிரந்தமாக மக்கள் குடியேறாத நிலை காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர் -

சில நடைமுறை சிக்கல்கள் உட்பட வீட்டுத்திட்டங்கள் தொடர்பாகப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் அவர் கூறினார்,

வீட்டுத் திட்டம் வழங்கப்பட வேண்டும் என்றால் அவர்கள் தங்களின் காணிகளில் குடியேற வேண்டும் என அதிகாரிகள் கூறுகின்றனர் எனவும் வீடுகள் இல்லாத காணிகளில் எவ்வாறு தாம் குடியேறுவது என மக்கள் கேட்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வீட்டுத் திட்டங்கள் முன்னர் வழங்கப்பட்ட பலர் வீடுகளையும் தமது காணிகளில் கட்டிவிட்டு அவர்கள் வேறு இடங்களில் வசிக்கின்றனர் என்றும் மேற்படி வீடுகளைத் தங்கள் 'விடுமுறை விடுதியாக' பலர் பயன்படுத்துகிறார்கள் என்றும் அவர் கூறினார். அத்துடன் வீட்டுத் திட்டத்துக்கு வழங்கப்படும் நிதி போதாது எனப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் தற்போதைய விலைவாசி அதிகரிப்பு இதற்குக் காரணம் என்றும் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

## கோட்டே மாநகர சபை ஊழியர் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

கோட்டை மாநகர சபை ஊழியர்கள் வெலிக்கடையில் உள்ள மேம்பாலத்தின் கீழ் பத்தரமுல்லை நோக்கிய வீதியைமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோட்டை மாநகர சபை ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் நீதி வழங்கப்படவில்லை எனக் குற்றம் சுமத்தி மேற்படி குழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கோட்டை மாநகர சபை ஊழியர் ஒருவர் வெள்ளிக்கிழமை வீதியில் குப்பைகளை சேகரிக்கும் போது மோட்டார் வாகனத்தில் வந்த ஒருவரால் தாக்கப்பட்டார் என ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பொலிஸில் முறைப்பாடு செய்த போதிலும் நீதி கிடைக்கவில்லை எனப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக நாவல வீதியின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மலையகப் பகுதிகளில் அதிகரிப்பு

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சுற்றுலா பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காக வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் அதிகமாக வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

இதனால் டெவோன், சென்கிளையார் உள்ளிட்ட நீர் வீழ்ச்சி பிரதேசங்களில் அதிகமான சுற்றுலாப் பிரயாணிகள் வருகை தருகின்றனர் எனவும் இதனால் தங்களுடைய சுற்றுலாத் துறைசார்ந்த தொழில்கள் வழமைக்கு திரும்பியுள்ளன எனவும் சுற்றுலாப் பயணிகள் வழிகாட்டியொருவர் தெரிவித்தார்.

அவர் கருத்து தெரிவிக்கையில் -

தற்போது அதிகமான சுற்றுலாப் பிரயாணிகள் வருகை தருகின்றனர் எனவும் தற்போது ஹோட்டல்களில் அதிகமான சுற்றுலாப் பிரயாணிகள் இருக்கின்றனர் எனவும் இதனால் தங்களுக்கு தொழில் சூடுபிடித்துள்ளதாகவும் டீசல் பற்றாக்குறை காரணமாகத் தங்களுக்கு சிறிய பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேநேரம் மலையகப் பகுதிக்கு வரும் சுற்றுலாப் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் நேற்று (சனிக்கிழமை) கண்டியிலிருந்து தெமோதர வரை அதிசொகுசு ரயில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ரயில் கண்டியிலிருந்து ஒவ்வொரு நாளும் காலை 7 மணிக்கு ஆரம்பமாவதாகவும், குறித்த ரயில் ஹற்றன், நானுஓய, எல்ல உள்ளிட்ட சுற்றுலாத் தலங்களை மையப்படுத்தி மாத்திரம் நிறுத்தப்படுவதாகவும் சுற்று பிரதேசங்களில் ரயிலை நிறுத்திப் படங்கள் எடுப்பதற்கும் மற்றும் பார்வையிடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் ரயில் நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார். இந்தப் பயணத்திற்காக முதலாம் வகுப்புக்கு 5 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் வகுப்புக்கு 4 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படுவதாகவும் குறித்த ரயில் பயணத்தில் வெளிநாட்டவர் மாத்திரமன்றி உள்நாட்டவர்களும் செல்லலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சாவகச்சேரி மின்சாரசபை இடமாற்றம்

சாவகச்சேரி கச்சாய் வீதியில் இயங்கிவந்த இலங்கை மின்சார சபையின் மின்பாவனையாளர் சேவை நிலைய காரியாலயம் மார்ச்மாதம் முதல் ஏ - 9 தேவாலயவீதி (நீதிமன்றம் முன்வீதி)க்கு மாற்றப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றத்துக்குள் அமெரிக்கர்கள் வருவதற்கு உதவிய எம்.பிக்கள் பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும்

### ஜே.வி.பி. வலியுறுத்து

அமெரிக்க பிரஜை ஒருவருக்கு நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைகளை வழங்குவதற்குப் பங்களித்த அனைவரும் நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க இதனைத் தெரிவித்தார்.

20 ஆவது திருத்தம், அமெரிக்காவிற்கு பங்குகளை விற்றமை, திருகோணமலை எண்ணெய் தொட்டியை இந்தியாவிற்கு வழங்குவதற்கு அரசாங்கத்தில் உள்ள அனைவரும் ஆதரவளித்தனர் என அவர் கூறினார்.

நாட்டைப் பாதுகாப்பதற்கும், அரச சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் முன்னர், இவற்றுக்கு எல்லாம் ஆதரவளித்த அனைவரும் பொதுமக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

மேலும் அமெரிக்கர்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழைவதற்கும் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்கு வழி வகுத்தவர்கள் இவர்களே என்றும் வசந்த சமரசிங்க குற்றம் சாட்டினார்.



தற்போதைய அரசாங்கத்துக்குள் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன எனவும் இவர்களுக்கு எதிராகப் பொதுமக்கள் ஒன்று திரண்டு வருகின்றனர் எனவும் வசந்த சமரசிங்க குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தமது பதவிகளையும் அரசியல் வாழ்க்கையைப் பாதுகாப்பதில் மட்டுமே கவனம் செலுத்தும் சிலரின் கருத்துக்களை கேட்டு மக்கள் ஏமாறக்கூடாது என்றும் அவர் கூறினார்.

# சுயாதீனமாக செயற்படுவற்கு அரசின் 16 எம்.பிக்கள் முடிவு!

கொழும்பு, மார்ச் 06

அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில உட்பட அரசாங்கத்தின் 10 பங்காளிக் கட்சிகளின் 16 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இருக்கத் தீர்மானித்துள்ளனர் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த பத்து கட்சிகளின் தலைவர்களும் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, விமல் வீரவன்ஸவின் கட்சியைச் சேர்ந்த 6 பேர், உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்காரவின் கட்சியைச் சேர்ந்த இருவர், அத்துரலியே ரத்தின தேரர், டிரான் அலஸ், கெவிந்து குமாரதுங்க, ஏ.எல்.எம்.அதாஉல்லா உள்ளிட்ட 16 பேர் சுயாதீனமாக இயங்கவுள்ளனர்.

அத்துடன், அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அரசியல் நடவடிக்கையை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கும், விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் 11 பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்ட கூட்டறிக்கையை வெளியிடுவதற்கும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறியமுடிகிறது.

# புலிப் போராளிக்கு ஆயுள் தண்டனை

கொழும்பு, மார்ச் 06

விடுதலைப் புலிகளின் முன்னாள் புலனாய்வுப் பிரிவுத் தலைவராகக் கருதப்படும் முத்தப்பனின் கீழ் செயற்பட்ட விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்று குற்றம் சுமத்தப்பட்ட தங்கவேலு நிமலனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

அதி சக்திவாய்ந்த இரண்டு கிலோ கிராம் வெடிமருந்துகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவருக்கு எதிராக மேலும் பல வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**மின்னஞ்சல் -**
kalaikkathiradvt@gmail.com
**தொலைபேசி இலக்கம் -**
**076 443 8622**

# சர்வதேச சமூகத்திற்கு பொய் கூறுகிறது அரசு

## மன்னிப்புச் சபை காட்டம்

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் செயற்திறனான முறையில் இயங்கி வருவதாக சர்வதேசத்திற்குக் காண்பிக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான அரசாங்கத்தின் பிரதிபலிப்பு, உண்மை நிலைவரத்துடன் ஒப்பிடுகையில் சர்வதேசசமூகத்திற்குக்கூறப்படும்விடயங்கள் பொய்யானவை என்றும் அச்சபை குற்றம் சாட்டியுள்ளது.

அனைத்து நடவடிக்கைகளும் சரியான முறையில் இடம்பெறுகின்றன என்பதை மனித உரிமைகள் பேரவைக்கும் ஏனைய உறுப்பு நாடுகளுக்கும் காண்பிக்க வேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் தெளிவாக இருக்கின்றது என்றும் அச்சபை சாடியுள்ளது.

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னமும் நீதி வழங்கப்படவில்லை என தெரிவித்து ஆவணப்படுத்தல் வடிவிலான அறிக்கையொன்றை சர்வதேச மன்னி ப்புச்சபை வெளியிட்டுள்ளது.

காணாமலாக்கப்படல் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களிடம் நடத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் முதலாம், இரண்டாம் கட்ட ஆய்வுகளின் மூலம் திரட்டப்பட்ட தகவல்களைக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிற்கு அடுத்ததாக உலகிலேயே அதிகளவான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவான இரண்டாவது நாடு இலங்கை என்றும் இதுவரை 6,259 வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும் இலங்கையில் கடந்த 1980 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தபட்சம் 60 ஆயிரம் அல்லது ஒரு இலட்சம் வரையிலான வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருக்கக்கூடும் என்று தாம் மதிப்பிட்டுள்ளதாகவும் அச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

